# ஐஸ்கிறீம் சிலையே நீதானோ?

**இராஜன் முருகவேல்**

**மின்னூல் ஆக்கம்:**

# முன்னுரை

தொடர்கதையை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதன் தலைப்பு அழகாக கொஞ்சம் கவர்ச்சியாக அமைய வேண்டாமா? கதையைப்போலவே.. இராஜன் முருகவேல் என்றால் யதார்த்தத்தை சொல்கிறவன் என்று சிலர் கூறினார்கள்.. ஆனால் பல இளைஞர்கள் “சுத்த போர்” என ஒதுக்குவதையும் கண்டிருக்கிறேன்.. எனக்கென்னவோ எமது புகலிட வாழ்வை.. நான் ஜேர்மனியில் வாழ்வதால் அந்த வாழ்வையாவது பதிவாக்க வேண்டும்.. அத்துடன் சிலதை கூறவேண்டும்.. சுவையாக கூறவேண்டும்.. மிகவும் எளிமையாக கூறவேண்டும் என ஆவல்.. அந்த முயற்சியில் வந்தவைதான் சிறுகதைகள்.. எனினும் இளஞர்களை அது சென்றடையவில்லை.. என்ன குறை..? அவர்களின் வயதுக்கேற்ற தீனி அங்கில்லையோ என்ற கேள்வி எனக்குள்..

மருந்து கொடுக்க சீனியைப் பாவிப்பதில் தவறில்லையே.. ?!!!

அதைப்போல தலைப்பும் அழகாக கவர்ச்சியாக வேண்டுமே? யாராவது.. யாழ் இணையத்தில் போடக்கூடியதாக.. “ஐஸ்கிறீம் சிலையே நீதானோ?” என ஒரு பனர் செய்துதாருங்களேன்.. இன்னும் ஒரு வாரம் பொறுக்கிறேனே?’

இப்படி ஒரு முன்னறிவித்தலுடன் யாழ்.கோம் ([www.yarl.com](www.yarl.com)) என்ற இணையத்தளத்திலே ஆரம்பமானதுதான் ‘ஐஸ்கிறீம் சிலையே நீதானோ?’ என்ற தொடர் கதை.

இக்கதை வளர்ந்து கொண்டிருக்கும்போது உடனுக்குடனேயே வாசிப்போரது கருத்துகள் எனக்குள் ஒரு உற்சாகத்தை ஏற்படுத்தியது. அதேவேளையில் யாழ்.கோம் கருத்துக் கள அங்கத்துவர்களான பரணி, இளைஞன், மூனா போன்றோர் ஒவ்வொரு அங்கங்களுக்கும் பனர்களை செய்து தந்தது மேலும் உற்சாகமளித்தது.

அத்துடன், சுதந்திரமாக நான் எழுத இடமளித்த யாழ்.கோம் நிர்வாகி திரு. மோகன் அவர்களுக்கும் மிகவும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

யாழ்.கோம் இணையத்தளத்தில் தொடராக வந்த இக்கதை தற்போது ‘தமிழமுதத்தில்’ மின்னூலாக வெளிவருகிறது. ஆக, இந்தக் கதையின் ஆக்கத்திற்கு உதவியளிப்பவர்களாக, உற்சாகமூட்டுபவர்களாக இருந்த எல்லோருக்கும் இத்தருணத்தில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

வணக்கம்.

அன்புடன்,

இராஜன் முருகவேல்.

6.02.2006




*(1)*

எவ்வளவுநேரந்தான் காத்திருப்பது?!

செக்கன்கள் நிமிடங்களாகி மணித்தியாலத்தை எட்டப்போகின்றது.

இன்னும் காணவில்லை. பொறுமை எரிச்சலைத் தந்தது. ‘போய்விடுவோம்‘ என நினைத்தாலும் மனம் வரவில்லை.

‘போன பிறகு வந்துவிட்டால்..?’

அது காத்திருப்பதைவிடக் கஸ்டமான காரியம்.

அதற்கும் பார்க்கக் காத்திருப்பதே மேல்.

‘வருவன்’ என்று சொன்னாளே..?!

வருவாளா..?!

இன்னும் கொஞ்சநேரம் பார்ப்போம்.

இப்படி மனதுக்குள் சொல்லிச்சொல்லியே இந்த சுழல் கதிரையில் உட்கார்ந்தவாறு, சுற்றிச்சுற்றியே ஒரு மணித்தியாலமாகப் போகிறது.

முன்னால் ஒளிர்ந்தவாறு இருந்த கணனித்திரையில் அவளது பெயருக்கு முன்னால் சிவப்பாகத்தான் அந்த அரைவாசி ‘மனிதப் பொம்மை‘..

வேறு சில பெயர்களின் முன்னால் பச்சையாக நிறம்காட்டிய பொம்மைகளை கைக்குள் இருந்த ‘எலி‘யை நகர்த்தி அமத்தப் பிடிக்கவில்லை.

அவளது பெயரின் முன்னால் உள்ள அந்த ‘பொம்மை’ எப்போது பச்சையாவது.. எப்போது பேசுவது..

வேறொன்றுமில்லை…

இன்று மெசன்சரில் வந்து பேசுவதாக நேற்று சொல்லியிருந்தாள். அந்த மெசன்சரிலுள்ள பெயர்களின் முன்னாலுள்ள இடுப்பளவு மனிதப் பொம்மைகளின் நிறத்தை வைத்து, குறிப்பிட்ட பெயருக் குரியவர் ‘ஒன்லைனா‘ அல்லது ‘ஓவ்லைனா‘ என்பதை அறியமுடியும்.

அவளது பெயருக்கு முன்னாலுள்ள பொம்மை சிவப்பாகவே இருந்தது… அவள் ஒன்லைனில் இல்லை.. சிலவேளை ‘புளொக்’ பண்ணிவிட்டு வேறு யாருடனாவது கதைக்கிறாளோ?!

‘புளொக்‘பண்ணினாலும் சிவப்பாகத்தானிருக்கும்.

ச்சீ... அப்படி இருக்காது..அவள் அப்படி ஏமாற்றமாட்டாள்..கடந்த மூன்றுமாதமாக பேசுகிறாள்.. அடிக்கடி வந்து பேசுகிறாள்.. பெரிய மனுசிபோல.. பருவ மங்கைபோல.. பச்சிளங் குழந்தைபோல.. மனந்திறந்து பேசுகிறாள்... அடிக்கடி ஒவ்வொரு செய்தியுடன் வந்து சலிப்பான பொழுதுகளை எல்லாம் பஞ்சாகப் பறக்கவைத்து.. கணனித் திரை ஒன்று முன்னால் இருக்கிறதே என்ற எண்ணத்தை இல்லாதொழித்து.. தனிமையில் சிரிக்கவைத்து எண்ணத்தில் வண்ணக்கோலமல்லவா காட்டுகிறாள்?!

அவளை மெசன்சரில் காணாதவேளைகள் கனமாக மனதுள் நெருடுவதை உணர்ந்து தவித்த பொழுதுகள் கணமான நிகழ்வுகள் தான் எத்தனை.. எத்தனை..?!

பிரின்ஸெசின்..

என்ன பெயர் இது?

‘‘ஏன் இந்த பெயருக்கு என்ன?’’

‘‘ஐயோ... ஒரு தமிழ்ப் பெயர் கிடைக்கலியா..’’

‘‘ம்.. போடா.. சும்மா எல்லாத்துக்கும் தமிழ் தமிழ் என்று...’’

‘‘நாங்கள் தமிழ்தானேடி... உன்ரை உண்மையான பெயரை மெசன்சரிலை போடலாந்தானே?!’’

‘‘அடப் பாவி.. நல்லாய் தெரிஞ்சவங்களுக்குத்தான் உண்மையான பெயர்.. மற்றவங்களுக்கு பிரின்ஸெசின்தான்...’’

‘‘ம்.. மற்றவங்களென்ன இளவரசர்களா?’’

‘‘லொள்.. **(lol)**’’

‘‘ஐயோ... என்னடி லொள்..?’’

‘‘சிரிக்கிறன்..’’

‘‘ஓ... லொள் எண்டால் சிரிப்பா.. நான் குரைக்கிறதெண்டு நினைச்சன்...’’

‘‘ஆ...’’

‘‘வள் மாதிரி இருந்தது..’’

‘‘லொள்...’’

‘‘ஐயோ.. லொள்ளை விட்டுட்டு... ஹே ஹே எண்டு சிரிடா...’’

‘‘போடா... அதென்ன ஹே ஹே?’’

‘‘அப்ப ஹீ ஹீ எண்டு சிரி..’’

இவ்வாறு பொழுதுகளைப் புளகாங்கிதமாக்கிய உரையாடல்கள்தான் எத்தனை எத்தனை..?!

அத்தனையும் கட்டிப்போட்டு... சுழல்நாற்காலியில் இழுத்துப்பிடித்து இருத்திவைத்து அவளது வரவுக்காக காத்திருந்து பொழுதுகளை

கரைத்து, கணனித் திரையே உலகமாகியதென்னவோ உண்மைதான்.

அறைக்கதவு ‘படார்‘ எனத் திறந்துகொள்கிறது.

அம்மா..

‘‘டேய் தம்பி.. எந்தநேரமும் கொம்பியூட்டரோடை என்ன செய்யுறாய்.. எக்கணம் கண் கெடப்போகுது.. ஒரு அளவுகணக்கு இல்லையே?’’

எரிச்சலுடன் அம்மாமேல் சிறிது கோபம் வந்தது.

இந்த அம்மாவுக்கு நேரகாலம் தெரியாது... முக்கியமானவேளை களில் வந்து உபதேசம் செய்துகொண்டிருக்கும்.

‘‘வெளியாலை நல்ல வெய்யிலடிக்குது.. அறையுக்கை இருக்காமை சைக்கிளை எடுத்துக்கொண்டு உலாத்திப்போட்டு வரலாம்...’’

‘‘பொறுங்கோ.. நான் இப்ப முக்கியமான வேலையாய் எல்லே இருக்கிறன்.’’

‘‘அப்பிடி உந்தப் படப்பெட்டீக்கை என்னதான் முக்கியமான வேலையோ.. முதல்லை முகத்தைக் கழுவிப்போட்டு வந்து ரீயை குடி... பேந்து உதுகளை ஆராச்சி செய்யலாம்...’’

‘‘ஓம்.. நீங்கள் அங்காலை போங்கோம்மா...’’ என்று சிறிது சத்தமாக சொன்னேன்.

என் கண்களை ஒருகணம் ஊடுவிப் பார்த்தவள், அங்கிருந்து

அகன்றாள்.

அவளது பார்வையில் பல அர்த்தங்கள்.

‘ஏதோ தப்பு செய்யுறாய்’ என்று நினைப்பதுபோலிருந்தது.

‘ஏதோ மாற்றத்திற்குள்ளாகிவிட்டாய்’ என்று கேட்பதுபோலிருந்தது.

‘முன்புபோல் நீ இல்லை’ என்று கூறுவதுபோலிருந்தது.

மனம் சங்கடப்பட்டது.

அப்போது..

மெசன்சரில் அவளது பெயருக்கு முன்னாலிருந்த பொம்மை பச்சையானது.

‘‘ஹி!!!!!!!!!!!!!!!!!!!!!’’

‘‘ஸ்ஸ்ஸ்...’’

‘‘என்ன ஸ்...?’’

‘‘சத்தம்போடாதே.. அம்மா பக்கத்திலை நிற்கிறா..’’

‘‘ஹே.. ஹே.. ஹே...’’

‘‘என்னடா சிரிப்பு...’’

‘‘அம்மாக்கு என்ன தெரியும்.. சும்மா இருடி.. படிக்கிறாய் எண்டு நினைப்பா...’’

‘‘லொள்...’’

‘‘சுகமா இருக்கிறியா.. நீ சுத்த மோசம்டி....’’

‘‘ஏண்டா..?’’

‘‘பின்னை என்ன.. உனக்காக இந்த கொம்பியூட்டருக்கு முன்னாலை எவ்வளவு நேரந்தான் காத்துக்கொண்டு இருக்கிறது..?’’

‘‘சொறிடா.. கொலிஜ் முடிஞ்சு வர லேட்டாச்சுது..’’

‘‘பொய் சொல்லாதை.. கொலிஜ் முடிஞ்சு எங்கையோ சுத்திப் போட்டு வாறாய்... அப்பிடித்தானே?’’

‘‘ஐயோ.. உனக்கெப்படி தெரியும்.. மாலுக்கு போட்டு வாறன்...’’

‘‘மாலா? மால் எண்டால் என்ன?’’

‘‘அங்கை ஜேர்மனிலை மால் இல்லையா..?’’

‘‘போடா.. அப்ப எங்கை சாமான்கள் வாங்குவாய்.. நிறைய கடைகள் இருக்கிற இடம்தான் மால்...’’

‘‘ஓ.. அயன்கவ்சென்றும் எண்டு இங்கை சொல்லுவோம்.. அங்கை எதுக்கு போனாய்.. கனடா தமிழ் பெட்டைகளுக்கு ஊர் சுத்தாமல் இருக்க முடியாதாக்கும்...’’

‘‘ஏய்.. கனடா எண்டு கேலி செய்தால் கதைக்கமாட்டன்..’’

‘‘ஐயோ.. சும்மா சொன்னேன்டா.. மாலுக்கு போய் என்ன வாங்கினாய்?’’

‘‘மக்டொனால்ட்லை மில்க் ஷேக் குடிச்சுட்டு வாறேன்...’’

‘‘ஐயோ.. பத்தொன்பது வயசிலை உனக்கு இப்பிடி ஒரு ஆசையா?’’

‘‘லொள்.. ஏன் உனக்கு இல்லையா... உனக்கும் உந்த இருபத்தைஞ்சு வயசிலை வரலாம்...’’

‘‘எனக்கு உதிலை எல்லாம் ஆசை இல்லை.. உன்னோடை பேசிக்கொண்டிருக்கவேணும்.. அதுதான் ஆசை...’’

‘‘போடா...’’

‘‘என்னடி..’’

‘‘எனக்கும்தான்.. சொறிடா.. இப்ப போகோணும்...’’

‘‘ஐயோ.. நான் இவளவுநேரமாய் இருக்கிறன்.. நீ வந்துட்டு உடனை ஓடுறாய்...’’

‘‘ஒரு பிறந்தநாள் பார்ட்டிக்கு ‘மோம்‘கூட போறேன்...’’

‘‘ம்...’’

‘‘ஒரு ரண்டு வயது குட்டிக்கு பிறந்தநாள்...’’

‘‘ம்...’’

‘‘நல்ல சுட்டி கேள்... அவளை எனக்கு ரொம்ப பிடிக்கும்.. நானும் கட்டாயம் விஸ் பண்ணோணும்.. கோபமா?’’

‘‘நாளைக்கு கனநேரம் கதைப்போம்... ம்மா.....’’

எனக்குள் ஏற்பட்ட ஏமாற்ற உணர்வு சடுதியில் மறைந்துபோனது.

‘‘கட்டாயம் நாளைக்கு வரவேணும்..’’

‘‘ஐயோ.. நாளைக்கு ஒரு அலுவல் இருக்கே...’’

‘‘என்னடி நீ...’’

‘‘அச்சா பிள்ளைதானே.. கோபிக்காதைடா.. அடுத்த திங்கள் கிழமை நிறைய கதைக்கிறன்.. ஓகே?!’’

‘‘சரி.. நீ சொல்லுறதுதானே சட்டம்...’’

‘‘லொள்... மண்டே கட்டாயம்...’’

‘‘ஏய் பிரின்செஸின்...’’

‘‘உண்மையான பெயரைச் சொல்லி கூப்பிடு...’’

‘‘பிருந்தாக் குட்டி...’’

‘‘லொள்.. என்ன சொல்லு...’’

‘‘அந்த சின்னஞ்சிறிய பேர்த் டே குட்டானுக்கு... என்ரை ஹப்பி பேர்த் டேயையும் சொல்லிடு...’’

‘‘ஓகே மிஸ்டர் தரன்.. சீ யூ லேட்டர்.. டாடா...’’

‘‘டாடாடி..’’

பச்சைப் பொம்மை மீண்டும் சிவப்பாகியது.

இனந்தெரியாத வெறுமை என்னை ஆட்கொள்ள ஆரம்பித்தது.

❍❍❍




(2)

ஜேர்மனிக்கு வந்து பத்து வருடங்கள்தான்.

பதினைந்து வயதுவரை ஊர் வாழ்க்கை. அதனால், ஊரில் சந்திகளில்... குட்டையான மதில்களில் குந்தியிருந்து வம்பளக்கும் இளைஞர்களைக் கண்டிருக்கிறேன்.

வயல்வெளி நடுவே அமைந்துள்ள நன்னீர் கிணறுகளைச் சுற்றிநின்று அரட்டையடிக்கும் இளம் பெண்களையும் கண்டிருக்

கிறேன்.

அவர்களின் கையால் தண்ணீர் குடிக்கவென்றே அலையும் வாலிபர்களையும் கண்டிருக்கிறேன்.

அப்படித்தான் இதுவும்.

அங்கே வெளியில் நிகழ்ந்தவை இங்கே வீட்டினுள்ளே.

ஒரு கதிரையில் குந்தியிருந்து அரட்டை.

தனியாக கும்பலாக தமிழாக... ஆங்கிலத் தமிழாக... ஊர் கடந்து நாடு கடந்து.. ஒரு உலகமே சந்தியாகி... குட்டை மதிலாகி.. நன்னீர்க் கிணறாகி ஒரு சின்னஞ்சிறிய கணனித் திரைக்குள்ளே அடக்கமாகி அதுவே தற்போது எனது பொழுதாகி சிலவேளை தொழுதலாகி எனும்போது.. நினைக்கவே ஆச்சரியமாகத்தான் இருக்கிறது.

முகம் தெரியாத வரவுகள்... விசாரிப்புகள்.. கேலிகள்... பகிடிகள்... குறும்புகள்... அதனால் உருவாகும் உறவுகள்... பாசங்கள் என்று நிற்பவையும், அறுபவையுமாக தினமொரு பொழுதுக் கழிப்பு.

அது ஒரு பிரபலமான தமிழ் ‘சற்‘ அறை.

சுந்தர்தான் அறிமுகப்படுத்தினான்... ‘இன்ரர்நெற் வைச்சுக்கொண்டு ஆறு மாசமாய் என்னடா செய்யிறாய்?’ என்ற மேதாவித்தனக் கேள்வியுடன்..!

கொஞ்சநாள் அவன்தான் என்னுடைய ‘சற்‘ ஆசான். எவ்வாறு சற் அறைக்குள் போவது? எவ்வாறு உரையாடுவது.. எப்படி அவர்களுடன்

தனியறையில் உரையாடுவது?... இப்படிப் பல விசயங்களுக்கு ஆசான்.

விளையாட்டு; ஊர் சுற்றல், சினிமாப் பாட்டுச் சீடிகள் என்று திரிந்த என்னை கதிரையொன்றில் மணித்தியாலக்கணக்காக அசையாமல் அமர்த்திவைத்த பெருமை அந்த ‘சற்‘ அறைக்குத்தான் சேரும்.

முதலில் கொஞ்சநாள் வித்தியாசமாகத்தான் இருந்தது.

‘தமிழ் சற்.’

கதைகளோ ஆங்கிலத் தமிழ். தமிழை ஆங்கில எழுத்துக்களுள் மிக வேகமாகவே நுழைத்துக் கதைத்தார்கள்.

ஆச்சரியம் என்னவென்றால்.. ‘எல்’ என்ற ஒரேயொரு ஆங்கில எழுத்தால்... ல, ழ, ள-வில் வரும் சொற்களை சுலபமாக இனங்கண்டு உரையாடினார்கள்.

ஒரு கிழமை உருண்டோடியது. ஒரு நட்பும் கிடைத்தவாறாக இல்லை.

‘‘ஹலோ’’ என்றால் ‘‘ஹலோ’’. அவ்வளவுதான்.

என்னை விலத்திவிட்டு ஏனையோர் தங்களுக்குள் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

சினிமா... காதல்..

காதல்.. சினிமா...

இதுதான் அங்கே பெரும்பாலான உரையாடல்கள்.

காதலிலும் சினிமாதான் குந்திக்கொண்டிருந்தது.

ஆனால் சுவாரசியமாக இருந்தது. பொழுது போவதே மறந்துபோனது.

எனக்கும் அவர்களுடன் கதைக்கவேண்டும்போல அவா. அது என்னை ஒரு கிழமையாகவே அங்கு தினமும் ஈர்த்தது.

ஆனால் அவர்கள் என்னை ஒரு பொருட்டாகவே கருதுவதாகத் தெரியவில்லை.

'எனக்குச் சற்றிலை உரையாடத் தெரியவில்லையோ?'

சற்று ஏக்கமாகக்கூட இருந்தது.

ஒருநாள்..

சிலர் ஒருவனை ஆங்கிலம் தெரியாது எனக் கேலிசெய்து கொண்டிருந்தார்கள்.

எனக்குப் பொறுக்க முடியவில்லை. அவர்களை திட்டவும் முடியவில்லை. திட்டினால் எட்டிப் போய்விடுவார்கள் என்ற பயம்.. எனக்கு சற் நண்பர்கள் தேவை.. அதனால் விரட்ட முடியாது.

எனினும் அவர்களின் கருத்துக்கு மௌனமாக இருந்து வேடிக்கை பார்க்கவும் முடியவில்லை.

“பிரண்ட்ஸ்..”

“இங்கிலிஸ் நல்ல பாசைதான்.. அதுக்காக தமிழைக் கூடாதென்று சொல்லாதீங்க.. ‘இன்று உங்களுக்கு எத்தனையாவது பிறந்தநாள்?’.. இதை யாராவது இங்கிலீசிலை சொல்லுங்கோ பார்ப்பம்...”

சிறிதுநேரம் மௌனம்.

எவருமே பதில் சொல்லவில்லை.

“இதுக்குத்தான் சொல்லுறது.. மொழியை பழிக்கக் கூடாதென்று..”

பெருமையாக எழுதினேன்.

அப்போது...

“ஹீ ஜோ...”

என்னைத்தான் கூப்பிட்டாள்.

எனது ‘சற்‘ பெயர்தான் ஜோ.

“ஹலோ...”

“ஹே... உன்னை ஒரு கிழமையா பார்க்கிறேன்.. என்ன அமைதியா இருக்கிறாய்...”

இனம்புரியாத சந்தோசம்.

‘ஒரு கிழமையாகப் பார்க்கிறாளாமே?!’

இருக்காதா?!

‘‘இந்த ‘சற்‘ சுத்த ‘போர்’.”

“நீ கதைக்காமல் இருந்துகொண்டு ‘போர்’ என்று சொல்லுறாய்...”

“ம்.. யாரோடை கதைக்க?”

“சும்மா பேசு.. பேசுவாங்கள்..”

“அப்படி பேச தெரியாதே?”

“ஓ.. அதுக்கும் படிக்கவேணுமா?... லொள்...”

“இப்ப ஒரு கிழமையாதான் இங்கை வாறேன்.. இது புதுப்பழக்கம்..”

“இதுக்கெதுக்கு பழக்கம்..? சும்மா பேச வேண்டியதுதான்.. விரும்பினவங்கள் உன்னோடை பேசுவாங்கள்.. சிலர் உன்னை ஞாபகம் வைச்சிருப்பாங்க...”

“ஓ.. நான் உங்களை மறக்கமாட்டன்...”

“லொள் **(lol)..** ஏன்?”

“நீங்கதான் முதன்முதலா என்னை கூப்பிட்டுக் கதைக்கிறீங்கள்...”

‘‘ஓ... ’’

‘‘உங்கடை பெயர் என்ன?’’

‘‘ஐஸ்..’’

‘‘ஐயோ.. நான் உண்மையான பெயரைக் கேட்கிறன்..’’

‘‘அதை இங்கை சொல்ல முடியாது...’’

“அப்ப எங்கை..?”

“ம்... தனியறைக்கு வா..”

எங்கோ வானத்தில் பறக்க ஆரம்பித்த உணர்வு.

அவளின் பெயரை ‘எலி’யால் அழுத்த.. தனியறையில் நானும் அவளும்.

“என்னடா சுகமா இருக்கிறியா?... ம்.. நான் வாடா போடான்னு தான் கதைப்பேன்.. கோபப்படுவியா?”

எனக்கு சிரிப்பாக வந்தது.

“இல்லையே... நீ எப்படி வேண்டுமானாலும் கதை..”

இப்படித்தான் அவளது தொடர்பு ‘சற்’ அறையில் ஆரம்பித்து.. மெசன்சர்வரை இந்த மூன்று மாதத்தில் வளர ஆரம்பித்தது.

இன்று புதன்கிழமை ஆகிவிட்டது.

திங்கள் கிழமை வந்து பேசுவதாகக் கூறியவளை இன்றுவரை காணவில்லை. நேற்றிலிருந்து எனது மனம் அமைதியாகவில்லை.

அவள் வந்தாளா என்றுகூடத் தெரியவில்லை.

வைரஸ்.. வோர்ம்ஸ் ப்லாஸ்ரர்.. **(worms blaster)** எனது கணனிக்குள் புகுந்து.. அப்பப்பா.. இரண்டு நிமிடத்துக்கொரு தடவை கணனி நிற்பதும்.. நான் மீண்டும் அதை ஆரம்பிப்பதுமாக... வைரஸை தேடி அழித்து.. அது மீண்டும் வராமல் கவசம் போடுவதற்குள் புதன்கிழமை ஆகிவிட்டது.

எனினும் அன்பு நண்பர்களின் உதவியால் கணனியை மீட்டு விட்டேன்.

இணையம் அளித்த அந்த நட்புகளை மனம் நன்றியோடு நினைத்துக் கொள்ளுகிறது.

ம்... பிருந்தாவை நினைக்கத்தான் கவலை ஏற்பட்டது.

திங்கள் வந்து கோபத்துடன் போயிருப்பாளா?

ம்... இப்படி ஒரு தடங்கல்.

இதை அவள் புரிந்துகொள்ளுவாளா?

இன்றாவது அவள் வருவாளா?

அல்லது அடுத்த திங்கள்தான் வருவாளா?

நான் அவளுக்காக கணனியின் முன்னால் அலைபாயும் மனதுடன் குந்திக்கொண்டிருந்தேன்.




*(3)*

அவளேதான்… பிருந்தா..

வந்துவிட்டாள்.

‘வருவாளா, வருவாளா’ என்று கணணியின் முன்னால் காக்க வைத்து வந்துவிட்டாள்.

‘‘ஜோ..!’’

காத்திருந்து, காத்திருந்து பூத்துப்போன விழிகளுடன் சோர்ந்திருந்த என்னை கதிரையில் துள்ளி நிமிரவைத்தது அவளது அழைப்பு.

முகம் தெரியாது... குரல் தெரியாது... ஊர் தெரியாது... வெறுமனே பெயர் வயது நாடு... இதுவும் அவள் சொல்லி அறிந்தவை...!

எனினும் அவளின் வரவால் என்னுள் இனம்பரியாத உணர்வு பீறிட்டெழுவதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

“ஹேய்! என்னடா செய்யுறாய்?”

“சும்மா இருக்கிறேன்.. நீதான் வாறன் வாறன் என்று ஏமாத்திக் கொண்டிருக்கிறாய்?”

“பொய் சொல்லாதை.. வேறை ஆக்களோடை ‘சற்‘பண்ணுறாய்.. அப்பிடித்தானே?”

“இல்லைடா.. வேறை யாரை தெரியும்.. நீதானே என் ஒரேயொரு மெசன்சர் சிநேகிதி...”

“பொய் சொல்லாதை...”

“என்ன பொய்..?”

“எனக்காகமட்டும் காத்திருக்கிறியா? பொய்தானே?

“ஐயோ... சத்தியமா சொல்லுறன்டா... உனக்காகத்தான் கொம்பியூட்டருக்கு முன்னாலை உட்கார்ந்திருக்கிறன்.. நம்பமாட்டியா?”

“ம்.. நம்புறன்…”

“அப்ப ஒரு சத்தியம் தா.”

“என்னடா?”

“வாறன் என்று சொன்னால்… சொன்ன நாளுக்கு… சொன்ன நேரத்துக்கு வரவேணும்…”

“ஐயோ… என்னடா நீ…”

“முடியாவிட்டால் முடியாதென்று சொல்லு.. பரவாயில்லை…”

“ஐயோ.. உனக்கு எப்படி விளங்கப்படுத்துறது… பள்ளிக்கூட ‘ஹோம்வேர்க்’… படிப்பு… ஸ்போர்ட்ஸ்.. டான்ஸ் கிளாஸ்…. அப்பிடி நேரம் கிடைச்சு வந்தால்.. பக்கத்திலை அம்மா வந்து நிப்பா.. அவவுக்கும் நான் கொம்பியூட்டரிலை படிக்காமை என்னவோ செய்யுறன் என்று சந்தேகம் வந்திட்டுது. உனக்கென்ன, நீ பொடியன்..”

“நீயும் பொடியன்தானே?”

“என்னடா.. பொடியன்மாதிரியா இருக்கிறேன்..?”

“ஐயோ.. நான் சும்மா பகிடிக்குடா.. நீ பேசும்போது.. ஒரு சின்னப்பிள்ளை பேசுறமாதிரி இருக்குடா..”

“…………”

“உரிமையோடை கூப்பிடுறது… கோபமாய் பேசுறது… செல்லமாய்

பேசுறது... உண்மையிலேயே பத்தொன்பது வயசிலை சின்னப்பிள்ளை மாதிரித்தான் இருக்கிறாய்..."

"..........."

"அந்த சின்னப்பிள்ளைத்தனம்தான் எனக்கு பிடிச்சிருக்கு... அதாலைதான் உனக்காக நான் ஒவ்வொருநாளும் காத்திருக்கிறன்..."

".........."

திடீரென அவள் அமைதியாயிருப்பது புரிந்தது. சிலவேளை போய்விட்டாளோ?

"ஹலோ..."

"........."

"பிருந்தா... இருக்கிறியா..?"

"ம்...."

"என்ன பேச்சைக் காணேல்லை..."

"பேசப் பிடிக்கேலை.."

"ஐயையோ... என்ன தப்புச் செய்தேன்டா?"

"தப்புத்தான்.. எப்பிடி என்னை நீ சின்னப்பிள்ளை என்று சொல்லலாம்? எனக்கு பத்தொன்பது வயதென்று சொன்னேன்தானே?"

“இந்த சின்ன விசயத்துக்கடா கோபம்.. நான் என்னவோ ஏதோ என்று பயந்திட்டேன்..”

“இது சின்ன விசயமா.. இனிமேல் சின்னப்பிள்ளை என்று சொன்னால் உன்கூட பேசமாட்டேன்..”

“சரி.. சத்தியமா இனி சொல்லமாட்டேன்.. போதுமா?”

“போதும்.. ஏன்டா.. நான் கதைக்கிறது பத்தொன்பது வயது பெண்போலை இல்லையா..?”

“ஐயோ.. என்னை விடு தாயே.. எல்லாம் பெரிய பெண் கதைக்கிறமாதிரித்தான் இருக்கு... ஏதோ என்னோடை கதைச்சுக் கொண்டிரு.. அது போதும்...”

“லொள்.. சரியான எம்மெம் **(MM)** ...”

“எம்மெம்மா?”

“லொள்.. எம்மெம்தான்...”

“எம்மெம் என்றால் என்னடா?”

“எம்மெம் என்றால் மாங்காய் மண்டை.... லொள்...”

“அப்ப நீ ரீரீ **(TT)**.. ஹா.. ஹா...”

“அது என்ன ரீரீ...?”

‘‘ரீரீ என்றால் தேங்காய் தலை... ஹா.. ஹா..’’

“லொள்.. என்னடா சிரிப்பு உது?”

“இதுவா.. இதுதான் தரனின் சிரிப்பு.. அது சரி.. என்ன ஸ்போர்ட்ஸ் செய்யிறாய்..?”

“நெற்போல்டா... கொலிஜ் ரீமிலை இருக்கிறேன்டா...”

“நெற்போல் விளையாட உயரமாயெல்லோ இருக்கோணும்?”

“நான் உயரம்தான்...”

“அம்மாடியோவ்... அவ்வளவு உயரமா... கனடாவிலை தமிழ் பெண்கள் எல்லாம் உயரமா? ஹா.. ஹா...”

“லொள்.. போடா...”

“சரி.. டான்ஸ் பழகிறாய்.. எப்பிடியடி.... தமிழ் தெரியாதென்று முந்தி சொன்னாய்?”

“ஐயோ.. இப்ப தமிழிலைதானே எழுதுறன்...”

“இது தமிழா... தமிழை இங்கிலீசிலை எழுதுறாய்... இது தமிங்கிலீசு...”

“லொள்... இப்படித்தான்.. டான்ஸ் பாட்டை இங்கிலீசில் எழுதி பழகுறேன்டா...”

‘ஓ… வருங்காலத்தில் புகலிட நாடுகளில் தமிழ் ஆங்கிலத்தின் ஊடாக கடிதங்களாகவும்.. மெயில்களாகவும் புதுத்தோற்றமாகி… வேர் அறுந்த மரமாகத் தள்ளாடி உக்கப் போகிறதா?’

“ஏன்டா… தமிழ் படிச்சால் என்னவாம்?”

“ஐயோ.. போடா… பேசத் தெரியுந்தானே… கதைக்கிறது விளங்குதுதானே… இதுக்கும் மேலை என்னத்தையடா படிக்க… நீ சரியான எம்மெம்தான்டா…”

“………..”

“ஹேய்.. உனக்கு என்ரை அக்காவை அறிமுகப்படுத்தட்டா?”

“அக்காவா… நீ ஒரு பிள்ளை என்று சொன்னாய்.. இப்ப என்னடி அக்கா?”

“நீ சரியான எம்மெம்தான்.. இது என்ரை ‘சற்’ அக்காடா…”

“ஓ… ‘சற்’ அக்கா… அண்ணா என்றெல்லாம் இருக்கா?”

“உனக்குத் தெரியாதா? ‘சற்’ அக்கா.. ‘சற்’ லவ்வர்… தம்பி என்றெல்லாம் இருக்கு…”

“ஓ…”

“என்ன ஓ… வாயைப் பிளக்காதை… பூச்சி போகப் போகுது… லொள்…”

“நான் உன்னோடைதானே கதைக்க இருக்கிறன்..”

“என்னோடை எப்பவும் கதைக்கலாம்தானே... உனக்கு கொஞ்சப் பேரை அறிமுகப்படுத்துறன்டா... நான் இல்லாவிட்டால் நீ அவங்களோடை கதைக்கலாம்தானே..?”

“ஏன்.. நீ எங்கை போறாய்..?”

“..........”

“ஐயோ.. என்ன பேச்சைக் காணேலை...?”

“அப்பிடித்தான்.. சும்மா சும்மா கேள்விகேட்டால் பேசமாட்டன்.. இப்ப அக்காவை உனக்கு அறிமுகப்படுத்தவா.. உன் மெசன்சரிலை ‘அட்’ **(add)**பண்ணவா... சொல்லு...”

‘‘ஐயோ... என்னடி நீ... உன்னோடைமட்டும் கதைக்கலாம் என்றால்.. யார் யாரையோ ‘அட்’பண்ணுறன் என்கிறாய்...”

“ப்ளீஸ்டா... உனக்கு என்னிலை அன்பிருக்கா.. இல்லையா...?”

என்னுள் இனம்புரியாத உணர்வு. முகம் தெரியாத உறவொன்று கணனிக்குள்ளால் அன்பைப்பற்றிக் கேட்கிறது. நான் எங்கே போகிறேன் என்று எனக்கே புரியவில்லை.

“சரிடா... ‘அட்’பண்ணு...”

என் மெசன்சரில் புதுவரவு ஒன்று உதயமாகியது.

“வணக்கம் அண்ணா… நான் சுதா…”

“வணக்கம் சகோதரி… நான் தரன்… ஜேர்மனி…”

“தெரியும்.. பிரின்செசின் சொன்னாள்…”

“பிரின்செசின்… ஐஸ்… இவளுக்கு எவ்வளவு ‘சற்’ பெயர்?”

“லொள்… நான் எத்தினை பெயரும் வைப்பன்… நீ பிருந்தா என்று கூப்பிடு… லொள்…”

அதன் பின்னர் சுதாவின் தொடர்பும் தொடர்ந்தது. அடிக்கடி மெசன்சரில் வந்தாள்…. பிருந்தா இல்லாத வேளைகளில் அவளுடனான உரையாடல் வளர்ந்தது.

“அண்ணா… எனக்கு வாழவே பிடிக்கேலை…”

ஒருநாள் இவ்வாறுதான் சுதா ஆரம்பித்தாள்.

❍❍❍




*(4)*

“அண்ணா… எனக்கு வாழவே பிடிக்கேலை…”

சுதா இப்படித்தான் சொன்னாள்.

பகிடிக்குச் சொல்லுகிறாளோ?

“ஏன்.. உனக்கு இப்ப எத்தினை வயது..?”

“இருபத்து மூன்று...”

“இருபத்து மூன்று வயதிலை வாழப் பிடிக்கேலையோ... என்ன விளையாடுறியோ?”

உலகின் பல நாடுகளில் பஞ்சத்துக்குள்ளும் பிணிகளுக்குள்ளும் போராட்டங்களுக்குள்ளும் மனித உயிர்கள் வாழ்வதற்காக முயற்சித்தலையே வாழ்வாகக் கொண்டிருக்கும்போது... வளமான வசதியான நாடான கனடாவில் வசிப்பவளுக்கு இருபத்து மூன்று வயதில் வாழப் பிடிக்கவில்லை.

வசதிகளின் வீக்கம்கூட வாழ்க்கையின் மீதான பற்றுதலை தறித்துவிடுமோ?!

“ஏய் சுதா.. சும்மா இப்பிடி விசர்த்தனமாய் கதையாதை.. உனக்கு வாழ நிறையக் காலமிருக்கு...”

“போடா... அண்ணா... நீ என்னைமாதிரி இருந்தால் உனக்கு என்ரை நிலை புரியும்டா.. உனக்குமட்டும்தான்டா சொல்லுறன்.. எனக்கு வாழப் பிடிக்கேலை அண்ணா... வாழ்க்கையே வெறுத்துப் போச்சு... இனி எப்பிடி வாழுறது என்றே தெரியேலையடா...”

மெசன்சரில் ஒரு பறவையின் தீனக்குரலாகத் தென்பட்டது.

அவள் ஏதோ ஒரு கஸ்டத்துள் இருப்பதை உணர முடிந்தது. அந்தக் கஸ்டத்தை பகிர்வதால் ஆறுதலடைய விளைவதும் புரிந்தது. அப்படியான ஒரு உதவியை இந்த சற் பொழுது செய்யுமானால்... அதுவும் என் மனதுக்கு நிறைவாகத்தானிருந்தது.

“சுதா.. அப்படி என்னடா கஸ்டம்? யாரையாவது காதலிக்கிறியா? வீட்டிலை மாட்டன் எண்டுட்டாங்களா?”

இதைத் தவிர வேறு காரணம் ஏதென்ற நினைப்பு எனக்குள்.

“ம்… இப்ப காதலிக்கேலை.. முந்தி காதலிச்சன்.. இப்ப வாழ்க்கையே வெறுத்துப்போச்சு…”

“ஐயோ.. அதென்ன முந்தி பிந்தி… விளங்கேலை.. புரியும்படியாய் சொல்லன்…”

“சொல்லுறன்.. ஆனால் ஒன்று.. வேறை யாருக்கும் சொல்லக்கூடாது… ஓகே?”

“ஓகே…”

எனக்குமட்டும் சொல்கிறாளாமே?!

ஒரு சிலநாட்களின் பழக்கத்தில் ஏற்பட்ட நம்பிக்கை.

பெருமிதம் ஏற்பட்டது. அதேவேளை சகோர பாசம் மேலோங்குவதையும் அக்கணத்தில் உணரமுடிந்தது.

“அண்ணா.. நான் பதினைஞ்சு வயதிலை நோர்வேக்கு வந்தனான்.”

“நோர்வேயிலை யாரிட்டை?”

“எனக்கு மூன்று அண்ணன்மார்… நான்தான் கடைசி. ஒரேயொரு பெண்.. மூத்த அண்ணன் நோர்வேயில்தான் குடும்பமாக இருக்கிறான்..

அவன்தான் என்னை நோர்வேக்குக் கூப்பிட்டவன்..

“அப்ப மற்ற அண்ணன்மார்..?”

“அவங்கள் இங்கை கனடாவிலை குடும்பமாய் இருக்கிறாங்கள்...”

‘‘அப்ப நீ யாரோடை..?’’

‘‘ஐயோ.. நான் அம்மா அப்பாவோடை பிறிம்பா இருக்கிறன்டா.. இடேக்கை குழப்பாமல் நான் சொல்லுறதை இப்ப கேட்கிறியோ இல்லையோ?’’

‘‘என்னடா நீ... எல்லாத்தையும் அறியத்தானே வேணும்.. சரி சொல்லு...’’

‘‘பதினைஞ்சு வயதிலை நோர்வேக்கு வந்து படிக்கப் போனன்.. அங்கை எனக்கும் சுரேஸ்க்கும் காதல் உண்டாச்சு...’’

‘‘ஆகா.. பதினைஞ்சிலை தொடங்கியாச்சா... ம்... சொல்லு...’’

‘‘பிறகு அண்ணன் வீட்டிலை சரியான பிரச்சினை... சுரேஸின் வீட்டிலையும் பிரச்சினை... நாங்கள் தனியா வீட்டைவிட்டுப் போயிட்டம்...’’

‘‘ஐயையோ.. பதினைஞ்சு வயதிலையா?’’

‘‘அப்ப வீட்டாலை வெளிக்கிடேக்கை பதினாறு வயது... சுரேஸின்ரை தெரிஞ்ச நண்பர் வீட்டிலைதான் இருந்தோம்...’’

‘‘ம்…’’

‘‘பதினெட்டு வயதிலை ரிஜிஸ்ரர் செய்தோம்…’’

‘‘குட்… நல்லம்… அப்ப காதல் கலியாணத்திலை வந்திட்டுது என்று சொல்லு… சந்தோசம்…’’

‘‘போடா… நீயும் உன்ரை சந்தோசமும்… மண்ணாங்கட்டி…’’

‘‘என்னடா நீ… ஓ… பதினைஞ்சு வயதிலை வந்தனிதானே… அதுதான் மண்ணாங்கட்டியை தெரியுதாக்கும்…’’

‘‘ஐயோ… என்னடா நீ… நான் விசர்லை இருக்கிறன்… நீ ஒன்று…’’

‘‘சரி சரி… சொல்லு…’’

‘‘இரண்டு வருசத்துக்கு முந்தி டிவோர்ஸ் எடுத்திட்டம்…’’

‘‘என்ன..?’’

‘‘ஓம்…’’

அதிர்ச்சியாக இருந்தது.

பதினைந்தில் காதலித்து, பதினாறில் உறவுகளை உதறி வெளியேறி, பதினெட்டு வயதுவரை காத்திருந்து பதிவுத் திருமணம்செய்து தற்போது விவாகரத்தில்…!

நம்பக் கஸ்டமாக இருந்தது.

நம்பு என்பதுபோல் மெசன்சரில் வாக்குமூலமாக சுதா.

‘‘அண்ணா…’’

‘‘……..’’

‘‘அண்ணா.. என்னடா மௌனம்? என்னோடை கதைக்கப் பிடிக்கேலையா?’’

‘‘ஐயோ.. என்னடா நீ.. ஏன் அப்பிடிச் சொல்லுறாய்?’’

‘‘இல்லை.. அப்பிடித்தான்டா… வெட்டிங், பேர்த்டே பார்ட்டி என்று போனால் வேறைபக்கமாய் பார்த்துக்கொண்டு நிப்பாங்கள்… நான் சிரிச்சாலும் சிரிக்காமை… என்னை ஏதோ வினோதமான பொருளைப் பார்க்கிறமாதிரி பார்க்கிறாங்களடா… அதாலை இப்ப நான் தமிழாக்களின்ரை விசேசங்களுக்குப் போறதில்லை…’’

‘‘நான் அப்பிடி இல்லை… இந்த வயதிலை உனக்கு இப்பிடியொரு கஸ்டமா என்று யோசிக்கிறன்…’’

‘‘போடா அண்ணா… சின்ன வயதிலை காதல் கலியாணம் என்று அவசரப்பட்டதாலை வந்தது அண்ணா… இப்பதான் எல்லாம் விளங்கது… ம்… காலம் கடந்து விளங்குது… பொறுப்பில்லாத வயதிலை சும்மா உணர்ச்சியை காதல் என்று எண்ணி… எங்கடை பலவீனங்களைப் பார்க்க மறந்திட்டம்… வயது வந்தபோதுதான் பலவீனங்கள் எங்கடை இடைவெளியை அதிகமாக்கிப்போட்டுது…’’

‘‘ம்…’’

‘‘அதுமட்டுமில்லை அண்ணா... நான் அண்ணா வீட்டிலை நோர்வேயிலை இருக்கேக்கை... அவை வேலைக்குப் போனால்... நான்தான் ஸ்கூலாலை வந்து எல்லா வேலைகளும் செய்யவேணும்...’’

‘‘ஓ...’’

‘‘என்ன செய்தாலும் அண்ணி குற்றம் சொல்லிக்கொண்டே இருப்பா... அந்தநேரத்திலை சுரேஸின் காதல் எனக்கு மருந்து மாதிரித்தான் இருந்தது... அதை எப்படியடா சொல்லறது... வியர்வைக்கு ‘பான்’போடுறதென்று..?’’

‘‘ம்... ஒருவகை ஆறுதல் என்று சொல்லலாமா?’’

‘‘என்னவோ... ஆனால் கலியாணம் செய்த பிறகு அவனும் மாறீட்டான்... என்னை வேலைக்காரிமாதிரி வீட்டிலை விட்டுப் போட்டு... ஊர் சுத்தினான்...’’

‘‘ம்...’’

‘‘அதுவும் சிறைதான் அண்ணா... அதுக்காலை விடுபட்டு கனடாவுக்கு வந்து அப்பா அம்மாவோடை இருப்போம் என்றால்... இங்கும் தனிமைதான்டா அண்ணா... தமிழ் சனங்கள் ஏதோ வினோதமாய் பார்க்கிறதை தாங்க முடியேலை...’’

‘‘ஐயோ... உனக்குத்தான் அப்பா அம்மா பக்கத்திலை இருக்கிறாங்களே... என்னடா நீ..?!’’

‘‘இங்கை கனடாவிலை இருக்கிற ரண்டு அண்ணன்களும்தான் அவையை கூப்பிட்டவங்கள்... பகல்லை அப்பா ஒரு அண்ணன்

வீட்டையும்... அம்மா மற்ற அண்ணன் வீட்டையும் போகவேணும்... அவையின்ரை வேலைகளை பார்க்க... நான் தனியத்தானே வீட்டிலை...?''

'ஓ... பெற்று வளர்த்து ஆளாக்கி... அந்த ஆளாக்கியோர் பெற்றவர்களான பிறகும் அவர்களுக்காக தேயும் வயோதிகங்கள்... பெற்ற கடனை மறந்து வரவழைத்தவற்றை கடனாக்கி குளிர்காயும் உறவுகள்...'

அடிமனதில் வேதனையொன்று பீறிட்டது.

அவர்களுக்காகவா.. அல்லது அவளுக்காகவா? புரியவில்லை.

மூன்று அண்ணன்களுக்கு ஒரு தங்கையாகப் பிறந்தும்... 'அண்ணா.. எனக்கு வாழவே பிடிக்கேலை' என்று முகமறியாத ஒருவனை அண்ணனாக்கி ஆறுதல் தேடவிளையும் அந்த சற் உறவு வெகுநேரமாக எனக்குள்... 'வாழப் பிடிக்கேலை அண்ணா.. வாழப் பிடிக்கேலை' எனக் கதறுவதுபோலிருந்தது.

அப்போது தொலைபேசி மணி ஒலித்தது.

''ஹலோ... அத்தான்... நான் சாரு...''

''சொல்லு...''

''அடுத்த கிழமை நாங்கள் உன் வீட்டுக்கு வாறோம்... ரண்டு கிழமை அங்கேதான்...''

எனக்கு இடிவிழுந்ததுபோலிருந்தது.




(5)

''போகணும்...''

"என்னடி நீ... வந்த உடனை போகணும் போகணும் என்று... வராமலே இருந்திருக்கலாம்...''

''சரி... இனிமேல் வரலை...''

''ஐயோ... நில்லடி... ஒரு மணித்தியாலமாவது கதைக்கமாட்டியா? நீ ரொம்பவும் மோசம்டி... நான்தான் உன்னிலை ஆசை... உனக்குக் கொஞ்சம்கூட ஆசையில்லை...''

''என்னடா ஆசை... பெரிய ஆசை... நான் படிக்கவேண்டாமா... ஸ்கூல் ஹோம்வேர்க் செய்யவேண்டாமா... உன்னோடை கதைச்சால் சரியா... ஹோம்வேர்க் செய்யாட்டி... வீட்டிலை சொல்லிப்

போடுவாங்கள்... பிறகு... மாடுமேய்க்கப் போடி என்று அம்மாவும் அப்பாவும் திட்டுவாங்கள்...''

‘‘ஹே... ஹே... கனடாவிலை மாடு இருக்கா?''

‘‘என்னடா சிரிப்பு... கனடாவிலை மாடு இருக்கோன்னு யாருக்கு தெரியும்... அவங்களுக்கு அப்பிடித்தான் திட்டத் தெரியும்... லொள்...''

‘‘வேறை எப்பிடித் திட்டுவாங்கள்..?''

‘‘அதுதான் இப்ப முக்கியமா? அவங்கள் ஒவ்வொருநாளும் திட்டிக்கொண்டுதான் இருக்கிறாங்கள்...''

‘‘ஐயோ... உன்னையா..?''

‘‘இல்லைடா... அப்பா அம்மாவை... அம்மா அப்பாவை... டெய்லி சண்டை...''

‘‘நான் நினைக்கிறேன்... நீ பிறந்த உடனை திட்ட தொடங்கியிருப்பாங்க...''

‘‘எப்பிடி சொல்லுறாய்..?''

‘‘அதுதான் உனக்குச் சகோதரங்கள் இல்லை...''

‘‘லொள்... போடா எம்மெம்...''

‘‘ஒரு மணித்தியாலத்திலை பெரிசாய் என்னடி படிக்கப் போறாய்?''

‘‘ஐயோ… நான் போகணும்டா…’’

‘‘சரி போ… போனால்… இனி சத்தியமாய் நான் கொம்பியூட்டரை தொடமாட்டன்…’’

‘‘என்னடா நீ… சுதாவோடை பேசலாம்தானே… பாவம்டா அவள்… வாழ்க்கையிலை சரியான கஸ்டம் அவளுக்கு…’’

‘‘ஐயோ… உனக்கும் சொல்லிப்போட்டாளா… எனக்குமட்டும் சொல்லுறன் என்று சொன்னாள்…’’

‘‘லொள்… அவள் அப்பிடித்தான்… இப்பிடி கனபேருக்குச் சொல்லிப்போட்டாள்…’’

இப்படி யாரிடமும் சொல்லாதே எனக் கூறி, கவலைகளை இறக்கிவைப்பதிலும் ஆறுதல் கிடைக்குமோ? அனுபவித்தவர்களுக்குத் தானே புரியும்?!

‘‘என்ன இருந்தாலும் உன்னோடை கதைக்கிற சந்தோசம்போலை யாரோடை பேசினாலும் வராதுடா…’’

‘‘ஏன்டா..?’’

‘‘யாருக்குத் தெரியும்?’’

‘‘பொய் சொல்லாதை… நீ எதையோ மறைக்கிறாய்… என்னோடை கதைக்கிறதிலை உனக்கு என்னடா சந்தோசம்..?’’

‘‘அப்படி என்ன சந்தோசம்?’’

என்னையே கேட்டுக்கொண்டேன்.

‘காதலா..?’

சிரிப்பாக இருந்தது.

அவள் யார் என்று தெரியாது… என்ன நிறம் என்று தெரியாது… அப்படியும் காதல் வருமா?

காணாமல் காதலா? சாத்தியமா?

உணர்வுகள்தானே உரையாடல்களாகின்றன. அந்த உணர்வுகள் விரல் நுனியில் வந்து விசைப்பலகையை அழுத்தி வார்த்தைகளை மௌசன்சருக்கு உன்னும்போது காதல் என்பதும் காத்திரமாக உண்டாகிறதோ?

எனக்குப் புரியவில்லை.

‘‘தரன்…’’

‘‘ம்…’’

‘‘சொல்லுடா…”

“என்ன நீ… என்ன சொல்ல…?”

“என்னோடை கதைக்கிறதிலை உனக்கென்ன சந்தோசம்?”

“உண்மையைச் சொல்லட்டா..?”

“நான் உன்னை விரும்புறன்டா...”

“லொள்...”

“என்ன லொள்?”

“ஐயோ... நீ சரியான எம்மெம்தான்டா... என்ரை மெசன்சர்லை எத்தனை பேருடைய ஐடி இருக்கு தெரியுமா?”

“யாருக்குத் தெரியும்..?”

“எழுபதுக்கு மேலை...”

“ஐயோ... அவ்வளவு சனமா?”

“அதிலை அரைவாசி காய்ஸ்”

“அதென்ன காய்ஸ் பழம்ஸ்...?”

“உன்னைமாதிரி பொடியங்கள்டா...”

எனக்கு என்னவோபோலிருந்தது. என்னைப்போல முப்பத்தைந்து பொடியங்களுடன் பேசுகிறாளா? அவள்மீது சிறிது கோபம்கூட ஏற்பட்டது.

பொறாமையோ...?!

இருக்கலாம்.

‘‘அவங்களோடை பேசிக்கொண்டு பிறகேன் என்னோடை கதைக்கிறாய்..?”

“என்னடா நீ... சின்னப்பிள்ளைமாதிரிக் கோபிக்கிறாய்... எனக்கு எல்லாரும் பிரண்ஸ்தானேடா... ஆனால்...”

“என்ன ஆனால்..?”

“என்னவோ தெரியேலை... அவங்கள் ஒன்லைன்லை இருந்தாலும்... நீ இருந்தால்... உன்னோடைதான் கதைக்க வேணும்போலை இருக்குடா...”

எனக்குள் எழுந்த கோபம் மாயமாய் மறைந்துவிட்டது.

உச்சியில் பாலாபிசேகம் அவள் வார்த்தைகளால் உருவானது.

“எனக்காகச் சொல்லுறியா?”

“ஐயோ... நம்புடா...”

“சரி நம்புறன்...”

“ஆனால் ஒன்று... சும்மா காதல் என்று நினைச்சுக் குழம்பாதை... சொல்லிப்போட்டன்... பிறகு கவலைப்படுவாய்...”

“ஐயோ...”

“என்ன ஐயோ...”

“என்னைப் பொய் சொல்லச் சொல்லுறியா… நான் உன்னை விரும்புறன்டா… அதுக்காக உன்னை காதலிக்கச் சொன்னனா?”

“லொள்…”

“நீ அதுக்காக கதைக்காமை விட்டுடாதை… பிறகு விசர் பிடிச்சுடும்…”

“பிறகு என்னடா… இப்பவே உனக்கு விசர்தான்டா… காதல் என்று கதைச்சால் பேசமாட்டடன்…”

“அப்ப..?”

“சும்மா ஒரு சிநேகிதியோடை பேசுறமாதிரி கதை…”

“ஐயோ… நீ அப்பிடிக் கதை…”

“லொள்… என்னடா நீ… உப்பிடித்தான் இந்தியாலை இருந்து ஒருத்தன் என்ரை உயிரை வாங்குறான்…”

“அவன் யாரடி?”

“என்னைக் காதலிக்கிறன் என்று மெசன்சரிலை ஒரே கரைச்சல்… மெசன்சரிலை அவனை புளொக்பண்ணினால்… அடிக்கடி மெயில்… அதோடை வொய்ஸ் மெயில் வேறை…”

“அவன் யார் என்று சொல்லு… நல்ல பேச்சுக் கொடுத்துவிடுறன்…”

“லொள்…”

“ப்ளீஸ்டி… அவனோடை நான் பேசவேணும்… அவன் ஓன்லைன் வந்தால் எனக்கு அட்பண்ணு… ஓகே?”

“ஓம்டா.. என்ரை ப்ரண்ட்ஸ் எல்லாரையும் உனக்கு அட்பண்ணத்தானே போறேன்..?”

“எழுபதுபேரையுமா…? அம்மாடியோவ்… வேணாம்… நீமட்டும்தான் வேணும்டா…”

“லொள்… தரன் குட்டி..!!!!”

“என்னடா…”

“கிட்ட வாடா…”

“கிட்டவா?!”

“லொள்… றைற்லை ஒரு ம்மா… லெவ்ற்லை ஒரு ம்மா… லொள்…”

“ஹே… ஹே… என் பிருந்தாக் குட்டி கொஞ்சிட்டாள்… ரொம்பச் சந்தோசம்டி…”

“போடா…”

“ஐயோ… போகமாட்டன்… தந்ததுக்கு பரிசு தரவேண்டாமா… எங்கை அந்த அப்பிள் ரண்டையும் காட்டு…”

“நாயே…”

“அப்பிள் கன்னங்கள் ரண்டையும் காட்டுடி.... ம்மும்மும்மா....”

“லொள்... அதென்னடா ம்மும்மா..?”

“அதுவா... ஹே... ஹே... குறைஞ்சது பத்து நிமிடத்துக்கு கொஞ்சுறேன்...”

“போடா... லொள்...”

“அது சரி... என்னை விரும்பாமை எப்படி ம்மா தருவாய்டி?”

“ஐயோ... ஐ லைக் யூடா... ஆனால் காதல் இல்லைடா...”

“என்னமோ... அந்த வில்லனுக்கு என்ன பெயர்டா?”

“வில்லனா?”

“அதுதான் உன்னை லவ்பண்ணுறேன்னு தொந்தரவு தாறானே... அவனுக்கு...”

“லொள்... லவ்லிபோய்...”

“லவ்லிபோயா... என்ன பெயர் இது?”

“சற் பெயர்டா...”

“கிழிஞ்சுது போ... எல்லாம் லூசுப் பெயர்கள்...”

“லொள்... அப்ப என்ரை பெயர்கள்...”

“ஐஸ்... பிரின்செசின்... அதுவா...?”

“ம்...”

“அது நல்ல பெயர்தான்... அதென்னடி ஐஸ் என்று ஒரு பெயர்..?”

“எனக்கு ஐஸ்கிறீம் விருப்பம்டா... ஒருநாளைக்கு நாலு தரம் சாப்பிடுவேன்...”

“இந்த பத்தென்பது வயதிலா?”

“ஐஸ்கிறீம் சாப்பிட வயதென்னடா... சின்னல்லை இருந்தே ஐஸ்கிறீம் என்றால் உயிர்டா...”

“அப்ப உன் உடம்பு சுவீற் என்று சொல்லு...”

“வாட்..?”

“உடம்பிலை எல்லாம் ஐஸ்கிறீமாத்தானே இருக்கும்?! அதுதான் சுவீற்...”

“லொள்...”

“கனடாவுக்கு ஓடிவந்து கடிச்சுப் பார்க்கணும்...”

“எதைடா?”

“உன் கையை... ஐஸ்கிறீம் இனிக்குதா என்று...”

“போடா... எம்மெம்...”

“அப்பிள் பெண்ணே நீதானோ… ஐஸ்கிறீம் சிலையே நீதானோ…”

“லொள்… முழுக்கப் பாடுடா..”

“இப்ப இல்லை… ஒருநாள் பாடுறேன்… சரியா?”

“என்னவோ… ஏய் எம்மெம் செல்லம்… உனக்கு என்ரை மச்சாளை அட்பண்ணட்டா?”

“மச்சாளா… ஐயோ… இப்பதான் ஞாபகம் வருது… என்ரை மச்சாள் லண்டன்லை இருந்து வரப்போறாள்…”

“யார்டா அவள்… எனக்கு நீ சொல்லேலை…”

“அம்மாடை தம்பி மகள்டா… பெயர் சாருலதா… சாரு என்று கூப்பிடுவோம்… எல்லாரும் ரண்டு கிழமை இங்கை வந்து நிற்கப் போகிறார்களாம்…”

“அதுக்கு என்னடா..?”

“ஐயோ… அவள் சரியான வால்… நான் சற்பண்ணுறதை பார்த்தால் அவ்வளவுதான்… எல்லாரிட்டையும் சொல்லிப்போடுவாள்.. அது தான்டா பயமாக்கிடக்கு…”

“லொள்…”

“சிலவேளை ரண்டு கிழமை சற்றுக்கு வராட்டில் கோபிக்காதை… இப்பவே சொல்லிப்போட்டன்… ஓகே..?”

“உன்னிலை கோபிப்பனாடா... லொள்...”

“எப்படியும் இன்ரர்நெற் கபேலை இருந்தாலும் உன்னோடை கதைக்க ட்ரைபண்ணுவேன்...”

“லொள்... ஐயோ... ரண்டு கிழமை கதையாமல் இரு...”

“என்னடி நீ... அது சரியான கஸ்டம்டா... அது சரி... யார் உன்ரை மச்சாள்... சற் மச்சாளா?”

“உண்மையான மச்சாள்டா... ஒன்லைன்லை நிக்கறாள்... அட்பண்ணவா?”

“ம்... என்ன பெயர்டா அவளுக்கு..?”

“ஜோதி... ஹேய்... அவளுக்கு முன்னாலை டீசன்டா பேசணும்... ஓகே..?”

“டீசன்டாதானே பேசுறேன்...”

“லொள்...”

எனது மெசன்சர் திரையில் ஜோதி புகுந்துகொண்டாள்.

“நீ... ஜோ... ஏய்! நீதான் என் மச்சாளை படிக்கவிடாமல் தொந்தரவுபண்ணுறதா... முட்டாள்... எருமை... வெண்ணை... கவனம்டா... கொன்னுடுவேன்..”

நான் அதிர்ச்சியால் திகைத்துநின்றேன்.




(6)

மனது ஒரு நிலையில்லை.

'எது உண்மை, எது பொய்' எனப் புரியவில்லை.

'யாரை நம்புவது; யாரை நம்பக்கூடாது' எனத் தெரியவில்லை.

எல்லாமே பொய்யா?!

எல்லாம் என்றால்... மனிதன்.. அவனைச் சுற்றியுள்ள அசையும் அசையாப் பொருட்கள்... பேசும் பேசாப் பொருட்கள்.. யாவுமே பொய்யா?!

குழப்பமாக இருந்தது.

நம்பிக்கைதான் வாழ்க்கை என்போர் ஒருபுறம். ‘நம்ப நட, நம்பி நடவாதே’ என்போர் இன்னொருபுறம். இதில் எதை நம்புவது. ‘வாழ்வேன்’ என்ற நம்பிக்கைதானே வாழ்க்கையைக் கொடுக்கிறது?! ‘அசையாமல் தைரியமாக நிற்பேன்’ என்ற நம்பிக்கைதானே உறுதியுடன் நின்று நிதானித்து முன்னேற உதவுகின்றது?!

பூமி சுற்றுகிறது.. அதோடு நாமும் சுற்றுகிறோம். அதனால் நமது அசைவுகளே அந்தரமானவை என நினைத்தால், எவ்வாறு நிரந்தரத்தைப்பற்றிச் சிந்தித்துச் செயலாற்ற முடியும்?!

இதயத்திலிருந்து அன்பு ஊற்றெடுக்கின்றது என நம்பினால், அது அன்பாகத்தானே பொலிந்து பொய்கையாகின்றது?! அதே இதயம் வெறும் இரத்த அழுத்தப் பம்பி என எண்ணினால், அங்கே அன்புக்கும் பாசத்துக்கும் சொந்தங்களுக்கும் இடமேது?!

எண்ணங்கள்தானே நம்பிக்கைகளை ஏற்படுத்தி நாட்களை சுவாரசியாமாக நகர்த்தி எழிலாக்குகின்றன?!

‘நலமாக நடக்கும்’ என்ற நம்பிக்கையுடன் கூடிய முயற்சிகள்தானே நல்லனவற்றின் விளைச்சலுக்குக் காரணமாகின்றன?!

எனது மனக்குழப்பங்களிற்கு நானே சமாதானம் தேடிக் கொண்டிருந்தேன்.

அமைதியாக இருந்த மனமென்னும் குட்டையுள் சிறு கல்லொன்று வந்து விழுந்து, சலனங்களை உருவாக்கிவிட்டதுதான் என் குழப்பங்களுக்கும் அதற்கான சமாதானத் தேடல்களுக்கும் காரணம்.

அந்தக் கல் ஜோதியின் மூலம்தான் வந்தது.

அவள் வார்த்தைகளால் வீசிய சிறிய கல்லானது என்னைக் குழப்பத்தில் ஆழ்த்தி நிம்மதியைத் துரத்த முயன்றது.

“நீ… ஜோ… ஏய்! நீதான் என் மச்சாளை படிக்கவிடாமல் தொந்தரவுபண்ணுறதா… முட்டாள்… எருமை… வெண்ணை… கவனம்டா… கொன்னுடுவேன்…”

முதலில் வந்தவுடன் அவள் பேசிய பேச்சைக் கேட்டுத் திகைத்துப் போனேன்.

பதில் கூறுவதற்குச் சிந்தனை எழ மறுத்தது.

மௌனம்.

“லொள்…” - பிருந்தாதான் சிரித்தது.

“என்ன ஜோ… பயந்துட்டியாடா… சரியான சென்சிடிவ்வா **(sensitive)** இருக்கிறாய்டா… ரேக் இற் ஈசி மான்… **(take it easy Man)"**

ஜோதிதான்.

எனக்குப் பேச்சு வரமறுத்தது.

‘டேக் இற் ஈசியாமே?!’

“ஐயோ...”

“என்ன ஐயோ...”

“லொள்... ஜோதி மச்சாள்... இந்த எம்மெம்முக்கு ஐயோதான் தெரியும்...”

“அது என்ன எம்மெம்...”

“மாங்காய் மண்டை...”

“லொள்...”

“ஜோதி... நீங்க ஏன் அப்படி பேசினீங்க...”

“ம்... அது ஒரு ரெஸ்ற்...”

“ரெஸ்ற்றா..?”

“யா... ரெஸ்ற்தான்... சீரியஸ் ரைப் என்டா உன்னைமாதிரி பேசமாட்டாங்க... லொள்ளுப்பார்ட்டி என்றால் திருப்பி திட்டுவாங்க... வளவள பார்ட்டி என்றால் அட்வைஸ் பண்ணுவாங்க...”

“ஓ... அப்பிடியும் இருக்கா...”

“ம்… ஜோ… இவள் பிருந்தா எந்தநேரமும் சற்… கொஞ்சம் குறைக்கச் சொல்லு…”

“மச்சாள்… தொடங்கீட்டியா… ஜோ… அவள் அப்படித்தான்… நீ கண்டுகொள்ளாதை… லூசி… போடி..”

பிருந்தா சீறினாள்.

“இல்லை… நான் உன்ரை நல்லதுக்குத்தான் சொல்லுறன்… நீ ரொம்ப ஓவர்… உன்ரை வயசுக்கு இது கூடாது… எதுக்கும் அளவு வேணும்… ஜோ… நீ அவளுக்கு அட்வைஸ் பண்ணு… சொல்லிப்போட்டன்…”

தர்மசங்கடத்துடன் மௌனமாக இருந்தேன்.

‘எனது சற் அவளது படிப்பைக் குழப்புகிறதா?’

குற்ற உணர்வு என்னுள் எழுந்தது.

“ஜோதி… ரொம்பப் பேசாதை… என்ரை சந்தோசத்தைக் கெடுக்காதை… பிறகு மச்சாள் என்றும் பார்க்காம உன்னோடை பேசமாட்டேன்…”

“பிருந்தா… நீ பேசாட்டிலும் பரவாயில்லை… உனது ‘கெல்த்’தான் முக்கியம்…”

“ஜோதி… கீப் யு(வ)ர் புறொமிஸ்…”

பிருந்தாவின் கோப மூஞ்சி பட வடிவில் மெசன்சர் திரையில்

சிவப்புப் பொட்டாக தெரிந்தது.

“ஓகே... ஓகே... பட் எதுக்கும் லிமிட்... லிமிட் முக்கியம்... எனக்கு இருபத்தைந்து வயது... உனக்கு...?”

“ஓ... நோ... எனக்குப் பத்தொன்பது வயது... அதுக்கென்ன இப்போ மச்சாள்?”

“லொள்... சரி சரி... நீ பெரிய மனுசிதான்... ஆனால் கவனம்... உன்ரை மச்சாள் நான்... இப்ப நீ போய் படுக்கணும்... ஓகே..? ”

எனக்கு ஜோதிக்கு இருபத்தைந்து வயது என்றதுமட்டும்தான் புரிந்தது.

படிப்பைப்பற்றிக் கதைத்தவள் ஏன் படுக்கைக்குப் போ என விரட்டுகிறாள் எனப் புரியவில்லை. எனினும் அப்போது கனடாவில் இரவுநேரம்தான்.

‘‘ஓகே மச்சாள்... நான் போறன்... கெதியா போய் படுக்கிறன்... நான் கெதியா படுக்கவேணும் என்றதுதானே உனது ஆசை...’’

‘‘ஐயோ... என்ன பிருந்தாக்குட்டி... உன்ரை நல்லதுக்குத்தானே சொல்லுறேன்..?’’

‘‘ம்... மச்சாள் உனக்கு ஒன்று தெரியுமா? உன்னை ஏன் ஜோக்கு அறிமுகப்படுத்தினன் தெரியுமா?’’

‘‘சொல்லு...’’

‘‘சற் பிரண்ட்சிலை நான் அவனிலைதான் ரொம்ப அன்பு வைச்சிருக்கிறன்டி... அதுதான்... நீயும் அவனோடை அன்பாய் கதைக்கணும்... அப்போ திட்டினமாதிரி இனித் திட்டக் கூடாது... ஓகே..?’’

எனக்கு கண்கள் பனித்தன. நெஞ்சு விம்மியது. என்மீது ஒரு ஜீவனுக்கு இவ்வளவு அன்பா?

‘‘நன்றிடா ஐஸ்... நானும் உன்னிலை நிறைய அன்பு வைச்சிருக்கேன்...’’

‘‘லொள்... இவன் பொய் சொல்லுறான்... இவன் அன்பு வைக்கேல்லை... காதல் வைத்திருக்கிறான்... லொள்...’’

‘‘ஐயோ... போடி... போய் படு...’’

பிருந்தா மெசன்சரைவிட்டுப் பறந்துவிட்டாள்.

எனினும் என் மனம் அவளைத் துரத்திப்பிடிக்க முயன்று கொண்டிருந்தது.

அதேவேளை ஜோதிக்கு எனது மனதைக் காட்டியது சங்கடமாக இருந்தது. மௌனமாக இருந்தேன்.

‘‘ஜோ...’’ - ஜோதிதான் அழைத்தாள்.

‘‘டேய்... நீ அவளை காதலிக்கிறியா..?’’

மௌனம்.

‘‘சற்றிலை எப்படிடா காதலிக்க முடியும்... இருபத்தாறு வயதிலை உனக்கு என்ன விசரா?’’

பதில் வரவில்லை. அவள் தொடர்ந்தாள்.

‘‘ஜோ... சற் ஒரு சந்திமாதிரி... நாலு பக்கத்திலை இருந்து வாகனங்கள் வரும்... சிக்னல் சிவப்பானால் நிக்கும்... பச்சையானால் போகும்... சிலது சத்தம் போடும்... சிலது ‘கோன்’ அடிக்கும்... சிலது உறுமும்... வேடிக்கை பார்க்க நல்லாயிருக்கும்... அப்பிடித்தான்... பலரும் வருவாங்கள்... பலவிதமாப் பேசுவாங்கள்... வாழ்க்கையிலை பேச முடியாததை பேசுவாங்கள்... இது எல்லாம் ஒரு நாடக வசனம்மாதிரி... இதை உண்மை என்று நினைக்கிறியா... ?’’

‘‘அப்ப எல்லாமே பொய்யா?’’

‘‘பொய்... பொய்... பொழுதுபோக்குறதுக்காக பேசுற பழகுற பொய்டா... இதை உண்மை என்று எப்பிடி நம்புறாய்..?’’

‘‘இப்ப பிருந்தா பொய்யா... நீ பொய்யா..?’’

‘‘ம்... பிருந்தா... நான்... மச்சாள் என்றது உண்மை... அதுக்காக எல்லாம் உண்மையில்லைடா...’’

‘‘ஐயோ... என்ன உண்மையில்லை...?’’

‘‘நீ நினைக்கிறது எல்லாம் உண்மை இல்லை... சிலது உண்மை... பலது பொய்...’’

“ஐயோ... குழப்புறாய் ஜோதி...”

“லொள்... குழப்புறது நானில்லை... சற்... சற்டா... பிருந்தாவைப் பற்றி உனக்கு என்ன தெரியும்... அவளது படம் பார்த்தியா..?”

“தரமாட்டேன் எண்டுட்டாள்... தான் நினைக்கும்போது நான் கேட்காமலேயே அனுப்புவாளாம்...”

“லொள்... ம்... அனுப்புவாள்... சரி... அவளைப் பார்க்காமல் எப்படிடா காதல்... ஒரு பொம்பிளை சற் பண்ணுறாள் என்றால் உடன காதலா... ? வேற வேலை இல்லை?”

“அப்பிடி மற்றவங்களைபோல நினைக்காதை ஜோதி... நான் வித்தியாசமானவன்... அவளை நான் தேவதையா மனசிலை வைச்சு பூசை செய்யுறன்... உனக்குப் புரியாது... இங்கை ஜேர்மனிலை இல்லாத பெண்களா... அழகா... ஆனால் நான் அவளைப் பார்க்காமலே விரும்புறன் என்றால்... அதை உனக்கு புரியவைக்க தெரியேல்லை... ஆனால் அதைக் கொச்சைப்படுத்தாதை... ப்ளீஸ்...”

“லொள்... கொச்சைப்படுத்தேலை ஜோ... உண்மையைச் சொல்ல முயற்சிக்கிறன்...”

“சற் பொய் என்றால் நீங்கள் ஏன் சற் பண்ணுறீங்கள் ஜோதி..?”

“வெல்... வீட்டிலை ஒருவனோடை கதைத்தால் திட்டுவாங்க... றோட்டில கதைத்தால் நம்ம சனம் வேறைமாதிரி பெரிய கதையெல்லாம் சோடிப்பாங்க... இல்லையா... அதனால சற்றிலை தமிழ் பொடியங்களோடை பேசுறேன்...”

‘‘பேசி என்ன பிரயோசனம்..?’’

‘‘அவங்களைபற்றி... அவங்கட போக்குகளைப்பற்றி... குணங்களைப்பற்றி ஓரளவாலும் ஸ்ரடி பண்ணலாம்...’’

‘‘ஸ்ரடி பண்ணி?’’

‘‘யாரோ ஒரு பொடியனோடை வாழப்போறன்... அதுக்கு இது உதவும்தானே... ? லொள்...’’

‘‘பொய்யிலே ஒரு படிப்பு. ஆகா... வேடிக்கையாக இருந்தது. எனினும் வித்தியாசமான சிந்தனையாகவும் இருந்தது. அதேநேரத்தில் ஆண்களெல்லாம் பெண்களைக் கண்டு பல்லிளிப்பவர்களென்று படிப்பு முடிவாக்கிவிடுமோ என்று அச்சமாகவுமிருந்தது.

“ஜோ...”

“ம்... சொல்லுங்க...”

“போகணும்... அதுக்கு முன்னாலை ஒன்றே ஒன்று சொல்லுறேன்... பட் சத்தியமா பிருந்தாட்டைச் சொல்லக்கூடாது... ஓகே?”

“ம்... சொல்லமாட்டேன்...”

“அவளை காதலிக்க முதல் அவளின்ரை உண்மையான வயதைக் கேளுங்கோ...”

“என்ன ஜோதி... அப்போ பத்தொன்பது வயது இல்லையா? எத்தினை வயது?”

அதிர்ச்சியாக இருந்தது.

எண்ணக் கற்பனையில் தினமும் ஒரு கனவென்ற கல்லெடுத்து எழுப்பிய காதல் மாளிகையில் சிறு நடுக்கம் ஏற்பட்ட பிரமை.

“அதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கோ... பிறகு காதலிப்பதைப் பற்றி முடிவு செய்யலாம்... சீ யூ...”

பதிலுக்குக் காத்திராமல் ஓடிவிட்டாள்.

சிந்தை குழம்பிவிட்டது.

மனம் என்ற குட்டையில் அவள் எறிந்த வயதென்ற சிறிய கல் சஞ்சலங்களை உருவாக்கி என் நிம்மதியைத் தொலைக்க ஆரம்பித்து விட்டது.

அவளின் வருகைக்காக... நான் காத்திருந்தேன்.

ம்... அவள் வருவதற்கிடையில் சாரு வந்துவிட்டாள் தனது பெற்றோருடன்.

❍❍❍




(7)

கடந்த இரண்டு நாட்களாகவே அம்மா சந்தோசமாக இயங்கிக் கொண்டிருந்தாள்.

சாரு குடும்பம் வந்த சந்தோசம் அவளுக்கு.

சாருவை இறுதியாகப் பார்த்து மூன்று வருடங்கள் இருக்கும். இந்த மூன்று வருட காலத்தில் அவளிடம்தான் எத்தனை மாறுதல்கள்..?!

கன்னங்கள் சதை பிடித்த மாங்கனிகளாக மினுங்க, செதுக்கி

வைத்த மெழுகுப் பொம்மையாக அழகாக இருந்தாள்.

பூக்களில்தான் எத்தனை விதம்? ஒவ்வொன்றும் தனிரகம். எல்லாமே பூக்கும் காலத்தில் தனித்துவமான அழகுடன்தானே பொலிகின்றன?

அந்த தனித்துவம் சாருவிலும் தாராளமாகவே விளைந்திருந்தது.

அவளது தோற்றத்தில் பெரிய மனுசித் தோரணை அந்த இருபத்தொரு வயதில்..!

உருவம்தான் பெரிய மனுசியாகக் காட்டியதே ஒழிய, உள்ளம் என்னவோ முன்புபோலத்தான். அலைபாயும் கண்கள் வீட்டின் மூலை முடக்கெல்லாம் சுழன்றுகொண்டிருந்தன. அதிலே எதையாவது ஆராயத் துடிக்கும் பரபரப்பு. அந்த ஆராய்ச்சிக்குப் பயந்து கொம்பியூட்டரின் பக்கம் போவதையே இரண்டு நாட்களாக நிறுத்திவிட்டேன்.

அவளது தேடலில் எனது பிருந்தாவின் ‘ஐடி’ தெரிந்து... அதைப்பற்றிய ஆராய்ச்சியில் அவள் இறங்கினாள் என்றால்... முடிவு அம்மாவரைக்கும் போய், ஆயிரம் கேள்வி விசாரணை வித்தாரங்களால் ‘என்னென்ன விளைவுகள் ஏற்படுமோ?’ என்ற அச்சம்தான் காரணம்.

எனினும் என் பிருந்தாவின் நினைவு என்னை வாட்டி வதைத்தது.

இனிய வசந்தம் என் மனதை வருடும் சுகமிழந்து தவித்தேன்.

விரிந்து கிடக்கும் யன்னலால் தென்றல் நுழைந்தாலும் புழுக்கம்

போகவில்லை. அது வசந்தத்தின் ஏக்கத்தில் மனதைச் சுட்டெரித்தது.

‘என் அரும் சகியே.. நான் வருவேன் என்று காத்திருந்தாயா?’

‘என்னைக் காணாத ஏமாற்றத்தில் சீற்றமுற்றாயா?’

சிந்தனைகளுள் சிக்கித் தவித்தேன்.

‘நீ எப்படிக் காத்திருப்பாய்.. என் மனதில்தானே எந்நேரமும் இன்பராகம் மீட்டிக்கொண்டிருக்கிறாய்... சீற்றமென்ன செல்லமே... உன் செவ்வாயாக வதனம் நிறம்காட்டி என்னை மோகனன் ஆக்கவா.. செல்லமே... என் இனிய கனவுகளின் கதாநாயகியே... என் சுவாசிப்பின் நறுமணமே... எனக்குத் தெரியாதா உன்னை... என் மன அதிர்வுகளை நீ உணர்ந்துகொண்டுதானே இருக்கிறாய்..? தூங்கும் பொழுதில் மூடும் என் விழிகளில் ஓடிவந்து பட்டுப் பாதம் பதித்து காதோடு நீ கனிரசம் பிழிவதை நான் இரசித்துக்கொண்டுதானே அதில் குளிக்கிறேன்... இரு நாட்களல்ல... இரு யுகங்கள்தான் எம்மை பிரித்துவிட முடியுமா என்ன?!’

எண்ணக்கிளர்வுகளும் கற்பனைகளும என்னைத் தாலாட்டின.

“அத்தான்...”

சத்தம்கேட்டுச் சுயநினைவடைந்தேன்.

இனிமையான நினைவுகள் இடையறுந்த எரிச்சல் குமிளியாகி... நிதானித்து வெடித்து மறைந்தது.

சாருதான்... அவளும்தான் என்ன செய்வாள்? இரண்டு நாட்களாக

அம்மாவின் விடுப்பும் விசாரணைகளுமாக வெளிவந்த கேள்விகள் அவளைப் படாதபடுத்திச் சலிப்படைய வைத்திருக்கும்.

“அத்தான்... என்ன சோகம்?’’

“இல்லையே..!’’

“ஏதோ கவலையா இருக்கிறமாதிரித் தெரியுது... நான் வந்தது பிடிக்கேலையா?’’

“சொன்னனா... எதையெதையோ கற்பனை செய்துகொண்டு காரணமும் சொல்லுறாய்...’’

“நீ முந்திமாதிரி இல்லை... என்கூட சரியாவே கதைக்கிறாய் இல்லை... இந்த ரண்டு நாளா கவனிச்சுக்கொண்டுதான் இருக்கிறேன்... கேட்கிற கேள்விக்குமாத்திரம் பதில் சொல்லிப்போட்டு... அங்கால போறாய்...”

அவள் சொல்வதும் உண்மைதான்.

நான் முன்புபோல இல்லைத்தான். எனக்கே புரிந்தவிசயம்தானே?! வலிய இயல்பை வலிந்தழைக்க முற்பட்டுத் தோல்வியையே சந்தித்துக்கொண்டிருந்தேன்.

முன்புபோல நண்பர்களுடன் சுற்றுவதை... அரட்டை அடிப்பதை... எல்லாமே குறைத்துவிட்டேன்.

நிதமும் எப்போது கணனியைப் போடுவேன்... மெசன்சரைத் திறப்பேன்... என் பிருந்தாவுடன் பேசுவேன் என்ற சிந்தனைதான்.

பிருந்தாவையே சுற்றிக் கொண்டிருக்கும் மனதை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. அன்று ஜோதி சொன்னதைக்கூட என் மனம் ஏற்க மறுத்தது. அவளது வயது பொய்யாக இருக்கமுடியாது என்று திரும்பத் திரும்ப நம்பவைக்க முயன்றது.

எனினும் அவளிடமே கேட்டுவிட வேண்டும் என்ற ஆதங்கமும் அதிகரித்துக்கொண்டுதானிருந்தது.

அமைதியற்றுத் தவிக்கும் எனக்கு மேலும் இடையூறாக இவள்... சாரு... எனக்கே சிலவேளை என்னில் வெறுப்பாகத்தான் இருந்தது.

சாருவின் மேல் வெறுப்புற அவள் என்ன தவறு செய்தாள்?

ம்.. என்னவோ... என்னை மாற்றமுடியாமல் அவதிப்பட்டேன்.

“சாரு... அப்படி எதுவும் இல்லைடி... நீ இப்ப பெரிய பெண்தானே... இருபத்தொரு வயது... முந்திமாதிரி பழக முடியாது... சும்மா இரு...’’

சமாளித்தேன்.

“ஐயோ... லண்டனிலைதான் சுதந்திரமில்லை... இங்கை உன்கூட ஜாலியாப் பொழுது போக்கலாம் என்று வந்தால் நீ சுத்த போர்டா...”

சிணுங்கினாள்.

“லண்டனிலை சுதந்திரம் இல்லையா..?”

“ம்... இந்த டாடியும் மம்மியும் சரியான மோசம்... நேரத்துக்கு வீட்டை வரணும்... யாராலும் ரெலிபோன் பண்ணினா யார்... எதுக்கு

என்று ஆயிரம் கேள்வி... அப்பப்பா... இதுகள் திருந்தாதுகள்... என்னையும் திருந்தவிடாதுகள்..."

எனக்குச் சிரிப்பாக இருந்தது.

ம்.. நாடு மாறினாலும் கட்டுப்பாடுகளை அதற்கேற்றமாதிரித் தளர்த்த விரும்பாத மனிதர்கள்..!!

"என்ன நீ பொய் சொல்லுறாய்... இப்ப நீ 'கொஸ்ரல்'லதானே இருந்து படிக்கிறாய்..?"

"அங்கையும் ஒவ்வொருநாளும் ரெலிபோன் எடுத்து ஆயிரத்தெட்டு கேள்விகள்... இதுகள் சிறீலங்காமாதிரி லண்டனையும் நினைக்குதுகள்."

அலுத்துக்கொண்டாள்.

இருவேறுபட்ட கலாச்சாரத்துக்குள் தமது வாரிசுகளின் எதிர் காலத்துக்குப் பாதுகாப்பரண் அமைக்க முயலும் வந்தேறுகுடிகள். அவர்களின் பாதுகாப்பரண்களைச் சிறையாக எண்ணித் தகர்க்க முயலும் முகவரியறியாத வாரிசுகள்.

வேடிக்கையான வேதனைகள். மாற்றமுடியாத மாற்றீடுகள்.

இலக்குத் தெரியாத இலட்சியத் தோற்றங்கள்.

"ஏன் சாரு... இப்படியான கரைச்சல்களால்தானே இப்ப கன பெண்கள் கணனியைத் தஞ்சமடைஞ்சிருக்கினம்..."

“என்ன..?”

வியப்புடன் பார்த்தாள்

“இல்லை... வெளியிலை பழக... பேச முடியாத கட்டுப்பாடுகளாலை தானே ‘சற்’றிலை கனபேர் கதைக்கினம்... பகிடி விடீனம்...”

“ஐயோ... அத்தான்... நீயும் ‘சற்’பண்ணுறியா... மாமி சொன்னவ. நீ கொம்பியூட்டரோட கிடக்கிறாய் என்று... அதைப்பார்த்து விசரன்மாதிரி அடிக்கடி சிரிக்கிறாய் என்று கவலைப்பட்டவ... அப்பவே நினைச்சனான்... ‘சற்’பண்ணுறாய் என்று...”

“ம்... ‘சற்‘பண்ணினால் என்ன... அதிலை என்ன தப்பு?”

“தமிழ் சனங்கள் ‘சற்’றில உருப்படியா என்ன பண்ணுதுகள்... வெறும் காதலும் கெட்ட வார்த்தையளும்தானே?”

எனக்குச் ‘சுருக்’கெனத் தைத்தது.

“வீட்டிலை கதைக்க முடியாத குப்பைகளை ‘சற்’றிலை கொண்டு வந்து துணிவாய் கொட்டுதுகள்... ஒருநாளோடை நான் ‘சற்’ பக்கமே போறேல்ல...”

சாருவின் வார்த்தைகள் முகத்தில் அறைந்தன.

நான் மனக் குறுகுறுப்புடன் தவித்து நின்றேன்.

❑❑❑

அன்று அம்மா என்னருகே வந்து அமர்ந்துகொண்டாள்.

ஏதாவது விசயம் இருந்தால்தான் அப்படி வருவாள்.

“தரன்... சாருவை கூட்டிக்கொண்டு வெளியாலை போவிட்டு வாவன்...”

“நீங்கள் கூட்டிக்கொண்டு போங்கோவன்...”

“என்ன பிள்ளைடா நீ... இருபத்தாறு வயசாகுது... ஏன்தான் இப்பிடி இருக்கிறியோ தெரியேலை... அவளை நாலு இடத்துக்கு கூட்டிக்கொண்டு போய் காட்டன்...”

“வயதுக்கும் அவளைக் கூட்டிக்கொண்டுபோய் சுத்திக்காட்டுறதுக்கும் என்னம்மா சம்பந்தம்?”

“ம்... அவள்தானேடா உன்ரை வாழ்க்கை முழுதும் உனக்கு துணையா வரப்போறவள்... அவளை வெளீலை கூட்டிக்கொண்டு போகாமை ஆரைக் கூட்டிக்கொண்டு போகப்போறாய்...? நல்ல அறிவுகெட்ட பிள்ளையும் அறிவுகெட்ட கேள்வியும்..”

செல்லமாகக் கடிந்துகொண்டவளை அதிர்ச்சியுடன் பேச்சுவராத இயலாமையுடன் நோக்கினேன்.

❍❍❍




(8)

சாருவின் முகத்தில் பூரிப்புப் பொங்கி வழிந்தது. அடிக்கடி தோளில் அலையாகப் புரண்ட கூந்தலை வலக்கரத்தால் ஒதுக்கியவாறு, எனக்கெதிரே அமர்ந்தவாறு என்னையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தாள்.

“என்ன அப்படிப் பார்க்கிறாய் சாரு..?”

“ம்... இன்றைக்காலும் இப்பிடி வர ஒரு ‘சான்ஸ்’ கிடைச்சுதே... அதுதான்...”

அர்த்தமாகப் பார்த்தாள்.

“என்ன சாரு... கேலியா... இவ்வளவுநாளும் ஒரு இடமும் கூட்டிக்கொண்டு போகேலை என்ற வருத்தமா? சொறி...”

“ஒவ்வொரு ‘போய்ஸ்’ ஒரு ‘கேளோட’ வெளிய போறதெண்டா சந்தோசப்படுவாங்கன்னு கேள்விப்பட்டிருக்கேன்... இங்க தலைகீழா இருக்கு... மாமி சொல்லித்தானே வந்தீங்க..?!”

சிட்டுக்கள் இரண்டு சிறகடித்தாற்போல விழிமடல்கள் படபடக்க, அவள் கூறியவற்றில் ஏதோ அர்த்தம் புதைந்திருப்பதாகத் தென்பட்டது.

‘சிலவேளை அன்று அம்மா சொன்னமாதிரி... என் வாழ்வில் இணையும் எண்ணம் இவளின் உள்ளத்திலும் உள்ளதோ?!’

‘அவ்வாறு ஒரு எண்ணக்கிளர்வுடன்தான் இலண்டனிலிருந்து வந்தாளா?’

மனதுக்குக் கஸ்டமாக இருந்தது.

‘என் மனம் பிருந்தாவிடம் பறிபோனதை இவளுக்கு எவ்வாறு கூறுவது... முகம் தெரியாத ஒருத்திக்காக என் நேரத்தை கொம்பியூட்டருடன் கரைப்பதை... என் ஏனைய உணர்வுகளைக்

கரைத்து காதல் உணர்வில் மூழ்கித் தத்தளிப்பதை இவளிடம் சொன்னால்... சாருவின் பிரதிபலிப்பு எவ்வாறு இருக்கும்?!'

மனதிலே பிறந்த எண்ணக் குவியல்களால் என் சிந்திக்கும் அறிவு, வானத்திலே பிரகாசித்த ஒளி குறைவதைப்போல மங்கிக் கொண்டிருந்தது.

பறவைகள் சில எதையோ தொலைத்துவிட்டாற்போல அலறியவாறு எங்கோ விரைந்துகொண்டிருந்தன... என் மனதைப்போல... ஆம்... சாரு வந்ததிலிருந்தே பிருந்தாவைக் காணாது என் மனம் இருளில் ஒரு ஒளித்துகளாவது கிடைத்து பிருந்தாவை அடையாளங்காட்டாதா என்ற விரைதலில்தானே?!

அது ஒரு ஆற்றங்கரை.

பெரியோர்களும் சிறியோர்களும் காதல் ஜோடிகளுமாக ஒரே கலகலப்பு.

சைக்கிள் ஓடி உடற்பயிற்சியில் ஈடுபடுபவர்கள் ஒருபுறம். உதைபந்தாட்டம் என்ற போர்வையில் புற்களூள் பந்தை உருட்டி விளையாடும் சிறுவர்கள் ஒருபுறம். சூழல் மறந்து இதழோடு இதழ் சேர்த்து உரசலில் உல்லாசம் காண்போர் ஒருபுறம். மேனி தளர்ந்தாலும், தோல் சுருங்கினாலும், வாழ்வு முடியும் தருணத்திலிருந்தாலும் அருகருகே அமர்ந்து, கனிவாகக் கதைகள் பேசித் தோளில்தட்டி வாய்விட்டுச் சிரிக்கும் முதிய தம்பதிகள் ஒருபுறம்.

இவர்களிடையே அந்த அந்திசாயும் நேரத்தில் ஆற்றங்கரையோரத் திலே 'சில்'லென்ற இதமான காற்று உடல்வருட நானும் சாருவும்..!!

“சாரு...!”

“ம்...”

“காதலைப்பற்றி என்ன நினைக்கிறாய்..?”

அவள் இதை எதிர்பார்க்கவில்லை என்பதை முகம் துல்லியமாகக் காட்டியது.

ஒரு கணம் தயக்கம்... மறுகணம் பிரகாசம்.

அரும்பு இதழ்களின் இடையே மெல்லிய முத்துப்பல் ஒளிக்கீற்று.

“பரவாயில்லையே... காதலைப்பற்றியும் கேட்கத் தோன்றுதே?”

சலனமில்லாமல் ஓடும் நதியைப் பார்த்தவாறு கூறினாள்.

“இல்லை சாரு... ஒரு பெண் காதலைப்பற்றி என்ன நினைக்கிறாள் என்று அறியவேண்டாமா?”

“இதில என்ன ஆண் பெண்... ஒவ்வொருத்தர் ஒவ்வொருமாதிரி நினைப்பினம்... நான் நினைக்கிறன்... வாழ்க்கையிலை அதுவும் ஒரு ‘இன்ரறஸ்டிங்’கான ‘சப்ரர்’...”

“சுவையான அத்தியாயம்... அது எப்பிடி ஆரம்பிக்கும்..?”

‘கொல்’லெனச் சிரித்தாள்.

“என்னடா... ஆராய்ச்சியா... ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருத்தரை

ஒருத்தருக்குப் பிடிச்சா ஆரம்பிக்கும்…”

“ஒருத்தரை ரண்டுபேருக்குப் பிடிக்காதா என்ன..? இல்லை ரண்டுபேரை மூன்று பேருக்குப் பிடிக்காதா என்ன..? அது காதல் இல்லையா..?”

“அட கடவுளே… ஏன்தான் உன்ரை புத்தி இப்பிடிப் போகுதோ..? ‘சற்’றிலை இருந்து சரியாதான் கெட்டுப்போனாய்…”

முகத்தைச் சுழித்துக்கொண்டாள்.

தொடர்ந்தாள்.

“காதல் என்றால் ஒருத்திக்கு ஒருத்தன்… அதுதான் காதல்… அதுக்குமேலை எல்லைதாண்டினால் காமம்…”

“அதைவிடு… காதல் உருவாகுறதுக்கு என்ன காரணம்..?”

“அழகு… கவர்ச்சி… இதுக்கும்மேலை மனம்… இப்பிடிக் கனக்க இருக்கே…”

“ஏன்… சந்தர்ப்பங்கள்… சூழ்நிலைகள் காரணமில்லையா?”

“எப்பிடி..?”

“சின்னப்பிள்ளைகளா இருக்கேக்கை தாய் தகப்பன் ‘இவன் இவளுக்குத்தான்’ எண்டு சொல்லுறது..?”

“ம்…”

“ஆனால் இதைக் காதல் எண்டு சொல்லேலாது சாரு... இது ஒரு மனோவசியம்...”

அவள் கண்களை ஊடுருவினேன்.

“அப்படி எண்டா..?”

“கிட்டடத்தட்ட மூளைச்சலவைமாதிரி... இயல்பாக வாற காதல் வேறை... இப்பிடி மூளைச்சலவையாலை வாறது வேறை...”

அவள் கண்களில் சிறு சலனம் தோன்றி மறைந்தது.

அவளுக்கு ஓரளவாவது என்னைப்பற்றிப் புரியவைக்க வேண்டும். அம்மா நினைப்பதுபோல அவளும் என்னை தன் வாழ்க்கைத் துணையாக எண்ணக்கூடாது என்ற எண்ணத்தில் பேச ஆரம்பித்தேன்.

“சில தாய் தகப்பன் பிள்ளைகளுக்கு சின்ன வயசிலேயே வாழ்க்கையை தீர்மானிச்சுவிடுகினம். அதை சாடைமாடையாக சொல்லியும் காட்டுவினம்... சில பிள்ளைகளின்ரை மனசிலை பதிஞ்சுடும்... ஆனால் இது பலசமயங்களிலை ஏமாற்றத்திலைதான் முடிஞ்சிருக்கு... இல்லையா?”

காற்றில் பறந்த கூந்தலை ஒதுக்கியவாறு என்னை ஏறிட்டுப் பார்த்தாள்.

“நீ என்னமாதிரி..?”

“அப்படியெண்டால்..?”

“நீ யாரையாவது காதலிக்கிறியா..?”

நேரடியாகவே கேட்டாள்.

‘சொல்லலாமா... என் ‘சற்‘ நாயகியைப்பற்றி..?! என்னில் அன்பால் உருகும் அந்த ஐஸ்கிறீம் சிலையைப்பற்றி...’

எதுவோ தடுத்தது. கூறுவதால் ஏற்படும் விளைவுகளுக்குத் தயாராகாத நிலைப்பாடாக இருக்கலாம்.

“நீ நினைக்கிறமாதிரி இல்லை சாரு...”

குற்ற உணர்வுடன் அவளைப் பார்க்காமல் கூறினேன்.

‘சற்‘றிலைதான் பொய் கூறுவார்களாம்.. நான் ‘சற்’றுக்காக அவளிடம் பொய் சொன்னேன்.

“நீ சுத்த மோசம்டா அத்தான்... ஒரு ஐஸ்கிறீம் வாங்கித் தரக்கூடாதா?”

சற்றுத் தொலைவில் இருந்த ஐஸ்கிறீம் கடையைச் சுட்டிக் காட்டினாள்.

“சரி... வாங்கினால் போச்சு...”

“ஒரேயொரு ஐஸ்கிறீம்...”

“ம்...”

“நீ பாதி... நான் பாதி...”

குதூகலத்துடன் கூறினாள்.

“நோ...”

‘என்னில் பாதி என் ஐஸ்கிறீம் சிலையல்லவா?’

சொல்லத் துடித்தேன். மெல்ல விழுங்கினேன்.

“என்ன நோ...?”

“எனக்கு ஐஸ்கிறீம் பிடிக்காது... நீயே சாப்பிடு...”

பிருந்தா கைகொட்டி ஏளனமாகச் சிரிப்பதுபோலிருந்தது... என் மனதுக்குள்தான்.

❍❍❍




*(9)*

திடீரென விழிப்பு வந்தது.

நேரத்தைப் பார்த்தேன். அதிகாலை இரண்டு மணி.

எங்கும் மயான அமைதி... என் மனதைத் தவிர.

ஒரு கிழமையாக என் பிருந்தாவுடன் பேசவில்லை. ஒரு யுகம்போலிருந்தது. கணனியைத் தொட்டால்தானே பேசுவதற்கு?!

தண்ணீரில் முதன்முதலா குதிக்கும்போதுதானே குளிருமோ என்ற பயம்? இப்போதான் சாருவுக்கும் நான் 'சற்'பண்ணுற விடயம் தெரிந்துவிட்டதே.

ஓரளவு துணிவு பிறந்தது... முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கென்றமாதிரி.

கணனியைத் தொடுவதற்கக் கை துருதுருத்தது.

‘தொடுவோமா?’

‘என் பிருந்தா ஒன்லைனில் இருப்பாளா?!’

ஆவல் அடக்கம்விடுத்து எழுந்தாடியது.

வீட்டினுள்ளே நோட்டமிட்டேன்.

எல்லோரும் அமைதியாக உறங்குகிறார்கள். நான்மட்டும் உறங்காத விழிகளுடன் பிருந்தாவைக் காணாத ஏக்கத்தில்..!

கணனியை அழுத்தினேன்.

யன்னல் ‘மைக்ரொசொவ்‘ரை அடையாளம் காட்டி வழிவிட்டது.

மெசன்சரை அழுத்தினேன்.

அதிலே ஒரேயொரு பெயர்மட்டும் பச்சைப் பொம்மையாய் வர்ணம் காட்டியது.

சுதா..!

அவளுடன் பேசும் மனநிலையில் நான் இல்லை.

ஜேர்மனியில் அதிகாலை இரண்டு மணி என்றால் கனடாவில் இரவு எட்டு மணி இருக்கும்.

பிருந்தா எங்கே? படிக்கிறாளோ? அல்லது கடந்த ஒரு வார காலமாகக் காத்திருந்து, காத்திருந்து ஏமாற்றத்தால் சலிப்படைந்து

மெசன்சர் பக்கமே எட்டிப் பார்க்காமல் உள்ளாளோ?

மெயில் பெட்டி சமிக்ஞை காட்டியது.

‘எலி’ அங்கே விரைந்து சென்று அழுத்த… அங்கே ஒரு மெயில்.

ஓ.. என் பிருந்தாக்குட்டியின் மெயில்தான்.

ஆகா… மனதில் குதூகலம் வெண்பனி மழையாய் ‘சோ’வெனக் கொட்டியது.

‘ஹீ தரன்… எப்படி சுகம்டா… நான் நல்லாருக்கேன்டா… மச்சாள் வந்திட்டாளா… கியூற்றா? அதான் என்னை மிஸ் பண்ணிட்டியா… அவள்கூட சுத்துறியா? அவளுக்கு ‘ஐஸ்’ வைக்றியாடா… அவளை ‘லவ்’பண்றியா? என்னை மறந்துட்டியாடா… எனக்கு பொழுது போகலடா… எல்லாரும் சும்மா ‘போர்’டா… ஒரு மெயில்கூட போடக்கூடாதா? மச்சாளைக் கண்டதும் என்னை மறந்துட்டியாடா… எம்மெம்… நீ மறந்தாலும் நான் மறக்கமாட்டேன்டா… ஏன் தெரியுமா.. நீதான் என்ர பெஸ்ற் பிரண்ட்.. லொள்… பாய் பாய்டா… யுவர் டியரஸ்ற் பிருந்தா…’

சோர்ட் அண்ட் சுவீற்றாய் ஒரு மெயில்.

இது குறும்பா கோபமா… குழப்பமாக இருந்தது.

எனினும் ஒரு பூரிப்பு.

‘நீதான் என்ர பெஸ்ற் பிரண்ட்..’

திரும்பத் திரும்ப வாசிக்கத் தோன்றியது.

அந்த நாலு சொற்களில் நாலாயிரம் கற்பனைப் பூக்கள் களமிறங்கி.. சரசமாடி. சரமாகி அவள் கழுத்தை நாடி மணப்பெண்ணாக்க... நான் மாப்பிள்ளைக் கோலத்தில்!

அந்த இனிய கனவின் சுகமான ராகத்தின் புளகாங்கிதத்தில் பதில் எழுத ஆரம்பித்தேன்.

'என் மனதில் குடிகொண்டவளே! உன்னை மறந்தால்தானேடா நினைப்பதற்கு... துளித்துளியாய் உன் அன்பை உருக்கி என்னை நனைக்கும் என் ஐஸ்கிறீம் சிலையே! உன்னில் உருகி வழியும் அன்புத் துளிகள் என் இதயத்தில் பட்டுத் தெறித்து 'டிக், டிக்' என ஒலி எழுப்புவதை அறிவாயா? அந்த ஒலியில்தானே நான் மூச்சுவிடுகிறேன்?! உன் மெயில் கண்டதும் தமிழ்கூடத் தன்னை அழகுபடுத்த விரும்புகிறது... உனக்குத்தான் விளங்குமோ தெரியேல்லைடா... என்னவோ என்னை விளங்கிக்கொள்ளடா என் செல்லமே... என் நினைவுகளில் தித்திப்பவளே! நான் உன் அருகில்தானே இருக்கிறேன்... அதனால்தானோ என்னவோ... ஏனையவை உன் அழகுக்கு முன்னால் மங்கலாகத்தான் மிளிர்கின்றன... என் மச்சாளும்தான்... அன்புடன் தரன்.'

மெயில் என் உணர்வுகளின் அடையாளத்தை அள்ளிச் சென்றது.

சுதா இன்னும் 'ஒன்லைனி'ல்தான்..

அவளது பெயரை அழுத்த, மெசன்சர் யன்னல் கணனித்திரையில் விரிந்தது.

“ஏய் சுதா!’’

“என்னடா அண்ணா… எங்கடா போனாய்? ஒரு கிழமையா காணலை…’’

“ம்… அதுவா… ‘விசிட்டர்ஸ்’ தொல்லைடா…’’

“ஓ… மச்சாள் தொல்லையா…’’

“உனக்கு எப்படித் தெரியும்…?’’

“ஐஸ்தான் சொன்னாள்… நீ அவளைக் கலியாணம் கட்டப் போறியாமே?’’

“ஐயோ… மொக்கு… அப்பிடிச் சொன்னாளா… நானாவது அவளைக் கட்டுறதாவது… எரிச்சலைக் கிளப்பாதை…’’

“லொள்…’’

“ஐஸை எப்போ பார்த்தே… இன்னிக்கு வந்தாளா?’’

“ஓ… அவளைக் கேட்கத்தான் என்னைக் கூப்பிட்டியா… போடா… சொல்லமாட்டேன்…’’

“ப்ளீஸ்டி.. என் தங்கச்சிதானேடி…’’

“ம்… என்ன எனக்கு ஐஸா? போடா…’’

“ப்ளீஸ்டி குட்டி.. என் தங்கச்சிக்குட்டி…. சொல்லடி…’’

“முதல்ல நான் கேட்குறதுக்கு பதில் சொல்லு… பிறகு யோசிப்போம்…’’

“ஐயோ…’’

“என்ன ஐயோ… பதில்… பதில்…’’

“சரி… கேட்டுத் தொலை…’’

“நீ ஐசை ‘லவ்’பண்றியா?”

“ஐயோ…”

“எப்ப பார்த்தாலும் ஐயோதானா… அவளைக் காதலிக்கிறியா… பதில்… பதில்…”

“ஏன் கேட்கிறாய்?”

“ஒருத்தன் என்னோட அழுறான்டா அண்ணா… நீ அவளைக் காதலிக்கிறியாம்… தன்னோட அவள் சரியா முந்திமாதிரி பேசுறதில்லையாம்…”

“யார்..?’’

“என்ர செல்ல தம்பி… லவ்லிபோய்…”

“அவனா… இந்தியால இருந்தா..?’’

“அவன் ஒருநாளைக்கு ஒரு நாடு சொல்லுவான்டா… லவ்லிபோய்

அவன்ர நிக்... ஐஸ் சொல்லலையா?’’

“சொன்னவள்... தன்னை காதல் என்று தொந்தரவு செய்யுறதாய் சொன்னவள்...’’

“லொள்... அவன் சொல்லுறது உண்மையா... நீ அவளை ‘லவ்’பண்ணுறியா?’’

“ம்... நான் அவளை ‘லவ்’பண்ணுறேன்...’’

“ஐயோ... பாவம் லவ்லிபோய்டா...’’

“ஐயோ... அவன் என்ரை வில்லன்...’’

“அப்பிடி சொல்லாதைடா... என்ர செல்ல தம்பி... ஓன் லைன்ல இருக்கான்... ‘அட்’ பண்ணவா..?”

“றியலி...? ‘அட்’ பண்ணு... அவளை தொந்தரவு செய்யாதைடா என்று சொல்லணும்...’’

“லொள்...’’

லவ்லிபோய் மெசன்சர் யன்னலுள் புகுந்தான்.

“ஹலோ அண்ணா...’’

“அண்ணாவா..?’’

“இருபத்தாறு வயசெண்டா அண்ணாதானே... எனக்கு இருபத்தி

ரண்டு...''

"மச்சான் என்று சொல்லு...''

"ஏன் அண்ணா?''

"ஐஸுக்கு அண்ணன் எனக்கு மச்சான்தானே?''

"லொள்...'' - சுதா சிரிப்பு அடையாளம் காட்டினாள்.

"முடியாதுடா... ப்ளீஸ்டா... அவளை விட்டுடடா... அவளை நான் காதலிக்கிறேன்டா அண்ணா... அவளின் வயது எனக்குத்தான்டா பொருத்தம்... உனக்கு வயது கூடடா...''

நான் கோபத்தின் உச்சிக்குச் சென்றுகொண்டிருந்தேன்.

❍❍❍




(10)

ஏனோ தெரியவில்லை. அவன்மேல் எரிச்சல் ஏற்பட்டது என்னவோ உண்மைதான்.

அந்த 'லவ்லிபோய்'மேல்தான்.

'அவள் எனக்குமட்டுமே... எனக்காகவே' என்ற சுயநலம் என்னுள் புகுந்துகொண்டது.

அதனால் அவன்மீது எரிச்சல்... சினம்.. ஆத்திரம்..!

ஆனால் அவனோ என் கோபத்தை ஒரு பொருட்டாகவே

எடுப்பதாகத் தெரியவில்லை.

‘அண்ணா... அண்ணா...’ என்று அடிக்கடி மெசன்சரில் வந்து என் உணர்வுகளைச் சூடாக்கிக்கொண்டிருந்தான்.

“டேய்... இப்பிடிக் கரைச்சல் கொடுத்தியென்றால்... உன்னை ‘புளொக்’பண்ணிடுவேன்... சொல்லிட்டேன்.”

தொல்லை தாளாமல் கூறினேன்.

“ஹீ... ஹீ... நல்லா ‘புளொக்’பண்ணுடா... பரவாயில்லை... ஆனால் விசரன்மாதிரி காதல் கீதல்னு உன்ரை வாழ்க்கையை நாசம் பண்ணிடாதை...”

“அட்வைசா... அட்வைஸ் என்று குழப்புறதுக்கு எத்தினை பேர் வெளிக்கிட்டிருக்கிறீங்கள்? ஐஸ் என்னோட பேசுறது உனக்கு பிடிக்கேலை... அதுக்குத்தானே இந்த அட்வைஸ்?”

“போடா அண்ணா... என்னடா நீ இப்பிடி அப்பாவியா இருக்கிறாய்? ‘சற்’றிலை ஒருத்தி பேசிட்டாளாம்... அவளுக்காக இவர் அலையுறாராம்... சுத்த முட்டாள்தனமா இல்லை?”

“சரி... முட்டாள்தனம்தான்... அவளைப் பொறுத்தவரை நான் முட்டாள்தான்... போதுமா?”

“தரன்... இப்ப நான் சீரியசா பேசுறன்... ‘சற்’றிலை பேசுறவங்களை நம்பாதைடா... இது ஒரு தாமாஷ்டா... ஒரு பொழுதுபோக்குடா...”

“இப்பிடித்தான் அன்றைக்கு அந்த ஜோதி சொன்னவள்... இப்ப நீ

வேறை...”

“குட்... என்னை எடுத்துக் கொள்... ‘சற்’றிலை நான் உண்மையே சொல்லுறதில்லை... ஆனால் உனக்குச் சொல்லுவேணும்போல இருக்கு...”

“ஏன்டா...”

“ம்... நீதான் எல்லாத்தையும் நம்புறியே... அதனால சொல்லுறேன்... ஐ லவ் யூ என்று எத்தினை பேரிட்டைச் சொல்லியிருப்பேன் தெரியுமா? எத்தனை ‘கேள்ஸ்’ போட்டோ என்கிட்ட இருக்கு தெரியுமா?”

“அடப்பாவி... அப்போ ஐஸை காதலிக்கிறேன் என்று கரைச்சல் கொடுக்கிறது...?”

“பொய்தான்... இனியும் கரைச்சல் கொடுப்பேன்...”

“ஏன்டா...”

“அவள் போட்டோ தராமல் பேய்க்காட்டுறாள்... எப்படியும் அவள் போட்டோ வேண்டணும்...”

“பார்த்தியா... இதில இருந்து என்ன தெரியுது... அவள் சம்திங் ஸ்பெசல்... இல்லையா?”

“ஹா... ஹா... போடா அண்ணா... அவளிட்டயும் போட்டோ எடுப்பேன்...”

“நோ... உன்னால முடியாது... நான் அவளிட்ட சொல்லிடுவேன்... நீ பொய் என்று...”

“போடா... அவள் நம்பினால்தானே... எரிச்சல்லை சொல்லுறாய்னு நினைப்பாள்டா...”

“ஏன்டா இப்பிடி...’’

“அவளவை ஆளுக்காள் ஒருத்தனைக் காதலிக்கிறேன்னு பொய் சொல்லுவாளவை... ஏமாத்துவாளவை... அப்பிடி என்னாலை முடியாதா? பதிலுக்குப் பதில்...’’

“யார்டா... ஐஸ் காதலிக்கிறதா சொன்னாளா?’’

“அவள் சொல்லலை...”

மனதில் சிறிது பரவசம்.

‘‘அதுதானே பார்த்தேன்...”

“போடா... அவள் நாளைக்கு சொல்லலாம்... ‘சற்’லை கன பெட்டையள் காதல் கீதல்னு பொடியளை ‘பூல்’பண்ணுறாளவை... சிலதுகள் அதுகளை நம்பி அலையுதுகள்...”

அவன் மறைமுகமாக என்னைச் சொல்வதாக உணர்வு ஏற்பட்டது.

அவன் தொடர்ந்தான்.

“அண்ணா... நான் யுகே யுனிவசிற்றில படிக்கிறேன்... இங்க

நடக்கிறதுகள் உனக்குத் தெரியுமா?”

“என்னடா..?”

“ஆண்களும் பெண்களும் தங்களுக்கென்று ‘கொஸ்ரல்’ல ‘ரூம்’ எடுப்பினம்... ஆனால் அதில தங்குறதில்லை...’’

“அப்போ...?’’

“யாராவது ஒருத்தற்ரை ‘ரூம்’லதான் சோடியா தங்குவாங்க... கூத்தடிப்பாங்க... பிறகு பிரிவாங்க... பிறகு புதுச் சோடியாவாங்க... கூத்தடிப்பாங்க...”

“ஐயோ... அசிங்கம்டா...”

“அசிங்கம்னு சோடி இல்லாம இருந்தா... ‘ஹேமோ செக்ஸ்’காரங்க என்று கேலியும் செய்வாங்க... பிறகு தங்க வீட்டுக்கு அவளவை போகும்போது பார்க்கணுமே... இந்தப் பூனையா பால் குடிச்சது என்றமாதிரி... பண்பா கலாச்சாரமா உடுத்திப் போர்த்தி போவாளுகள்...”

“ஐயையோ... இப்பிடியும் நடக்குதாடா?”

எனக்கு அது புதுஅனுபவம். நம்பமுடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை.

“டேய் லவ்லிபோய்... நம்ம சனங்களுமா?’’

“ம்... பாக்கிஸ்தான் இந்தியன் சனங்கள்தான்கூட... அதுகளைப்

பார்த்து நம்ப சனங்களும் தொடங்கீட்டாளவை... ‘கிளப்’புகளுக்கு போனால்... எங்களைக் கண்டு வெள்ளைகளுக்கு பக்கத்திலை இருந்து நெளிவாளவை... நாங்கள் வேணுமென்று நேரைபோய்... ‘ஹலோ’ என்று கைகொடுத்துட்டு வந்தீடுவம்...’’

“அதுகளின்ரை எதிர்காலம்...?’’

“ஹே... ஹே... அதைப்பற்றி என்ன கவலை... ஊரிலை இருந்து ஒருத்தன் விசாவுக்காக வந்து வாழ்வு கொடுப்பான்...’’

“அடப்பாவிகளா...’’

“அதுக்குத்தான் சொல்லுறன்டா... நிச வாழ்க்கையிலையே இப்பிடி நடக்கேக்கை... ‘சற்’ வாழ்க்கையை நம்பாதைடா...’’

சுற்றி வளைத்து மீண்டும் அதே இடத்துக்கு வந்தான்.

எதை நம்புவது? எதை நம்பாமலிருப்பது?

விடை தெரியவில்லை.

என் கேள்விகளின் நாயகி என் பிருந்தாதானே?!

அவள் வருவாளா? என் கலங்கிப் போன மனதைத் தெளிவாக்க அவள் வருவாளா?

‘உலகே மாயை’ என்று சொல்லுறவங்களும் அந்த உலகத்தில்தானே வாழுறாங்கள்?!

‘நம்ப நட, நம்ப நடவாதே’ எனறு சொல்லுறவங்களும் ஏதோ நம்பிக்கையிலைதானே வாழுறாங்கள்?!

‘சற்’றை நம்பாதே என்று சொல்லுறவங்களும் தாங்கள் சொல்லுறதை நம்பவேணும் என்ற எதிர்பார்ப்பில்தானே சொல்லுறாங்கள்?!

சிரிக்கிறதா? அழுகிறதா? குழம்புவதா?!

என் குழப்பங்களின் குந்துதல்களின் முடிவுகாலம் அவளிடமல்லாவா உள்ளது?!

அவள் வருவாளா?!

வந்தாள்.

‘‘டேய் தரன்குட்டி.. எங்கடா போனாய்..?”

“உன்னைவிட்டு எங்க போகடி.. உன்கூடத்தானே இருக்கேன்...?”

“லொள்... மச்சாள் என்னவாம்டா...?”

“அதை விடு... இப்போ ரண்டு விசயம் உன்கிட்ட கேட்கணும்... பதில் சொல்லணும்...”

“ஆசையா பேசலாம்னு வந்தால்... என்னடா ரண்டு விசயம்..?”

“ஒன்று வயது... பத்தென்பதுதானா... இல்லை பொய்யா..?”

‘‘......’’

“பிருந்தா!!!”

“........”

“உன்னைதான் கேட்கிறன்... உனக்கு பத்தென்பது வயதில்லைன்னு உன் மச்சாள்... அதுதான் அந்த ஜோதி சொல்லுறாள்... உண்மையா...? சொல்லுடி... இவ்வளவு நாளும் என்னை பொய் சொல்லி ஏமாத்தினாயாடி... உன்னை ‘பெஸ்ற் பிரண்ட்’ என்று மெயில் போட்டாயேடி... எல்லாரிலையும் பார்க்க என்னிலை அன்பென்று சொன்னாயேடி... எல்லாமே பொய்யா? உன்னைப்பற்றி எவ்வளவு உயர்வா... கற்பனைகள் செய்திருக்கேன் தெரியுமே... அத்தனையும் மண்ணா... சொல்லு...”

“மிஸ்டர் தரன்... நான் சொன்னனா... கற்பனை செய்யச் சொல்லி நான் சொன்னனாடா...”

“சொல்லலை... இற்ஸ் ஓகே... ஆனா... ஆனா... வயது பொய்யா... இல்லை உண்மையா... எனக்கு தெரியணும்... ப்ளீஸ்டி... எனக்கு நிம்மதி இல்லைடி...”

“என்னடா நீ... நிம்மதி... லொள்.. எனக்குத்தான்டா நிம்மதி போச்சுடா...”

“உனக்கா...?”

‘‘உன்னால இப்ப எனக்கு... சரியா... அவள் ஏதோ விளையாட்டுக்கு சொன்னால்... நம்புறதாடா... சரியான எம்மெம்... சரி... ரண்டாவது

விசயம் என்ன..?”

“எனக்கு உன்ர போட்டோ வேணும்...”

“போடா... உனக்கு இப்ப எதுக்குடா போட்டோ...”

“எனக்கு வேணும்... நான் உன்னை பார்க்கணும்டி...”

“உனக்கு முந்தி என்னடா சொன்னேன்... நேரம் வரும்போது நிச்சயமா தருவேன்னுதானே சொன்னேன்... தொந்தரவுபண்ணினால் பிறகு பேசவேமாட்டேன்... நான் சரியான பிடிவாதக்காரி... மைன்ட் இற்...”

“ப்ளீஸ்டி...”

“போடா... ஆசையோட பேசலாம்னு வந்தா... உன்னோட பெரிய தொல்லை... நான் போறேன்டா... ஒரேயடியா போறேன்டா... பாய்...”

“நில்லுடி... நில்லுடி....”

பரபரவென எழுத்துகளைக் கோர்த்து அனுப்புவதற்குள் அவளது தொடர்பு துண்டிக்கப்பட்டது.

கவலை என்னைத் தழுவ ஆரம்பித்தது. கையாலாகாத்தனத்துடன் கணனியையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

❍❍❍




(11)

“நீ சரியான மொக்குச் சாம்பிராணி... உனக்குக் கொஞ்சங்கூடப் புத்தியில்லை... சரியான வெங்காயம்... எதை யாரிட்டை சொல்லக்கூடாதென்று தெரியேலை... எத்தனை வயதெண்டாய்... இருபத்தாறோ... வயது வளர்ந்தளவுக்கு புத்தி வளரேலை...”

ஜோதிதான்... மெசன்சரில் பொரிந்து தள்ளினாள்.

வார்த்தைகளில் அனல் பறந்தது.

‘‘நீ செய்த வேலையாலை அவள் என்னோடை சண்டை... உன்னை யார் சொன்னது அவளிட்டை கேட்கச் சொல்லி... இனி என்னோடை பேசமாட்டனெண்டு ரெலிபோனை அடிச்சு வைச்சுட்டாள்... அவள் சரியான பிடிவாதக்காரி... இனி அவளை சமாதானப்படுத்தேலாது... எல்லாம் உன்னாலைதான்... வெண்ணெய்... சரியான வெண்ணைய்...”

அவளின் வார்த்தைகள் என்னுள்ளும் சற்று சினத்தை ஏற்படுத்தினாலும் பொறுத்துக்கொண்டேன்.

பிருந்தாவின் மச்சாள் அல்லவா?!

அவளைத்தான் ஒரு நாளுக்கும் மேலாகக் காணவில்லையே?

அன்று 'உண்மையான வயது என்ன?' என்றும்... 'படம் வேணும்' என்றும் கேட்டபோது, 'போறேன்டா... ஒரேயடியாப் போறேன்டா' என்று என்னைத் தவிக்கவிட்டு ஓடி மறைந்தவள்தான்... இன்னும் வரவில்லை.

அவளது மச்சாளின் சீற்றத்தை அதிகமாக்கி ஜோதியின் தொடர்பு துண்டிப்பதை நான் விரும்பவில்லை. ஜோதியின் தொடர்பு அறுந்தால்... பிருந்தாவைப்பற்றி வேறு எவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும்?! அந்த எண்ணத்தில் அவளது வசவுகளைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

ஒரு இளம் பெண் நேரடியாக இப்படிப் பேசுகிறாளோ இல்லையோ... 'சற்'றில் சூடாகப் பேசிக்கொண்டிருந்தாள்.

இதுவும் ஒரு புது அனுபவம்தான்.

"ஜோதி... என்னை இப்ப என்ன செய்யச் சொல்லுறாய்?"

"என்னவோ... எல்லாத்தையும் செய்துபோட்டு... என்ன செய்யச் சொல்லுறாய் என்று கேட்டால்... அவளுக்கு பத்தொன்பது வயதில்லை எண்டு உனக்கு உதவிசெய்யத்தானே சொன்னேன்... வீணாய் ஆசையளை வளர்த்து மோசம் போகாதை எண்ட நல்லெண்ணத்திலைதானேடா சொன்னேன்... நீ என்னாடாண்டால்... நான் சொன்னேனெண்டு என்னை அவளிட்டை மாட்டிப்போட்டு நீ நல்லபிள்ளைமாதிரி இருக்கிறாய்... அவள் என்னடாவெண்டால்...

நேற்று முழுக்க ரெலிபோன் எடுத்து என்னோடை சண்டை... ‘ஏன்டி அப்பிடிச் சொன்னனீ’ எண்டு... முதல்தடவையா குற்றவாளிபோலை அவளுக்கு ஒண்டும் பதில் சொல்லமுடியாமை கூனிக்குறுகி நிண்டன்... எல்லாம் உன்னாலை...’’

நான் சங்கடத்துடன் கதிரையில் நெளிந்தேன்.

தவறு என்னிடம்தானே?

“சொறிடா ஜோதி... வெரி வெரி சொறி...’’

“என்ன சொறி... சொறி சொன்னாப்போலை எல்லாம் ஓகேயா?’’

“ஜோதி! இப்போ என்னை என்ன செய்யச் சொல்லுறாய்? என் உணர்வுகளையும் கொஞ்சம் புரிஞ்சு கொள்ளேன்... காதல் என்றால் என்ன... அதுக்கு வரைவிலக்கணம் சொல்ல ஆராலையுமே ஏலாது... ஒரு வித்தியாசமான உணர்வு... ஒரு வித்தியாசமான ஈர்ப்பு... ஒரு புதுமையாக அனுபவம்... ஒரு சுவையாக உறவு... இல்லாட்டி அற்புதமான ஆசை... இப்பிடி எதையெதையோ ஆளுக்காள் சொல்லலாம்... ஆனால் என்னைப் பொறுத்தளவிலை... எதுவென்று சொல்ல முடியாத தொடர்பு... இதுதான் என்று சுட்டிக் காட்ட முடியாத மனத் தையல்... தையல்தான்... தையலால் வந்த தையல்... அவளுடன் பேசும்போது என்னையே மறந்துடுறன்... நீ சொல்லுறதுபோல முட்டாளாயிடுறன்... ஏன்... ஒரு களிமண் பொம்மைமாதிரி அவளுக்கு தலையாட்டிக் கொள்ளுறன்... இதை ஏன் உன்னாலையோ அவளாலையோ புரிஞ்சு கொள்ள முடியேலை? அவளைக் கண்டதும்... என் சந்தேகங்களை அவளிட்டைக் கொட்டிட்டன். அவளும் ஓடிட்டாள்... நீயும் இப்ப என்னை திட்டுறாய்... எனக்கு விளங்கேலை... எதுக்காக அவள் வயதை மறைக்கணும்... போட்டோவைக் காட்டாமை ஒரு நாள் அனுப்பு

றேன்னு தவணை சொல்லணும்... எனக்கு ஒண்டும் புரியேலை ஜோதி...’’

என் உள்ளத்து உணர்வுகளை அவளிடம் கொட்டினேன்.

“ஐயோ... தரன்! உனக்கு எவ்வளவுதூரம் சொல்லுறது? நீ நினைக்கிறமாதிரி அவள் இல்லைடா... நீ விரும்புற இடத்திலை அவள் இல்லைடா... கற்பனைல யதார்த்தத்தை மறக்காதை... சரி... அவளும் உன்னை விரும்புறாள் என்று வை... அவள் நீ எதிர்பார்க்கிறமாதி வடிவா இல்லாட்டி...?’’

“வடிவு என்ன பெரிய வடிவு... குணம்தான் முக்கியம்...’’

“லொள்... இப்ப சொல்லுவாய்... பழகப் பழகத்தான் எல்லாம் விளங்கும்... தூரத்திலை இருந்து பாக்க எல்லாம் அழகாய்த்தான் இருக்கும்... கிட்ட போனால்தான் அதிலுள்ள குறை நிறையள்... ஓட்டை ஒடிசல்கள் தெரியும்... சரி... அதுதான் போகுதெண்டா... எங்கடை சமூகம்டா... சாதி சமயம் எண்டு பல தடையள்... உன்ரை அப்பா அம்மா... அவளின்ரை பெற்றோர்... இப்படி எவளவோ பிரச்சினையள்... இதையெல்லாம் யோசிக்காமை காதல் கீதல் என்று உன்னை நீயே ஏமாத்திக் கொள்ளாதை...’’

“என்ரை வாழ்க்கையை நான்தான் வாழப்போறன்... அவங்களில்லை. ஊரிலைதான் அவங்கடை சொத்து சுகம் என்று தாய் தகப்பனிலை பிள்ளைகள் தங்கி இருக்கிறாங்கள்... இங்கை அப்பிடி இல்லை... குழந்தை பிறக்க காசு... குழந்தை வளர காசு எண்டு பிள்ளைகளின்ரை காசிலதான் பெற்றோர் தங்கி இருக்கினம்... எங்கடை வாழ்க்கையை நாங்கள் வாழ ஆரும் தடை போடேலாது...’’

எனக்குத் தென்பட்டதை அவளிடம் சொன்னேன்.

“லொள்... ஐயோ... என்ன இருந்தாலும் பெற்றவங்க பிள்ளைகளின் நல்லதுக்காகத்தான் வாழுறாங்க... அவங்களை மதிக்காமல் வாழுற வாழ்வு வெற்றியடையாதுடா... அவங்களுக்கு வாழ்க்கையிலை எத்தனையோ அனுபவங்கள் இருக்கு... வாழ்க்கையின் மேடு பள்ளங்களை அனுபவிச்சு உணர்ந்தவர்கள்... அந்த அனுபவத்தால பிள்ளைகளின் வாழ்வாவது நிம்மதியாக அமையவேணும் எண்டுதான் எல்லாரும் விரும்புவாங்க...’’

“என்னவோ... ஒரு உதவி செய்... முடிஞ்சால் பிருந்தாவை ஒன்லைன் வரச் சொல்லு...’’

“ஐயோ... வெண்ணை... வெண்ணை... அவள்தான் என்னோடை பேசமாட்டேன் எண்டு ரெலிபோனை அடிச்சு வைச்சூட்டாளே... உனக்கு எத்தனை தரம்டா சொல்லுறது... காதல் கீதல்னு வாழ்க்கையை சற்றில பாழாக்காதை... அவள் உன்னைப்போலை சற் பைத்தியம்தாண்டா... வருவாள்... இப்ப அவளுக்கு அதுதான் உலகம்.. என்னவோ... ரண்டு மொக்குகளும் என்னவோ செய்யுங்கோ... நான் இதுக்கை வரலை...’’

“ம்... நீ உன்ரை மச்சாள் என்றுதானே காதலிக்க வேண்டா மெண்டுறாய்?’’

மனதில் இருந்ததை எழுத்துக்களாக்கி அவள்முன்னால் போட்டேன்.

“என்ன... என்ன விசர்க்கதை... ஏதோ காணாததைக் கண்டவன்மாதிரி... ஏன்டா காதல் கீதல்னு வாழ்க்கையை நாசம் பண்ணுறாய்... ஒருத்தி சற்றில வந்து கதைச்சால்... ஆர் என்ன

ஏதெண்டு தெரியாமை காதலா… உப்பிடித்தான் சற் ரூமுக்கு வாறவங்கள்ல கனபேர்… ஆராலும் ஏமாந்தவள் கிடைச்சால்… தலையிலை மிளகாய் அரைக்கவெண்டே திரியுறாங்கள்…’’

பொரிந்துதள்ளினாள்.

தன்மானம் சூடேற்றியது.

‘என்ன வார்த்தை சொல்லிவிட்டாள்? காணததை கண்டா காதல் ஏற்பட்டது? காதலிக்க ஒருவருமே இல்லாமலா அவளைக் காதலித்தேன்?!’

நிதானம் இழந்தேன்.

“போதும் ஜோதி… என் உணர்வுகளை உன்னாலை புரிஞ்சு கொள்ள முடியாது… கனடாலதான் அழகான பெண்கள் இருக்கிறாங்களெண்டு நினையாதை… ஜேர்மனிலை எத்தனையோ அழகான குணமான பெண்கள் இருக்கிறாங்கள்… ஏன்… என் மச்சாள் எனக்காகக் காத்திருக்கிறாள்… நான் ஓம் எண்டால் அவள் என்னைக் கலியாணம் கட்ட றெடி.. ஆனால்… எப்பிடி சொல்லுறது… உனக்கு எப்பிடி விளங்க வைக்கிறது… அவங்களிட்ட இல்லாத ஒன்று பிருந்தாட்ட இருக்கு… அதுதான் என் காதல்… அதை கேவலப்படுத்தாதை…’’

“ம்… இப்ப உனக்கு என்ன சொன்னாலும் விளங்காது… பரவாயில்லை… நீ ஆச்சு… அவள் ஆச்சு… இனி நான் உன்னோட பேசமாட்டன்… என்னாலை சகிக்க முடியாது… ப்ளீஸ்டா… என்ரை மெசன்சர் ‘ஐடி’யை அழிச்சுடு… சொல்லிப்போட்டன்…’’

“ஜோதி… உண்மையைச் சொன்னால் ஏன் கோபப்படுறீங்கள்?”

“கோபம் இல்லைடா… இனி உன்னோடை பேசினால் எனக்குத்தான் மனக் கஸ்டம்… எல்லாத்தையும் சீரியஸா எடுக்கிறாய்… என்னவோ… கடவுள்தான்டா உனக்கு நல்ல புத்தி கொடுக்கணும்… பாய் பாய்…”

அவள் போய்விட்டாள். ‘இனி என் மெசன்சருக்கு வரமாட்டாள்’ என்ற வெறுமையான உணர்வுடன் கதிரையில் சாய்ந்து முகட்டை வெறித்தேன்.

ஒவ்வொன்றாகக் கையைவிட்டு போவது போன்ற பிரமை.

❍❍❍




(12)

சாருவின் முகத்தில் சிறுவாட்டம்.

ஏதோ தீவிர சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள். எதிரே தொலைக் காட்சியில் ஏதோ ஒரு தமிழ்ப்பாடலுக்கு குலுங்கி நெளிந்து கொண்டிருப்பவர்களைக் கவனிக்கும் நிலையில் அவளில்லை என்பது அப்பட்டமாகவே தெரிந்தது.

'சற்' உலகம் என் மனச் சுமைகளைக் கூட்டி, என்னை நிம்மதியற்றவனாக்கி அலைக்கழிப்பதற்கு எனக்கும் ஒரு வடிகால் தேவையாக இருந்தது.

மௌனமாக அவள் எதிரேயுள்ள 'சோபா'வில் அமர்ந்து அவளையே கூர்ந்து பார்த்தேன்.

ஆழமான சிந்தனை... என் வரவைக்கூட உணராத சிந்தனை.

‘கவலையா? குழப்பமா? அல்லது என்னை அலட்சியம் செய்யும் பாவனையா? இருக்காது... ஏதோ குழப்பத்தில்தான் இருக்கிறாள்.. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதத்தில் குழப்பங்கள்... கவலைகள்... சுமைகள்...’

என்னையறியாமல் திடீரென என்னுள் ஒரு சிந்தனை..

‘அவளது குழப்பத்திற்கு நான்தான் காரணமோ? அவளின் எதிர்பார்ப்புகளுக்கால் நழுவித் தொலைவுக்குச் செல்ல முயலும் என்னால் ஏதாவது குழப்பமோ?!’

அவள்மீது என்னையறியாமல் இரக்கம் தோன்றியது.

அது பரிவாகக்கூட இருக்கலாம்.

சிறுவயதில் ஓடிப்பிடித்து... தலையில் பிடித்திழுத்து... சீறிச் சிணுங்கி... விம்மலும் வெப்பியாரமுமாய் கோபம் காட்டி... முகத்தை ‘ம்’மெனத் தூக்கிவைத்து... சில மணித்தளிகளுள்... ‘தரன்... வாடா விளையாடுவம்’ என்று நாடி வரும்... அந்தக் குட்டிப் பெட்டை சாரு ஒருகணம் மனக்கண் முன்னால் வந்து போனாள்.

சின்ன வயதிலேயே விளையாட்டு என்ற பெயரால் அவளை அழவைத்து வேடிக்கை பார்ப்பதுதான் எனக்குப் பிரியம். அவளும் அழுதாலும் மீண்டும் மீண்டும் என்னை நாடி வருவதே வழமை.

அவற்றை நினைக்கும்பொழுது அவள்மீது அன்பு பொங்கியது.

ஆனால்... அன்பு காதலாக முடியுமா என்ன?!

மெதுவாக எழுந்து, அவளது பின்புறமாகச் சென்று, வலப்பக்க காதோரம் வாயைக் குவித்து, 'கூ...' எனக் கத்தினேன்.

திடுக்குற்று அலறியவாறு 'சோபா'வில் துள்ளிக் குதித்தாள். நன்றாகத்தான் பயந்துவிட்டாள்.

எனக்கோ சிரிப்பை அடக்க முடியவில்லை.

சிரிக்கும் என்னை ஒருகணம் கோபமாகப் பார்த்தவள், ஒரு புன்முறுவலை வலிந்து வரவேற்றவளாக மௌனத்துள் அடங்கிப் போனாள்.

"சாரு..."

"ம்..."

"என்ன யோசனை... நான் வந்ததுகூடத் தெரியாம என்ன கற்பனை... லண்டன் நினைவுகளா?"

நிமிர்ந்து என் கண்களை ஊடுருவினாள். அவளது உதடுகள் எதையோ கூறத் துடித்தன. என்ன நினைத்தாளோ? பார்வை தொலைக்காட்சிப்பெட்டியில் பதிந்தது. அதில் ஒரு காதல் பாட்டுக்கு நாயகனும் நாயகியும் உடல்களைக் குலுக்கி ஓடித்திரிந்து கொண்டிருந்தனர். அவர்களின் பின்னால் பாடல் தாளத்துக்கு ஏற்றவாறு நெளிந்தவாறு ஆண்களும் பெண்களுமாக ஒரு கூட்டம்.

"அத்தான்..."

கண்களில் சிறுகலக்கம்.

“இன்னும் ஒரு கிழமை இருக்கு...”

பெருமூச்சுவிட்டாள் சாரு.

“ம்... பிறகு... ‘கொஸ்ரல்’ல போயிருந்து படிக்கவேண்டியதுதானே? அதுக்கு என்ன யோசனை?”

“அதுக்கு யோசனை இல்லை... இன்னும் ஒரு கிழமையால லண்டனுக்குப் போறதை நினைக்கத்தான் கவலையா இருக்கு...”

“ஏன்... லண்டன் சரியில்லையா?”

குறும்பாகக் கேட்டேன்.

“ஜேர்மன்... லண்டன்... இதிலை என்ன இருக்கு... மாமி மாமா... இவங்களோட இன்னும் கொஞ்சக்காலம் இருக்கவேணும்போல இருக்கு... அதுதான்...”

“அப்போ என்கூட இல்லையாடி...”

திடீரென என்னையறியாமல் கேட்டுவிட்டேன்.

அவள் ‘வெடுக்’கெனத் தலைநிமிர்த்தி என்னைப் பார்த்தபோது... கண்களில் தோன்றிய ஒளிவட்டம் என்னைத் தடுமாறச் செய்தது.

அந்த ஒளியில் பொதிந்திருந்த எதிர்பார்ப்பு என்னைத் தாக்குவதாக உணர்ந்தேன்.

‘கேட்டிருக்கக் கூடாது’ என்ற எண்ணம் காலம்கடந்து தோன்ற,

என்னை நொந்துகொண்டேன்.

“அத்தான்... நீ சொன்னால் இங்கேயே இருந்துடுவேன்...”

வார்த்தைகள் தடுமாறி வந்தன.

எது என்னைநோக்கி வரக்கூடாது என நினைத்தனோ... அது நேரடியாகவே வந்துவிட்டது.

‘என்ன சொல்வது... எனது பிருந்தாவைப்பற்றியா... யார் அவள்... என்ன மதம்... எத்தனை வயது... எதுவுமே தெரியாமல் எப்படிச் சொல்வது?’

என் மனம் தடுமாறியது.

சிறுவயதில் இருந்தே... என்னுடன் சண்டையிட்டாலும் வலிய அண்டி அண்டி வரும் சாருவா? ஒரு போட்டோ கேட்டதற்காக ‘ஒரேயடியா போறேன்ரா’ என்று ஓடி ஒழிந்துகொண்ட பிருந்தாவா?

எனக்குள் ஒரு போராட்டம் ஆரம்பமானது.

அவள் ஓடியோடி போவதால்தான் காதல் தோன்றியதோ? அக்கரைப்பச்சை மயக்கத்தில் இக்கரை இன்பத்தின் பெறுமதி உணரப்படாமல் போனதோ?!

“சாரு... எனக்கு உன்னிலை அன்பு இல்லையெண்டு நினைக்கிறியா? என்னவோ தெரியலை... என்னாலை எதிலையுமே ஒழுங்கா இருக்க முடியேலை... மனம் ஒரு குரங்கு என்பாங்க... இப்ப என் மனசும் அப்பிடித்தான்... ஒரு நிலையா இல்லை...”

“அப்படி என்ன அத்தான் குழப்பம்..?”

அருகில் வந்து உட்கார்ந்தாள்.

“தேவைகள் வசதிகள்கூடக்கூட குழப்பங்களும் கூடுதுதானே சாரு... அதுதான்...’’

“ஐயோ... இப்பதான் எனக்குக் குழப்பமா இருக்கு... விளக்கமா சொல்லுங்க...’’

“ம்... நீ லண்டனுக்குப் போறதுக்கிடையிலை நிச்சயமா சொல்லுறன் சாரு... உனக்கு கட்டாயம் சொல்லுவன்... என்னவாலும் எழுதலாம் எண்டு கணனி வாங்கினன்... பிறகு கொஞ்சம் வசதியான கணனி நல்லாயிருக்கும் எண்டு மாத்தினன்... அதில இன்ரர் நெற் கொனெக்சன்போட்டால் நாலு ஊர்ப்புதினம் அறியலாம் எண்டு போட்டன்... இன்ரர் நெற் போட்டாச்சா... ‘சற்’ றும் போய் பார்க்க ஆசை வந்திச்சு... இப்படி ஒவ்வொரு ஆசைகள்... ஒவ்வொரு அறிமுகங்கள்... ஒவ்வொரு தேவைகள்... தேவைகள் கூடும்போது தேவையில்லாத குழப்பங்கள்... சோகங்கள்...’’

அர்த்தத்துடன் அவளைப் பார்த்தேன்.

“அத்தான்... எதையோ சொல்ல பயப்படுறமாதிரி இருக்கு...’’

“ம்... எப்பவெண்டாலும் சொல்லத்தானே வேணும் சாரு? நிச்சயமா சொல்லுவன்... நீ லண்டனுக்குப் போறதுக்கிடையில நிச்சயமா எல்லாத்துக்கும் முடிவு வரும் சாரு... என்னை நம்பு...’’

அவளது முகத்தில் திடீரென ஒரு பிரகாசம்.

ஒரு கிழமைக்குள் அவளது குழப்பங்களுக்குத் தீர்வு கிடைக்கப் போகிறது என்ற எதிர்பார்ப்பாக இருக்கலாம்.

அப்போது வாசல் கதவு திறக்கும் ஒலி கேட்டது. வெளியே சென்ற அம்மாவும் மாமா குடும்பத்தினரும்தான் வந்தார்கள்.

“அப்பாடா... என்ன குளிர்... என்ன குளிர்...’’

சலிப்புடன் ‘சோபா’வில் அமர்ந்தாள் அம்மா.

எங்கள் இரண்டு பேரையும் அங்கே கண்டதில் அவளுக்கும் சந்தோசம். முகத்தில் தெரிந்தது.

“மாமி... கோப்பி கொண்டு வரட்டுமா?’’

“என்ன கேள்வி... எல்லாருக்கும் போடு.’’

மாமாதான் கூறினார்.

சாரு புள்ளியிலா மானாகச் சமையலறைக்குத் துள்ளியோடினாள்.

“மாமீ...!’’

சமையலைறையில் இருந்து சாருவின் குரல்..

“கோப்பி எங்க இருக்கு...?’’

“மேல இருக்கு பிள்ளை... தரன்... மேல் அலுமாரில இருக்கு. எடுத்துக்கொடுடா... அவளுக்கு எட்டுமோ தெரியேலை...’’

உள்ளே சென்றபோது, அவளே நுனிக்காலில் நின்று கோப்பிப் போத்தலை எடுப்பதில் முனைந்திருந்தாள்.

சற்றும் எதிர்பாராதவகையில் அவள் நிலைதடுமாறிச் சரிய... ஓடிச்சென்று அவளைக் கைகளில் ஏந்திக்கொண்டேன்.

பூக்கொத்தொன்று என் கைகளுள் விழுந்து என்னுடம்பை அதிரவைத்தது.

அவள் கரமொன்று என் தோள்மீது... அவளாகப் போட்டாளா... தற்செயலாகவா? புரியவில்லை.

“என்ன சத்தம் அங்கை... என்னத்தைப் போட்டுடைக்கிறியள்?” என்றவாறு அம்மா வருவதை உணர்ந்து அவளைவிட்டு விலகிச் சென்றேன்.

அவளை நிமிர்ந்து பார்க்க எதுவோ தடுத்தது. தலையைக் குனிந்தவாறு ‘பட;பட’க்கும் மனதுடன் எனது அறையை அடைந்தேன்.

என் மனதில் ஏதேதோ இனம்புரியாத உணர்வுகள்... புதிய அனுபவம்... எதிர்பாராத அனுபவம்.

நிலைகுலைந்தேன்.

என்னால் என்னை நிதானப்படுத்த இயலவில்லை.

புழுக்கமாகவிருந்தது. சித்திரவதையாக இருந்தது.

ஒருகணம் கண்களை மூடி என்னை ஆசுவாசப்படுத்த முயன்றேன்...

மீண்டும் மீண்டும் அந்த நிகழ்வு மனதில் வந்துகொண்டே இருந்தது.

அந்த நினைவுகளுக்குத் தடைபோட்டாகவேண்டும். எனக்கே என்னில் பயமாகவிருந்தது. இந்தநேரத்தில் என் பிருந்தாவுடன் உரையாடவேண்டும் போலிருந்தது.

கணனியை போட்டேன்.

‘பிருந்தா.. ஓன்லைனில் இருப்பாயா.. என் உள்ளக் கொதிப்பை ஆற்றுவாயா?’

மனது கணனிக்கும் மேலான வேகத்தில் அங்கலாய்த்தது.

மெசன்சரை திறந்தேன். ம்... அவளை காணவில்லை. மனம் சோர்ந்தது. ஏதாவது செய்தாகவேண்டும்போலிருந்தது.

அவளுக்கு ‘மெயில்’ எழுத ஆரம்பித்தேன்.

‘என் உள்ளமெல்லாம் நிறைந்திருப்பவளே!...’

இவ்வாறு எழுதினால் அவளுக்கு எனது தமிழ் விளங்குமா... எழுதவேண்டும்போல ஒரு வெறி... தொடர்ந்தேன்.

‘ஒவ்வொரு நிமிடத் துளிகளும் பிருந்தா பிருந்தாவென்று உன் நினைவிலேயே களிப்பின்றிக் கழிவதை நீ அறிவாயா? ‘சற்’ அறையொன்றில் தனிமையில் நின்று தத்தளித்தவனுக்குத் தண்மையைக் காட்டிப் பொழுதுகளை வசந்தமாக்கிய என் முகந்தெரியாத உறவே! இப்போது என்னைத் தனியேவிட்டு எங்கே சென்றாய்? பிரிவில் என்னைக் கருக்கி மறைந்திருப்பதில் எதைக்

கண்டாய்? என்னிலை புரியுமா உனக்கு? நித்தம் நித்தம் அல்லாடும் மனதுடன் நிஜத்துக்கும் நிழலுக்குமிடையே உண்மை புரியாமல் உருக்குலைவதை அறியாயா? என் மச்சாள் சாருதான் என் வாழ்க்கைத்துணை எனச் சொல்லாமல் சொல்லும் என் அம்மா... கண்களால் என் சம்மதம் கேட்டு என்னையே வளைய வரும் சாரு... என் நல்ல முடிவுக்காக நாட்களை எண்ணிக் கொண்டிருக்கிறாள். அவள்மட்டுமா? நானுந்தானே... உன் நல்ல பதிலுக்காக உன் வருகையை நாடித் தவமிருக்கிறேன். எங்கு சென்றாய் என்னுயிரே? உன் மெசன்சரில் எவர் 'ஒன் லைனில்' இருந்தாலும் என்னுடன் பேசத்தான் விருப்பமென்று என் மனதினைத் தென்றலாக வருடினாயே? அது வெறும் வார்த்தைகளா? வேசமா? மோசமா? நேசமே இல்லாத எழுத்துக்களின் சோடனைகளா? உனக்கு என்மேல் அன்பே கிடையாதா? பாசமோ... வேசமே... ஓடிவந்து உண்மையைக் கூறிவிடு.. என்னைக் காக்க வைத்துக் கொஞ்சங்கொஞ்சமாகக் கொல்லாதே. என்னையே நான் ஏமாற்றிக்கொள்கிறேனா என்றாவது வந்து சொல்லிவிடு... இன்றேல்... ஒருவனது அழிவுக்கு ஆளான பாவமும் பழியும் உன்னைச் சும்மாவிடாது... உன் வரவை வெகுவிரைவாக எதிர்பார்க்கிறேன். நிம்மதியற்று நிலைகுலையும், உன்மேல் அன்புகொண்ட தரன்.'

ஏதோ ஒரு வேகத்தில் எழுதியதை அனுப்பிவிட்டுக் கண்களை மூடியவாறு கதிரையில் சாய்ந்தேன்.

அங்கே.. கலகலப்பாக பிருந்தா... ஏக்கம் நிறைந்த விழிகளுடன் சாரு... மாறிமாறிக் கோலம் காட்டினார்கள்.

எவ்வளவு நேரம்தான் அப்படியே இருந்தேனோ தெரியவில்லை.

கண்களைத் திறந்து பார்த்தேன்.

நம்பமுடியவில்லை.

மெசன்சரில் பிருந்தாவின் பொம்மை பச்சை நிறங்காட்டியது.

இனந்தெரியாத ஆனந்தப் பிரவாகம் என் உள்ளத்தில்…

“ஹலோ… என் ஐஸ்கிறீம் சிலையே…”

மௌனம். பதில் இல்லை.

“பேசுடி.. என் செல்லமே… சுகமாய் இருக்கியா..?’’

“.....’’

“கோபம் எண்டால் சொல்லிடு… பேசாமல் இருந்து கொல்லாதைடி… ஆத்திரம் எண்டால் ‘எம்எம்’ எண்டு திட்டு… ப்ளீஸ்…’’

அவள் எதுவும் பேசாமல் இருந்தாள்.

“ஏண்டி என்னைச் சித்திரவதை பண்ணுறாய்… ஒரு வார்த்தை பேசுடி..’’

“ஹேய்! கூ ஆர் யூ மான்?’’

நான் அதிர்ச்சியால் உறைந்தேன்.

❍❍❍




(13)

“ஹேய்! கூ ஆர் யூ, மான்?”

துப்பாக்கி ரவையாகப் புறப்பட்டு வந்த வார்த்தைகள் என் நெஞ்சைத் துளைத்து சிரசைத் தாக்கியதுபோல் உணர்வு பொங்கியது. கனமான வலியுள் புதைந்து அவதிப்பட்டேன்.

‘யார் நீ?’

அவளா... என் பிருந்தாவா கேட்டாள்?! நம்பமுடியவில்லை. நம்பாமல் இருக்கவும் இயலவில்லை. எதிரே கணனித் திரை அந்த வசனத்தை இன்னமும் ஒளிர்த்தது.

“ஹேய்... யார் நீ? பிருந்தாவ உனக்கெப்படித் தெரியும்... ரெல் மீ...”

மீண்டும் அதிர்ச்சி.

மெசன்சர் யன்னலைப் பார்த்தேன். பிருந்தாவின் ‘ஐடி’தான். அப்படியென்றால்... ஏன் வேசம்போடுகிறாள்? விளையாட்டா? அல்லது விபரீதமா? புரியவில்லை.

“பிருந்தா... என்ன இது..?”

“நான் பிருந்தா இல்லை... பதில்... பதில்... உனக்கெப்படி பிருந்தாவ தெரியும்..?”

குழப்பம்... குழப்பம்... அவளில் வெறுப்பு வந்தது. விளையாட்டுக்கு ஒரு அளவுவேண்டாமா? அளவுக்கு மிஞ்சினால் எதுவுமே நஞ்சுதானே... பகிடியாகப் பேச ஆரம்பித்துக் கைகலப்பில் முடிவுறும் சம்பவங்களுக் குத்தான் அளவேது?!

“நான் கேட்குறதுக்கு முன்னால நீ என்ன முந்திரிக் கொட்டைமாதிரி... நீ யார் சொல்லு...”

“முந்திரிக்கொட்டையா... அது என்ன..?”

“மண்ணாங்கட்டி... முதல்ல நீ யார்... எப்படி பிருந்தான்ர ‘ஐடி’ல வந்தாய் சொல்லு...”

“மண்ணாங்கட்டியா... ம்... நீதான் மண்ணாங்கட்டி. இது பிருந்தாட ‘ஐடி’ இல்லை... என்ர ‘ஐடி’...’’

“என்ன...?”

“ம்... நான் மூண்டு மாசமா கனடால இல்லை... அவள் என்ரை ‘ஐடி’ய ‘யூஸ்’ பண்ணிட்டாள்... மொக்கு... மொக்கு...”

அதிர்ந்துவிட்டேன்.

நிஜமா பொய்யா எனப் புரியவில்லை. யாரை நம்புவது? எவரிடம்

கேட்பது? குழப்பமாகவிருந்தது.

“என்ன சத்தமில்லை? நம்பலையா... பிருந்தா என் பெரியப்பா மகள்... அவளுக்கு என்ர ‘ஐடி’ன்ர ‘பாஸ்வேட்’ தெரியும்... கள்ளி... எனக்குத் தெரியாம வீட்டை வந்து... என்ரை மெசன்சரில கனபேரோட பேசியிருக்காள்...”

“ம்... அப்ப அவளின்ரை ‘ஐடி’ என்ன...”

“லொள்... அவளுக்கு ‘ஐடி’ இல்லையே... அவளிட்ட ‘கொம்பியூட்டரே’ இல்லை...”

தாங்கமுடியாத அதிர்ச்சி. என்னால் நம்பமுடியவில்லை. நம்பாமல் நிராகரிக்கவும் இயலவில்லை.

இப்படியும் நடக்குமா? இப்படியும் ஒரு பெண்ணால் எளிதாக என் உணர்வுகளுடன் விளையாடி ஏமாற்ற முடியுமா?! என் மனதுள் எழுந்து நிற்கும் ‘ஐஸ்கிறீம் சிலை’ பொய்யா? கானல்நீரின் உறைநிலை உருவமா?! என்னைக் கோரம் செய்யவெனப் புகுந்த மாயப்பிசாசா?

என்னைச் சுற்றிலும் சூழும் இருண்ட புகையுள் கண்கள் எரிந்து நீர்சுரக்க, அலங்க மலங்க முழிக்கும் அறிவுகெட்ட முண்டமாக என்னிலை.

சுழன்றடிக்கும் சூறாவளியுள் பறந்தலையும் எனக்கு ஒரு பற்றுதல் கிடையாதா? கொந்தளிக்கும் கடலுள் மூழ்கும் படகில் இருந்து தப்ப ஒரு சிறு துரும்பாவது அகப்படாதா? நிதர்சனம் என்று நினைத்தவை யாவும் துரதிஷ்டமான நிலையில் ஒரு சிறு ஊன்றுகோலாவது கிடையாதா என்ற தவிப்பில் நான்.

“பிருந்தா உன் வீட்டை வந்து ‘சற்‘பண்ணலாம்தானே…”

“எதுக்கு..?”

“அவளுடன் பேசவேணும்…”

“எதுக்கு..?”

“நீ யார்னு தெரியாம எப்பிடி சொல்லுறது…?”

“நான்தான் சொல்லிட்டனே… பிருந்தாட சித்தா பொண்ணு… அவ தங்கச்சி… என்ன தெரியாது… சொல்லு.”

“ம்… உன் பெயர் தெரியாது… உன் வயது தெரியாது…”

“தெரிஞ்சு என்ன செய்யப் போறாய்… ‘லவ் லெற்றர்’ போடப் போறியா? லொள்…”

“என்ன..?”

“நீதானே என்னவோ அவளுக்கு மெயில்லை எழுதியிருந்தாய்..?”

“ஐயோ… பார்த்துட்டியா…?”

“என்ரை ‘ஐடி’க்கு வாற மெயில பாக்காம வேற எந்த மெயில பாக்கிறது..?”

என்னை அறியாமலே எனக்குள் ஒரு கூச்ச உணர்வு புகுந்துகொண்டது. எவளுக்காகவோ வெளிப்படுத்திய என் எண்ணக்

குவியல்கள் எவளையோ சென்றடைந்த கூச்சம்.

“உன்னைப்பற்றி சொல்லலையே..? ம்... எனக்கு பெயர் தரன்... ஜேர்மனில இருக்கேன்...”

“ம்... இருபத்தாறு வயசு எண்டு சொல்லலை... லொள்...”

“வாட்... ஆர் யூ பிருந்தா..?”

“ஐயோ சொறி... உங்க மெயிலை பார்த்துட்டு அவளோட ரெலிபோன்ல பேசினேன்... அப்பதான் சொன்னாள்... அவள் நல்லாத்தான் உங்களை ஏமாத்திட்டாள்... உங்களை பாத்தா பாவமா இருக்கு... அவளுக்காக நான் மன்னிப்புக் கேட்குறன்...”

“அவளுக்காக நீ எதுக்கு மன்னிப்பு..?”

“அவள் என்ர அக்காதானே...”

“ம்... உனக்கு எத்தினை வயசு... என்ன பேர்..?”

“என்ர பெயர் சுஜி... பதினைஞ்சு வயசு...”

“ஐயோ...!”

“என்ன ஐயோ...?”

“பதினைஞ்சு வயசில ‘சற்‘றா?”

“ஏன்... ‘சற்‘பண்ணினால் என்ன... உங்களைப்போல ‘லவ்’

பண்ணுறவங்கதான் ‘சற்‘பண்ணலாமா?”

‘சுரீர்’ என நெஞ்சில் தைத்தது.

அவளது கேள்விக்கு என்ன கூறுவது எனப் புரியாமல் மௌனித்தேன்.

“ஒரு கேள்வி...”

அவள்தான்.

“ம்...”

“நீங்கள் எனக்கு அண்ணாவா? அங்கிளா?”

அந்த வேதனையிலும் சிரிப்பு வந்தது.

“என்னவோ கூப்பிடு...”

“அண்ணாக்குட்டி.... இப்பிடித்தான் கூப்பிடுவன்...”

அதுவும் இனிமையாகத்தான் இருந்தது.

“கூப்பிடு...”

“நீங்க எப்பிடிக் கூப்பிடுவீங்க..?”

“ம்... சுஜிக்குட்டி...?”

“அது வேணாம்... செல்லக்குட்டின்னு கூப்பிடணும்... ஓகே..?”

என்னையறியாமல் சிரித்துவிட்டேன். என் குழப்பங்களையும் கவலைகளையும் ஒருகணம் மறந்து சிரித்தேன்.

“ம்... செல்லச் சின்னக்குட்டின்னு கூப்பிடட்டா?”

“ஐய்யா.. இப்பதான் நீ என்ரை அண்ணாக்குட்டி...”

அவளே என் கழுத்தைக்கட்டிக்கொண்டு துள்ளிச் சிரிப்பதாக ஒரு பிரமை.

“அண்ணாக்குட்டி... உன்னை ஒண்டு கேக்கணும்...”

“ம்...”

“நீ பிருந்தாவ ஏன் ‘லவ்’பண்ணுறாய்..?”

“நீ சின்னப்பெண்... உனக்கெதுக்கு... ஒழுங்காய் படி...”

“லொள்... அவள் சரியில்லைடா... அதுதான் கேட்டேன்... சொல்லலைன்னா போ... எனக்கென்ன?”

ஜோதி மனக்கண்முன்னே வந்தாள். ‘சற்றை நம்பாதைடா... எல்லாம் பொய்டா...’ இப்போது இவள் ‘பிருந்தா சரியில்லை’ என்று... என் மனமாளிகையே பொய்யாகிச் சிதைந்துகொண்டு போகிறதோ?! அங்கே குடியிருத்திய அழகுச்சிலை உருகிக் கொதிகூழாய் என் இதயத்தை அவிப்பதுபோன்ற எரிவு. தாங்கமுடியாது தவித்தேன்.

“அண்ணாக்குட்டி... அவளை நம்பாதை. அவள் கூடாத பெட்டை... ‘பாட் கரக்டர்’... எப்பவும் மாலுக்கு போறதுதான் அவள் வேலை..

அங்க பொடியளை ‘சைற்’ அடிக்கிறதுதான் அவள் வேலை... அதுதான் அவளை என்ரை ‘கொம்பியூட்டரை’க்கூடத் தொட விடுறதில்லை.. நான் இல்லாபோது என்ரை ‘ஐடி’ய ‘மிஸ்யூஸ்’பண்ணிட்டாள்... நீ அவளை மறந்துடு... சொல்லிட்டேன்...”

“ம்...’’

ஒருநாளில் மறக்கக்கூடிய நிகழ்வுகளா அவை?! எப்படி மறப்பேன்?! வார்த்தைகளால் என் இதயத்துள் புகுந்த நினைவுகளையும் உணர்வுகளின் உருவாக்கங்களையும், கற்பனைச் சிணுங்கல்களையும், அதிலே கலந்த அவளையும் எவ்வாறு தூக்கியெறிய முடியும்? முதன்முதலில் என்னை வலிந்தழைத்து ‘மௌசன்சரில்’ இனியராகம் பாடி என்னைத் தாலாட்டிய உறவல்லவா?! எவ்வாறு உதறித்தள்ளுவது?!

“என்ன ம்... அவளை மறந்துட்டு சாரு அக்காவைக் கலியாணம் செய்... ஓகே?’’

“ஐயோ... உனக்கெப்படிச் சாருவைத் தெரியும்..?’’

“லொள்... நீதானே மெயிலில் எழுதியிருக்காய்... உங்களையே சுத்திச்சுத்தி வாறா எண்டு... ஓகே சொல்லு அண்ணாக்குட்டி..’’

“நீ சின்னப்பிள்ளை... சும்மா கிட...’’

“நான் என்னடா சின்னப்பிள்ளை... பெரியபிள்ளை ஆயிட்டனே... ‘சாறி’ உடுத்து... நிறையப்பேருக்கு ‘இன்விடேசன்’ கொடுத்துக் கொண்டாடினோமே... மொக்கு... மொக்கு...’’

“ஆகா... அதுவும் அப்படியா...?’

அவளது வார்த்தைகளால் கவலைகள் சற்றுநேரம் என்னை விலத்தியோடின.

“அண்ணாக்குட்டி... பிருந்தாக்கு நிறைய பிரண்ஸ்டா... ‘கானா’ நாடு தெரியுமா... கறுப்புக் கறுப்பான பொடியங்கள்... அவங்களோடதான் சுத்துவாள்டா... லொள்...’’

“பொய் சொல்லாதை...’’

“நம்புடா...’’

என் கற்பனைக்கோட்டைகள் வெகுவேகமாகச் சரிந்து கொண்டிருந்தன.

“இப்ப சொல்லு... பிருந்தா நல்லமா? சாரு அக்கா நல்லமா?’’

உடனே கூறக்கூடிய பதிலா இது?

“தெரியலை...’’

“இவளவு சொல்லியும் தெரியலையா... ம்... நாளைக்குச் சொல்லுறியா?’’

சின்னப்பிள்ளையேதான்... பதிலுக்காக அடம்பிடித்தாள்.

“பாப்பம்...’’

“பாப்பம் இல்லை… நாளைக்கு வருவன்… சொல்லணும்… ஓகே..? ஐயோ… அம்மாடா… நான் நாளைக்கு வாறேன்… டாடா அண்ணாக்குட்டி…’’

அவள் போய்விட்டாள்.

எல்லாமே மாயையாகத் தோன்றியது. இப்படியும் நடக்குமா என ஏற்கமுடியாமலிருந்தது. ஏற்காமல் விலத்தவும் முடியாமல், ‘ஏன் இருக்கமுடியாது’ என்ற கேள்வி எழுந்து தடுத்தது.

பின்னால் யாரோ வருவதுபோன்ற உணர்வு. திரும்பினேன். அங்கே கையில் கோப்பியுடன் சாரு.

சற்றுமுன் நிகழ்ந்த சம்பவம் நினைவிலெழக் கூச்சத்துடன் நெளிந்தேன்.

“அத்தான்… கோப்பி குடிக்காம கொம்பியூட்டரா..? ரொம்ப தாங்ஸ் அத்தான்…’’

முகம்சிவக்க கூறினாள்.

“எதுக்கு…?’’

“கீழைவிழாமல் பிடிச்சதுக்கு…’’

கண்கள் சிறகடித்தன.

“எனக்குத் தெரியும்…’’

“என்ன...?’’

“அத்தான் என்னை கீழை விழவிடமாட்டான் எண்டு...’’

கூறிவிட்டுத் துள்ளியோடும் சாருவையே வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன்.

‘எவ்வளவு நம்பிக்கையான வார்த்தைகள்...’

என் தேகமெல்லாம் புதுவித சந்தோச உணர்வு முகிழாகி மொட்டாகி மலராகி மணம்வீச ஆரம்பித்தது.

❍❍❍




(14)

“அண்ணா! என்ன சொல்லுறாய்? உண்மையாய் அப்பிடிச் செய்தாளா?’’

“ம்... பொய்யா சொல்லுறேன்... நேற்று சுஜி வந்து தன்ரை ‘ஐடி’ய ‘மிஸ்யூஸ்’பண்ணிட்டாள் எண்டபோது என்னாலைகூடத்தான் நம்ப

முடியேலை... எவளவு நல்ல பெண் எண்டு பிருந்தாவை நினைச்சன்... யாரை நம்புறது... யாரை நம்பக் கூடாதெண்டு விளங்கேலை. வாழ்க்கையிலை சிலபேர் ஏதோ அற்ப சொற்ப சுகங்களுக்காக ஆள்மாறாட்டம் மோசடி செய்யுறாங்களெண்டால்... 'சற்'றிலையும் இப்பிடியா?''

மனம் நோக சுதாவிற்கு எழுதினேன். யாரிடமாவது என் சுமைகளைக் கொட்டினால்தான் ஆறுதல் கிடைக்கும்போலிருந்தது. சுஜி வந்ததிலிருந்து மனம் குழம்பிவிட்டது. இதுவரை கடந்து வந்த வாழ்க்கையில் ஏற்பட்ட மிகப் பெரிய ஏமாற்றம். வலிய அழைத்து தினமும் கதை பல பேசி, களிப்பால் குளிப்பாட்டிச் சிந்தை கவர்ந்து, மனதில் மாளிகையாய் சிலிர்த்தெழுந்து, சில மாதப் பொழுதுகளின் சிருங்காரத் தாலாட்டுக் கனவுளைச் சடுதியாய் சவமாக்கிய பிருந்தாவின் தாக்கம் ஒரு சில நாட்களுள் தடமற்றுப் போய்விடுமா, என்ன?!

அவள் தந்த வடுவின் வேதனைகளை அள்ளிக் கொட்டி அகற்ற ஒரு வாடிகாலாவது வேண்டுமல்லவா?!

"என்னாலையும் நம்ப முடியேலைடா... அண்ணா! என்னோடைகூட அவள் நல்லபிள்ளைமாதிரி 'அக்கா, அக்கா' எண்டு 'சற்' பண்ணினாளே... ம்... 'சற்' பொழுதுபோக்கெண்டு நினைச்சால்... அந்த பொழுதுகளையும் ஏமாற்றுறதுதானா 'சற்'? என்னவோ... இந்த மட்டிலையாவது 'பிருந்தா, பிருந்தா' எண்டு உயிரைவிடாமைத் தப்பீட்டாய்...''

காதலித்து, அதன் பிரதிபலனாய் கவலைகளுடன் தவித்திருக்கும் சுதா, எனக்காக 'மெசன்சரில்' கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள்.

“அண்ணா… என்னமோ… அந்த சுஜி சொன்னமாதிரி சாருவை கலியாணம் செய். உன்ரை மச்சாள்தானே? சின்னன்லை இருந்தே உன்னைப்பற்றித் தெரிஞ்சவள். உனக்கும் அவளைத் தெரியும்…’’

“ம்…’’

“உன்ரை பலம் பலவீனங்கள் அவளுக்குத் தெரியும்… அவளின்ரை பலம் பலவீனங்கள் உனக்குத் தெரியும்… அதாலை சின்னச் சின்னப் பிரச்சினையள் எண்டாலும் ‘அட்ஜஸ்மென்ற்’ **(adjustment)** இருக்கும்டா…’’

“ம்…’’

“அதோடை… என்னைப் பார்… பதினாறு வயசிலை காதல் எண்டு தாய் தகப்பனை… சொந்த பந்தங்களை மதிக்காமை வீட்டைவிட்டுப் போனன்… இப்ப… நம்பினவன் ஏமாத்த… மறுபடியும் அப்பா அம்மாதானே எனக்குத் தஞ்சம் தந்திருக்கினம்… என்ன இருந்தாலும் பெத்தவங்க பிள்ளைகளைக் கண்கலங்க விடமாட்டாங்கடா… அதாலை சொல்லுறன். உன்ரை அம்மாவும் நீ சாருவை கலியாணம் செய்யுறதை விரும்புறதாலை… அதை ஏன் கெடுக்கிறாய்? ஒரு தாயின் மனசு வாழ்த்தினாலே வாழ்க்கை வளமாக அமையும்…’’

“ம்…’’

“என்ன ம்… ம்… எண்டுறாய். சாருவை கட்டுறியா இல்லையா எண்டு சொல்லன்…’’

“சும்மா இருடி… நிறைய யோசிக்கணும்…’’

“ம்... பெரிய யோசினைதான்... என்னவோ செய். இனியும் சும்மா மொக்கன்போலை ஏமாறாதை... சொல்லிட்டன்...’’

“ம்...’’

“என்னடா கவலையா? கவலைப்பட்டால் வாழேலாதுடா... என்னைப் பார்... ஏதோ வாழத்தானே வேணும்... அப்பிடித்தான்... இனியாலும் புத்திசாலியா முடிவெடு.’’

“ம்...’’

“லொள்... இண்டைக்கு ‘ம்’போடுறதெண்டே முடிவெடுத்திட்டியா... அப்பிடியே ‘ம்’மெண்டிரு... நான் போவிட்டு வாறேன்...’’

“ம்...’’

அவள் போய்விட்டாள்.

சுதாவுடன் பேசியதில் மனம் ஓரளவு அமைதியடைந்ததுபோன்ற உணர்வு. மனதில் இவ்வளவுகாலமும் ஏற்பட்ட புழுக்கம் தணிந்தது போலிருந்தது.

படுக்கையில் விழுந்து கண்களை மூடிக்கொண்டேன்.

புதியதோர் பரவச உணர்வு ஊற்றெடுத்து நாடிநரம்பெல்லாம் பொங்கிப் பிராவகமாகி, தேகத்துள் பரவி, மனதின் பாரங்களைப் பஞ்சாக்கி என்னை எங்கோ பிரபஞ்சத்தில் மிதக்கவைப்பதுபோன்ற பிரமை.

என் கண்களுள் கற்பனைக் குதிரைகள் விரைந்தோடிவந்து கதைகூற விளைந்தன.

அந்த ஆனந்த உணர்வுகள் எனக்குத் தேவையாக இருந்தன. ஏனெனில் என்னைச் சுற்றிச் சுழன்டிறெழும் ஆனந்த உணர்வுக் குவியல்களின் உச்சியில் சாரு மென்முறுவலுடன் எனக்காக நடமாடினாள்.

எனக்கு நன்றாகவே புரிந்தது, என் தெளிந்த மனதில் கலந்த உறவு சாருதான் என்று.

அவளிடம் என்னிலையை உடனே கூறவேண்டும்... எனினும் ஏதோ ஒரு அச்ச உணர்வு என்னைத் தடுத்தது. திடீரெனக் கூறும்போது என்ன எண்ணுவாளோ என்ற அச்சம்..!

எனினும், ஏக்கம் நிறைந்த விழிகளுடன் என்னைச் சிறைப்பிடிக்க முயலும் அவளுக்கு என் மனதைத் திறந்து, அங்கே அவள் புகுந்துவிட்டதைத் தெரிவித்தே ஆகவேண்டும்.

அப்போது அவளது நிலை என்னவாக இருக்கும்?! ஓடிவந்து கட்டியணைத்துக் கலகலப்பாளா? அறிய மனம் குரங்காகத் தாவியது.

எங்கும் அமைதி... எங்கும் நிசப்தம்... சுவர்க் கடிகாரம் ‘டிக், டிக்’ என்று நிசப்தத்தை விரட்ட முயன்றுகொண்டிருந்தது.

அப்போது... யாரோ மெதுவாக நடந்து வரும் ஒலி. அந்த ஒலி என்னை நோக்கித்தான் அண்மித்துக்கொண்டிருந்தது.

அந்த இருளில், அந்த உருவம் கட்டிலருகே வந்து என் பக்கத்தில்

அமர்ந்தது.

‘சாரு...!’

இந்த நேரத்தில் இந்த இடத்தில் சாருவா? நம்பமுடியாமல் ஆனந்தம் அணையுடைத்தது.

“சாரு...”

உணர்ச்சியில் நாத் தடுமாறியது.

அந்த அழகு நிலவு குனிந்து என் விழிகளை ஊடுருவியது. அந்த இருளைக் கிழித்தவாறு இரு கருவைரமணிகளாகக் கண்கள் பளபளத்தவேளையில், இரண்டு சொட்டுக் கண்ணீர்த்துளிகள் என் கன்னத்தில் பட்டுத் தெறித்தன.

“என்ன சாரு..?”

பதட்டமாக அவளது கரத்தைப் பற்றினேன்.

“அத்தான்! எவளவுநாள்தான் பொறுக்க முடியும்... உங்கள் எண்ணத்தைச் சொல்ல இன்னும் காலம் வரல்லையா?”

குரல் விக்கியது. சிறு விம்மல் வெப்பியாரத்துடன் வெடித்தது.

“சாரு...”

அவள் தோள்களைப்பற்றி என்னுடன் அணைத்துக்கொண்டேன். அவளது மூச்சுக்காற்று என் மார்பைச் சுட்டது.

“சாரு...’’

“ம்...’’

“உன் பெயரை உச்சரிக்கத் தெரிந்த இந்த இதயத்திற்கு உன்னிடம் என் காதலைச் சொல்லும் தைரியம் ஏன் இல்லை..?!!’’

“கவிதையா..?’’ - சிணுங்கினாள்.

“ம்... நளாயினி தாமரைச்செல்வன் எழுதியது... அதைமாதிரித்தான் இப்ப என்னிலை... என் மனதைத் திறந்துகாட்ட துணிவுவரும் நாளுக்காக காத்திருந்தன்...’’

அவள் காதுகளில் கிசுகிசுத்தேன்.

“உன் பார்வையால் என்னுள் மின்னல் ஒன்று எழுந்து ஓயும்..! உன் வார்த்தை ஜாலத்தில் என் நாடி நரம்பெல்லாம் வாத்தியமாகும்..!’’

சிரிப்புடன் அவள் மேவாயை நிமிர்த்தினேன்.

“சாரு... உனக்கும் கவிதை வருதே?’’

“இதுவும் நளாயினியின் கவிதைதான்... அவரது இன்னொரு கவிதை சொல்லட்டா...?’’

“ம்...’’

“தெரியாததுபோல் உன் தேவை கருதி நீ எனைத் தொடும்போது என்னுள் மிருதங்க அதிர்வு...’’ என்று கூறிவிட்டு குறும்புடன்

பார்த்தவளை அள்ளி அணைத்துக்கொண்டேன்.

அவள் கழுத்துள் முகம் புதைத்தேன்.

“ச்சீ... மீசை குத்துது...’’

“மீசை கூந்தலின் குழந்தை... கவிஞன் சொன்னதுண்டு... உன் கூந்தல் எந்தன் குழந்தையடி.... நான் சொல்கின்றேன்...’’ என்றவாறு அவள் கூந்தலை விரல்களால் வகிடெடுத்தேன்.

“இது யார் கவிதை?’’

“இது கரவை பரணின்ரை... அவர் கவிதை தெரியுமா?’’

“சொல் எறிந்தாயா? கல் எறிந்தாயா? சலனப்பட்டு நிக்கிறது மனத்தடாகம்... தாமரைத் தடாகத்தில் அரும்பத் தொடங்கும் தாமரைபோல் உன் நிழல்...’’

“அடடே.... உனக்கும் கரவைபரணின்ரை கவிதை தெரிந்திருக்கே...’’

“இது பரணியின்ரை கவிதை இல்லை... நளாயினியின்ரை கவிதை அத்தான்... இன்னும் சொல்லவா?’’

“ம்...’’

“எந்தன் வருகையில் எந்தன் அழைப்பினில் உன் செவ்வாய் மலரவேண்டும்...’’

“அப்படியா...’’

துடிக்கும் அவளது அதரங்களை நாடினேன்.

“ச்சீ… அது கரவைபரணியின் வரிகள் அத்தான்…’’

வெட்கத்துடன் கைகளுள் நெளிந்தாள்.

“ஓ!! என் உதடுகளுக்கு உன் முகவரி இட்டு காதல் கடிதம் அனுப்பட்டும் இதயம்…’’

சாரு விழியுயர்த்திப் பார்த்தாள்.

“இது நளாயினியின் கவிதை…’’

குறும்புடன் சிரித்தேன்.

“என்றென்றும் நீதான் வேண்டும். இப்படித்தான் என்றில்லை. இப்படியேதான் வேண்டும். எனக்கே… எனக்காக வேண்டும். என்னையே உனதாக்கவும் வேண்டும்.. இதுவும் கரவைபரணியின் கவிதைதான் அத்தான்’’ என்றவாறு இருகரங்களையும் என் கழுத்தில் மாலையாக்கிக் கொண்டாள்.

“உன் சிறுத்த விழியினுள் என் விம்பம் நான் காணவேண்டும்… என் மனதெங்கும் உன்வாசம் நீ சேர்க்கவேண்டும்… இதுவும் அவர் கவிதைதான்…’’

சிறகடித்துப் படபடக்கும் விழிகளை மெதுவாக ஒற்றினேன்.

உதடுகள் துடித்தன. கண்கள் செருகின.

துடிப்பை அடக்க நெருங்கியவேளையில்... என்னை உதறித்தள்ளி எழுந்த சாரு ‘கலகல’வெனச் சிரித்தாள்.

“சாரு...’’

ஏமாற்றத்துடன் கத்தினேன்.

அவளைக் காணவில்லை. எப்படி மறைந்தாள்?

எங்கும் அமைதி... எங்கும் நிசப்தம்... எங்கும் இருள்..!

“சாரு...’’

கத்தியவாறு கட்டிலைவிட்டு எழுந்தேன்.

ஓ... எதிரே கொம்பியூட்டர் திரை ஒளிர்ந்துகொண்டிருந்தது.

‘கனவா?’

ம்.. கனவுதான். இனிமையான கனவு.

‘தனிமை எனது பொக்கிசம். பூக்களின் மொழி அறிய, சிட்டுக் குருவிகளின் சீண்டும் ஒலி உணர, தென்றலின் காதல் லீலைகளை காதோடு அணைத்துக் கொள்ள, எப்போதும் தனிமை அவசியம்!’

கரவை பரணியின் வரிகள் எண்ணத்தில் எட்டிப்பார்த்தன.

அந்த இனிமையை இரைமீட்டியவாறே கணனியை நோட்ட மிட்டேன்.

சுஜி மெசன்சரில் என்னை அழைப்பது புரிந்தது.

ஓ.. என் முடிவு கேட்க வந்திருக்கிறாள். சிரிப்பு வந்தது. அவளுடன் பேச ஆயத்தமானேன்.

❍❍❍




(15)

“அண்ணாக்குட்டி! சுகமா இருக்கியா... பதில்... பதில்...”

வந்த உடனேயே ஆரம்பித்துவிட்டாள். எனது முடிவைக் கேட்பதில் தான் அவளுக்கு எவ்வளவு சந்தோசம்?! சிரிப்பாக வந்தது.

“ம்... முதல்லை சுகமாயிருக்கிறாயா? சாப்பிட்டியா? இதுக்குப் பதில சொல்லு...”

“சுகமாயிருக்கேன். சாப்பிட்டேன்... இப்ப பதிலை சொல்லு... சாரு அக்காவை விரும்புறியா? சொல்லடா அண்ணாக்குட்டி. நேற்றிரவு எனக்கு நித்திரையே வரலை தெரியுமா? உன்னைத்தான் நினைச்சேன். சாரு அக்காவை விரும்புறேன்னு சொல்லு..”

“சொன்னால்..?”

“சொன்னால் அண்ணாக்குட்டிக்கு ஒரு ம்மா தாறேன்... ஓகேயா?”

“ம்மாவா... அதுக்கும் பார்க்க பெரிசா ஒன்று தருவியா..?”

“என்ன.?”

“உன் பிக் **(pic)**...”

“வாட்..?”

“போட்டோ... உன் போட்டோ தருவியா..?”

“உனக்கெதுக்கு என் போட்டோ... என்ரை மெசன்சர்ல எத்தனை பேர்ட ஐடி**(id)** இருக்கு தெரியுமா? எழுபதுக்கு மேலை... ஒருத்தருக்குமே போட்டோ கொடுக்கலை...”

“உன்ரை மெசன்சர்லயும் எழுபதுக்குமேலை ஐடி இருக்கு. பிருந்தாவும் தனக்கு எழுபதுக்குமேலை ‘சற் பிரண்ட்ஸ்’ **(chat friends)** இருக்கெண்டாள்..?!”

“அவளுக்கு எங்கைடா எழுபது பேர்... என்ரை மெசன்சர்ல இருக்கிறதைதான் சொல்லியிருக்காள். அதோட ரண்டு மூண்டு பேரை ‘அட்’ **(add)** பண்ணியிருக்காள். அதுவும் ஒரு ஐடி... யாரோ லவ்லிபோய் என்று ஒண்டு.. அவனோடை பெரிய கரைச்சல்டா அண்ணாக்குட்டி.”

“என்ன கரைச்சல்..?”

“என்ரை படம் வேணுமாம்... நான் பிருந்தா இல்லை என்றாலும் நம்புறானில்லை. ‘லவ் பண்ணுறேன்’ அப்பிடி இப்பிடி எண்டு

கண்டபடி பேசுறான் அண்ணா. சரியான கெட்ட பொடியன். அவனை 'புளொக்'பண்ணப் போறன்… சரியான லூசு…"

"அப்ப எனக்கும் படம் தரமாட்டியா… ம்… பிருந்தாவும் இப்பிடித்தான். தான் நினைக்கும்போதுதான் படம் தருவேன் என்றாள். இப்ப ஆளையே காணேல்லை… நீயும் அவள் தங்கச்சிதானே… நீமட்டும் படம் அனுப்பவா போறாய்?"

"என்ன நீ… அவளைப்போல என்னை நினைக்கிறியா? நான் என்ரை வயது பெயர் எல்லாம் சொன்னேன்தானே? உண்மையாயே எனக்கு உன்னிலை அன்புதான் அண்ணா… நம்பமாட்டியா?"

அவள் கெஞ்சுவதுபோல இருந்தது.

"நம்புறேன்டா… இந்த நம்பிக்கையாவது நிலைக்குமா எண்டதுதான் என்ரை கேள்வி…"

"அண்ணாக்குட்டி… நான்தானே வலிய வந்து உன்னோடை பேசினேன்.. பிருந்தா வரமாட்டாள் என்று சொன்னது நான்தானே? சொல்லாமல் இருந்தால் என்ன செய்திருப்பாய்? ஏதோ உன்னோட பேசவேணும் என்று தோணிச்சு. பேசினபோது உன்னை அண்ணாமாதிரி நினைக்கணும்னு தோணிச்சு… என்னை பிடிக்கலைன்னா சொல்லு. நான் இனி வரலை…"

"ஐயையோ… நில்லுடா… என் செல்லச் சின்னக்குட்டிதானே…"

"உண்மையா..?"

"உண்மையா நான் உன் அண்ணன்தான்டா… என் செல்லக்குட்டிக்கு

கோபம் உடன வருது…”

“ம்… பின்ன என்ன… பிருந்தாவ மாதிரி என்னை நினைச்சால் கோபம் வரும்தானே..?”

“படம் அனுப்பமாட்டேன் எண்டியா… அதுக்காக அப்பிடிச் சொன்னேன்… சரி… இனி நான் படம் கேட்கமாட்டேன்டா.”

மனதில் எழுந்த ஏமாற்ற உணர்வை அடக்கிக்கொண்டேன்.

“நான் கேட்பன் அண்ணா…”

“என்னடா… படமா?”

“அது இல்லை… சாரு அக்காவிலை விருப்பமா… அவவை கலியாணம் கட்டுறியா எண்டு கேட்பன்…”

‘சரியான பிடிவாதக்காரப் பெட்டை.’ மனதிற்குள் சொல்லிக் கொண்டேன்.

“ம்… என்னடா சின்னப்பிள்ளைமாதிரி…”

“சின்னப்பிள்ளைதானே..?”

“பெரியமனுசியாகிட்டாய்… சாறி உடுத்து கொண்டாடினாய்னு நேற்றுத்தானே சொன்னாய்..?”

“லொள்… அண்ணாக்குட்டி.. கதையை மாத்தாதை. அப்ப பதில் சொல்லு… என்னாலை கனநேரம் ‘சற்’பண்ண முடியாது…”

“ஏன்…”

“அப்பிடித்தான்… சொல்லுடா. அச்சாப்பிள்ளை… நல்ல பிள்ளை…”

சிரித்துவிட்டேன். கணனிக்கு முன்னால் தனிமையில் வாய்விட்டுச் சிரித்த என்னை எவராவது கவனித்திருந்தால், நிச்சயமாக விசரனென்றுதான் நினைப்பார்கள்.

“ஓகே… சாருவைத்தான் கலியாணம் செய்யலாம் எண்டு நினைக்கிறன்டா… இப்ப சரியா..?”

“ஐய்யா… நீதாண்டா என்ரை அண்ணாக்குட்டி. மை செல்லச் சுவீற் குட்டி. எவளவு சந்தோசமா இருக்கு தெரியுமா..?”

என்னையும் சாருவையும் சேர்த்துவைப்பதில் நேற்று வந்தவளுக்கு இவளவு மகிழ்ச்சியா? எங்கோ ஒரு நாட்டில் இருந்து ‘சற்’றாடும் ஒரு பதினைந்து வயதுப் பெண்ணுக்கு ஏன் இந்த ஆனந்தம்? புரியவில்லை. வேகமான அறிமுகம்… வேகமான உணர்வுப் பரிமாற்றங்கள்… வேகமான முடிவெடுப்புகள்… இதுதான் ‘சற்’ உலகமோ?! பிருந்தா மனில் வந்து எள்ளிநகையாடுவதுபோல உணர்வு. உண்மைதான். ஒரு மூன்று மாத உரையாடல்தானே அவளைக் காதலிக்குமளவிற்கு என்னைப் பாதித்தது. அதேபோல ஒரு இரண்டுநாள் சுஜியின் உறவுதானே அவளை என் மனதிலிருந்து சுலபமாக அகற்றவும் உதவிசெய்தது?! நம்ப முடியவில்லை. ஆனால் நம்பித்தானாக வேண்டும்போலிருந்தது.

“அண்ணாக்குட்டி… என்ன செய்றாய்… ஓகே பண்ணடா?”

“எதை..?”

“மொக்கு மொக்கு… நல்லா பார்… லொள்…”

என்னால் என் கண்களையே நம்பமுடியவில்லை. அங்கே ஒரு சிறிய படம் மெசன்சர் யன்னலில் மிதந்துகொண்டிருந்தது.

அவசரமாக அந்த அனுப்புதலை ஏற்றுக்கொண்டேன்.

கைக்குள் இருந்த ‘எலி’யின் அழுத்தலில படம் விரிந்தது.

குறுகுறு விழிகளுடன் ஒரு சிறு நங்கை. கழுத்தில் ஒரு மெல்லிய வெள்ளிச் சங்கிலி. காதில் இரு சிறு வளையங்கள். அழகாக இருந்தாள்.

“யார்டா இது… நீயா?”

ஆச்சரியத்துடன் கேட்டேன்.

“நான்தான்… நம்பலையா?”

“ஐயையோ… நம்புறேன்… ஒருத்தருக்கும் படம் கொடுக்கிறதில்லை எண்டாய்..?”

“ம்… சாரு அக்காவை கட்டுறன் எண்டாய். அதுக்கு என்னவாலும் உனக்கு தரணும்போல தோணிச்சா… அதுதான் அனுப்பினேன். அண்ணா… உனக்குமட்டுந்தான் அனுப்பினேன். யாருக்கும் காட்டிடாதேடா…”

“நான் ஏன்டா காட்டுறேன்… வடிவா இருக்கிறாய்டா… நல்ல நீள கழுத்துடா உனக்கு. டான்ஸ் ஆடினா நல்லா இருக்கும்டா.”

“லொள்... டான்ஸ் பழகினேன்டா... விட்டுட்டேன்...”

“ஏன்டா...”

“நானும் என் பிரண்ட் ஒருத்தியும் பழகினோம். ரண்டுபேரும் மேடைகளிலைகூட டான்ஸ்பண்ணியிருக்கோம்...”

“பிறகு..?”

“அரங்கேற்றம் சேர்ந்து செய்ய இருந்தோம் அண்ணா. அதுக்கிடையில பாவம் அவள்...”

“அவளுக்கு என்னடா?”

“பிறைன் கூமர்டா... **(Brain Humor)**”

“என்ன... மூளைப்புற்றுநோயா... எத்தினை வயசுடா?”

“என்ரை வயசுதான்...”

“பொய் சொல்லாதை...”

அதிர்ச்சியாக இருந்தது. இவ்வளவு இளம் வயதில் மூளைப் புற்றுநோயா?

“என்ன மௌனம்?”

“......”

“செல்ல சின்னக்குட்டி… என்ன பேசாம இருக்கிறாய்?”

“……”

“என்னடா நீ… ஓகே… நீ பொய் சொல்லலைடா… பேசு…”

“ம்…”

“கோபமா? பாவம்டா உன் பிரண்ட். கடவுள் இப்பிடி சோதிக்க வேண்டாம்…”

“ம்… அதாலை அவள் டான்ஸ்க்கு வாறதில்லை. ஸ்கூலுக்கு போறதில்லைடா. வீட்டிலைதான்… என்ரை பிரண்ட்தானே? நானும் டான்ஸ் பழகுறதை நிறுத்திட்டேன்…”

“ஓ…”

“அப்பிடி ஒரு பிரண்ட். அவளில்லாட்டி நானில்லை. நானில்லாட்டி அவளில்லை… அப்பிடிப் பழகினோம் அண்ணா…”

“ஓ… அப்ப உனக்கும் கவலைதான்…”

“கவலையா… அதை மறக்கதானே ‘சற்’ இருக்கு… லொள்…”

“அப்ப அவள்..?”

“அவளும் வீட்டிலை இருந்து ‘சற்’தான்… லொள்… இப்ப அவளுக்கு அடிக்கடி தலையிடி வருதுடா. வந்தா தாங்க முடியாதுடா. எனக்கு தரன் அண்ணாக்குட்டிபோல… அவளுக்கும் ஒரு அண்ணாக்குட்டி

இருக்கான்... அவனோடதான் கனநேரம் ‘சற்’பண்ணுவாள். தலையிடியோடயும் ‘சற்’பண்ணுவாள்டா. அப்பிடி ஒரு பாசம் அவன்மேலை...”

“பாவம்டா...”

“சும்மா பாவம் அப்படி சொல்லாதைடா... பிறகு எனக்கு கவலை வந்தா உன்கூட பேசமாட்டேன். சரியா...”

“என்னடா நீ... நீதானே அவளைப்பற்றி சொன்னாய். நான் கேட்டனா? அதுக்கு பாவம்னு சொல்லக்கூடாதா?”

“ம்... உனக்கு சொல்லணும்னு தோணிச்சு அண்ணாக்குட்டி. ஆனா அவமேலை யாரும் இரக்கப்படுறதை என்னாலை தாங்கமுடியாது. அதுதான்... ஒரு புரொமிஸ் தருவியா அண்ணா?”

“என்ன?”

“இனி அவளைப்பற்றி பேசுறேல்லை எண்டு...”

அவளாக எவளையோபற்றிக் கூறிவிட்டு, அதைப்பற்றி இனிப் பேசாதேயெனச் சத்தியம் கேட்டது எனக்கு விசித்திரமாகத் தென்பட்டது. எனினும் சின்னப் பெண் என்பதால் அதைச் சாதாரணமாகவும் எண்ணத் தோன்றியது.

“ஓகே. புரொமிஸ்டா... அது சரி... என்ன நீ... வெள்ளிச் சங்கிலி போட்டிருக்காய். பவுண்ல போட்டா என்ன?”

“லொள்... மொக்கு மொக்கு... இதுதாண்டா பாஷன். இதையும் கழட்டிப்போட்டு கறுத்தக் கயிறு கட்டணும். அம்மா பேசுவாடா... லொள்...”

“ஐயோ... என்ன நீ... இப்பிடியே பாஷன் எண்டு உடுப்புகளிலை இருந்து எல்லாத்தையும் மாத்தினா... கடைசில தமிழினமே இருக்காதே...”

“லொள்... ஏன்டா தமிழினம்... பக்கத்திலை இருந்து சண்டை பிடிக்கவா... அடுத்தவை என்ன செய்யினம் எண்டு வெளிலைபோய்... பொய் பொய்யா கதைக்கவா?”

‘பதினைந்து வயதில் இவ்வளவு தெரிந்து வைத்திருக்கிறாளே?’ அவள் கூறுவதிலும் உண்மை இருக்கத்தான் செய்தது. இந்த உண்மைகள்தான் பலரை தம்மினம் மறந்து வாழ நிர்ப்பந்திக்கிறதோ?!

“உனக்கு எப்படிடா தெரியும்..?”

“நாங்க இருக்கிற ‘பில்டிங்’’ல வந்து பார்... அறுபது தமிழ் குடும்பமாலும் இருக்கும். டெய்லி சண்டை.... லிவ்றல போனாலும் சண்டை. படியால போனாலும் சண்டை....”

“ஆகா... அப்ப உனக்கு டெய்லி பொழுது போகும்... சண்டைப் படம் பாக்கத் தேவையில்லை...”

“லொள்... அண்ணாக்குட்டி... போகப்போறன்டா... தலையிடிக்குதுடா...”

“சரிடா... ஏன்டா தலையிடி..?”

“தெரியலைடா… நான் நாளை வாறேன். சரியா… ம்மாடா…”

அவள் போய்விட்டாள்.

❍❍❍




*(16)*

எனக்குள் புதிதாக ஒரு போராட்டம் ஆரம்பமாகிவிட்டது.

'சாரு என்னை விரும்புகிறாள். அதற்கும்மேலாக அம்மா எங்கள் இணைவை விரும்புகிறாள்...'

தெரிந்த விசயம். எனினும் எனது எண்ணத்தை, நான் சாருவின்மேல் கொண்ட அன்பை... இல்லையில்லை... புதிதாக ஏற்பட்ட காதலை அவளிடம் எவ்வாறு தெரிவிப்பது?!

அவளாக வலிய வந்த சந்தர்ப்பங்களை நழுவவிட்டதன் பலன் தற்போதுதான் புரிந்தது.

அவள் இலண்டனுக்குத் திரும்பிச் செல்வதற்கு இன்னும் ஐந்தாறு நாட்கள்தான் இருந்தன. அதற்குள் அவளிடம் என் உள்ளக் கிடக்கையைத் தெரிவித்தேயாக வேண்டும். ஆனால் எவ்வாறு தெரிவிப்பது என்பதுதான் புரியவில்லை. ஏதோ ஒரு இனந்தெரியாத அச்ச உணர்வு.

அவளது கரத்தைப்பற்றியவாறு ஒரு சில மணி நேரமாவது வீதியிலாவது பூங்காவிலாவது ஆற்றங்கரை ஓரத்திலாவது கதைபேசிக் காலாற நடக்கவேண்டும்.

தயக்கமாக இருந்தது. இந்த விசயத்தைப் பொறுத்தமட்டில் துணிவு என்னைவிட்டுத் தூர விலகி என்னைக் கோழையாக்கிவிட்ட தென்னவோ உண்மைதான்.

வலியச் சென்று தெரிவிக்க கூச்சமோ... அச்சமோ... அதனால் விளைந்த தயக்கமோ... ஏதோ ஒன்று தடுத்தது. அதனால் மனம் குரங்காகி நிம்மதியற்றுத் தவிக்க ஆரம்பித்தது.

மனதில் எழுந்த தீயால் நான் சாருவையே கூர்ந்து பார்க்க ஆரம்பிப்பதை என்னாலேயே உணர முடிந்தது. அவள் தூரத்தில் நடமாடும்போது அவளையே பார்ப்பதும், கிட்ட வரும்போது எங்கோ பார்ப்பதும் எப்போதுமில்லாத மாற்றமாய் என்னுள் புகுந்து கொண்டது. இவ்வளவு காலமுமில்லாத ஏதோ ஒன்று என்னுள் புகுந்து அவளுடனான எனது பழக்கத்தையே மாற்றிவிட்டதை என்னால் உணர முடிந்தது. இதுதான் காதலா? என்னையே கேட்டுக் கொண்டேன்.

அலைபாயும் உள்ளத்து உணர்ச்சிகளுக்குக் கடிவாளமிட முயன்றாலும், அணையுடைத்துச் சீறும் வெள்ளம்போலப்

பீறிட்டெழும் விநோத வெப்பியாரங்கள் கட்டுக்குள் நில்லாக் காவாலியாகின.

அவள் பார்வையில் தென்படும்போதெல்லாம் கண்கள் எங்கெல்லாமோ துளாவ ஆரம்பித்தன. அந்தத் துளாவலில் அவள் அழகு திரண்டுகொண்டுதானிருந்தது.

அமைதியான முகம்.. கருவண்டுகள்போல துருதுருக்கும் விழிகள்.. செதுக்கிவைத்த செங்கனிச் செவ்வாய்... பூஞ்சோலையொன்று வசந்த காலத்தில் பச்சைப்பசேலெனத் தண்மையுடன் கண்களுக்குப் பசுமை காட்டுவதைப்போலத் தெரிந்தாள்.

அந்த அருமையும் பொலிவுப் பெருமையும் தற்போதுதான் எனக்குத் தெரிய ஆரம்பித்தது. அந்தச் சோலையின் குளுமையில் குளிக்கவென எழும் எண்ணங்கள் சூறாவளியாய்த் தாக்கின. அவை என் சிந்தையில் சித்திரங்களாகிக் கனவுத் தோரணங்கள் கட்டிக் காட்சிகளாக விரிந்து இளமைத் தகிப்பின் எரிவுள் என்னை இட்டுச் சென்றவேளையில், ஒன்றைப் புதிதாக உணர்ந்தேன். அதுதான் காதலா?! அல்லது காதலின் எழுச்சிக்கு வியூகம் அமைக்க விழுந்த அடிக்கல்லா?!

காதல்...! மனங்களின் சந்திப்பின் மயக்கம் என்பார்களே! காமத்தின் பிடியுள்ளிருந்து பூத்துக் குலுங்கும் புனிதப் பிணைப்பென்பார்களே!

காமத்துக்கும் காதலுக்கும் சம்பந்தமுண்டா? இருக்கலாம்.. ஆனால் இதுநாள்வரை ஏற்படாத காமம் தற்போது ஏற்படுகிறதா? இல்லை.. இது அதற்கும்மேல்... ஆமாம். காதல்... காதல்... இது காதல்தான்.

எனக்குள் உண்டான கேள்விகளுக்கு நானே உருவாக்கிக்கொண்ட பதில்.

திடீரென நான் மாறித்தான் போய்விட்டேன். எனக்கே வியப்புக் கலந்த ஆனந்தம்.

அந்த ஆனந்த மாற்றத்தை அசைபோட்டவாறு வஸ் நிலையத்தில் நின்றுகொண்டிருந்தேன். செல்லவேண்டிய வஸ் வந்தது. சனம் அவ்வளவு இல்லை. உள்ளே ஏறி நோட்டமிட்டேன். சுந்தரும் நேசனும் இருந்தார்கள்.

“அடடே தரனா... இந்த ஊரிலதான் இருக்கிறியா... பாத்து எவ்வளவு நாளாச்சு..?’’

“ம்... வேலைகூட...’’ என நேசன் கேட்டதுக்கு பதிலளித்தேன்.

“முந்தி எல்லாம் புட் போல் என்றால் கிறவுண்ட்ல நிற்பாய். இப்போ அந்தப் பக்கமே காணேல்லை... அவ்வளவு வேலையா... நல்லதொரு புட்போல் பிளேயர்... தொடர்ந்து வரலாம்தானே?’’

“முயற்சிக்கிறேன்...’’

“உண்மையா முயற்சிப்பாயா..?’’ என்று கண் சிமிட்டினான் சுந்தர்.

“ஏன்..?’’

“இனி உனக்கு புட்போலில எல்லாம் இன்ரறஸ்ற் இருக்குமா தெரியேலை...’’

“ஏன்..?’’

“உனக்கு நான்தானே ‘சற் றூம்’களை காட்டினேன்... அதுக்கு பிறகு நீ நண்பர்களோட பழகுறது கொஞ்சம் கொஞ்சமா குறைஞ்சுட்டுது... ஐ மீன் நீ கொஞ்சம் கொஞ்சமா ‘சற்’றுக்கு அடிமையாகிட்டாய் எண்டு சொல்லுறன்... அப்பிடித்தானே தரன்?’’

“அடிமை எண்டு சொல்லுறியா சுந்தர்... அப்படி இல்லை... கவர்ச்சியான சந்திப்புகள். அவளவுதான். புதுப்புது விசயங்களிலை கவனம் செலுத்துறபோது பழைய விசயங்களுக்கு நேரத்தை ஒதுக்க முடியாம போறது சாதாரணம். அதுக்காக அதை அடிமை எண்டு சொல்லேலாது...’’

“என்னவோ... என்னைப் பொறுத்தளவிலை ‘சற்’ பிரயோசனமில்லாத பொழுதுபோக்கு எண்டுதான் சொல்லுவன்... ஊருப்படியா ஒரு அலுவலும் செய்யேலாமை சும்மா நேரம் போறதுதான் மிச்சம். ஒரு கதிரையிலை இருந்துகொண்டு கொம்பியூட்டரையே பார்த்துக்கொண்டு கண்ணையும் மனசையும் பழுதாக்கி ‘வேஸ்ற்’... ‘வேஸ்ற்’... கதிரையிலை மணித்தியாலக்கணக்கா சிறையிருக்கிறமாதிரி... வேதனையில்லாத சிறை... அப்பிடித்தானே? இது தேவையா?’’ என்று கேட்டான் சுந்தர்.

“ம்... எதையும் பாவிக்கிற விதத்திலைதான் சுந்தர் அதன் பலன்களும் கிடைக்கும். கத்தி மாதிரித்தான். கொலைக்கும் பாவிக்காம். சமையலுக்கும் பாவிக்கலாம். சத்திர சிகிச்சைக்கும் பாவிக்கலாம். நீ சொல்றதும் ஒருவிதத்தில சரிதான். இல்லையெண்டு சொல்லலை. கடல்லை நீந்தலாம்... மீன் பிடிக்கலாம்... முத்தெடுக்கலாம்.. சாகலாம்... அப்பிடித்தான். ‘சற்’றும் அப்படித்தான். வீணாயும்

போகலாம்… விவேகமாயும் ஆகலாம்… அது நாங்க ‘சற்’ பண்ணுறதைப் பொறுத்தது… இல்லையா?’’

மனதில் தோன்றியதைக் கேட்டேன்.

“எங்கட தமிழ் ‘சற் ரூம்’களுக்கு போய்ப் பார்த்தாய்தானே? ஒரே தூாசணம்… சகிக்கேலாத வக்கிரமமான பேச்சுகள்… இல்லாட்டி பொம்பிளையளை ‘சைற்’ அடிக்கவெண்டே அலைவாங்க… பொம்பிளையள் மட்டுமென்ன… அவங்களும் அப்பிடித்தான்… வேற என்ன அதில இருக்கு?’’

“அதுக்கும் மேலயும் இருக்கு… நட்புக்காக… நாலு விசயம் தெரியணும்னு ‘சற் ரூம்’ வாறவங்களும் இருக்காங்க. அவங்க தொடர்பு கிடைச்சா பல விசயங்களை அறியலாம். உதாரணத்துக்கு ஆங்கிலம் தெரிஞ்சவனோட அந்த மொழியப்பற்றி அறிய முடியும். இப்படி பலதை சொல்லலாமில்லையா? எமக்கு தெரியாத விசயங்களை உடனுக்குடன் மற்றவங்களிட்ட இருந்து அறிய இது நல்ல ஊடகமில்லையா… ஆனா அதை நாங்கதான் உண்டாக்கணும்…’’

“நீ சொல்லுறது சரிதான். ஒரு மொழியை மற்ற தமிழனிட்ட இருந்து படிக்கிறதுன்னா… அதுக்கு ஒரு பொது மொழி அவசியமில்லையா… அது தமிழாகத்தானே இருக்கணும்… ஆனால் ‘சற்’ பண்ணுறவங்களுக்கு தமிழ் அறிவு இருக்குமா எண்டதே சந்தேகமாயிருக்கு. நீ வேற..?’’ என்று அலுத்துக்கொண்டான் நேசன்.

“அதுவும் சாத்தியமாகும்… ஒருநாள் கட்டாயம் வரும்… ஏன் சொல்லுறன் தெரியுமா? தமிழ் சரியா தெரியாதவங்களும் தமிழ் ‘சற் ரூம்’ வாராங்க… அதுதான் தாய்மொழி வாசம்.. இப்ப இல்லாட்டிலும் ஒருநாள் அவங்களுக்கும் தமிழ் தேவைப்படும்… அப்போது வருவாங்க…’’

எதிர்பார்ப்புடன் கூறினேன்.

“அதுமட்டுமில்லைடா... கனடால அங்க வாழுற தமிழர்களது வாழ்க்கை... பிரச்சினைகள்... அவுஸ்ரேலியால அங்க வாழுற தமிழர்களது வாழ்க்கை... பிரச்சினைகள்... ஐரோப்பால அங்க வாழுற தமிழர்களது வாழ்க்கை.. பிரச்சினைகள்... ஏன்... தாயகத்தில வாழுற தமிழர்கள்... அவங்க வாழ்க்கை... அவங்க பிரச்சிகனகள்... இவைபற்றிக்கூட அந்ததந்த தமிழரோடை பேசலாம்...’’

“பேசி..?!’’

“உலகத்தில விரும்பியோ விரும்பாமலோ சிதறிச் சிந்தியிருக்கிற தமிழ் சந்ததி ‘சற்’ மூலம் இணையலாம்... அது நாளைய தேவைகளைப் புரிந்துகொண்டு அமைப்பு ரீதியாகவே வளரலாம்... அப்படி வளரும்போது பலவிசயங்கள் பலனுள்ளவையா அமையும். இல்லையா?’’

“இது சாத்தியமா?’’

“ஏன் சாத்தியமில்லை... இப்பகூட சிலபேர் கருத்தால ஒன்று பட்டவங்க... யாகூ போன்ற ‘சற்’ தளங்களிலை தங்களுக்கெண்டு அறை அமைச்சு பேசுறாங்க... இது காலப்போக்கில விரிவாகலாம்... இப்படியானவங்களோட செயற்பாடுகள் விரிவடையும்போது... பயன்களும் விரிவடையுமில்லையா?’’

என் மனதில்பட்டதைக் கூறினேன். அவர்களுக்கும் ஏதோ புரிந்திருக்கவேண்டும். அமைதியாக இருந்தார்கள்.

நான் இறங்கும் இடம் வர அவர்களிடம் விடைபெற்றேன்.

ஒன்றை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ‘சற்’ எனது பெரும்பகுதி நேரத்தை விழுங்கிவிட்டது. அதற்கும் கட்டுப்பாடு போடவேண்டும். தீர்மானித்துக்கொண்டேன். எதுவும் ஒருவனது கட்டுப்பாட்டை மீறினால் ஆபத்துத்தானே?! ‘அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும்’ என்று அனுபவமில்லாமலா கூறியிருப்பார்கள்?!

கணணியைப்போட்டேன்.

“ஹலோ அண்ணா...”

மெசன்சரில் ‘லவ்லிபோய்’ அழைத்தான்.

“அண்ணா... பிருந்தா சரியான ஏமாத்துக்காரிபோல இருக்கிறாளே! இப்ப தான் சுஜியாம்... என்னைத் தெரியாதாம்...”

“ம்...”

“இவளவையே இப்படித்தான் அண்ணா... நேரத்துக்கொரு பெயர். நேரத்துக்கொரு பொடியன்... களிசடைகள்...”

‘அப்ப நீ..?’

கேட்க நினைத்தேன். அடக்கிக் கொண்டேன்.

“என்னமா நடிக்கிறாள்... நான் என்ன இளிச்சவாயனே இவளவைன்ரை நடிப்பை நம்ப..? உப்பிடித்தான் இங்க லண்டன்ல என்னை ஒருத்தி பேய்க்காட்ட வெளிக்கிட்டா... என்கிட்டயா... அவவுக்குமேலால நான்விட்டன்...”

“ம்...’’

“என்ன ம்... அவ போட்டோகூட இருக்கு... ஹா... ஹா... என்ன நடந்தது தெரியுமோ? சொல்லுறன் கேளு...’’

அவன் கூற ஆயத்தமானான்.

❍❍❍




(17)

“அண்ணா…”

“ம்…”

“பெட்டைகளை நம்பாதைடா… பொடியங்களின்ரை உணர்ச்சிகளைக் கிளறிவிட்டு வேடிக்கை பார்க்கவெண்டே ஒரு கூட்டம் அலையுது…” என்று அறிவுரை கூறினான் லவ்லிபோய்.

“அப்பிடி எல்லாரையும் நினையாதை... பெண்களென்ன... ஆண்களென்ன... எல்லாரிலையும் எல்லாமாதிரியான குணங்கள் இருக்குதானே?’’

“உனக்கொண்டும் தெரியாது அண்ணா... ஒரு ஆறுமாதம் ‘சற்’ பண்ணியிருப்பியா? நான் எப்ப இருந்து ‘சற்’ பண்ணுறன் தெரியுமா? மூன்று வருசம்... மூன்று வருசமா ‘சற்’ பண்ணுறன்... அநேகமா தமிழ் ‘சற்’ ரூம்களுக்கு வாற முக்காவாசிப்பேரையும் தெரியும்...’’

“ம்... வருவாளவை... வலியக் கூப்பிட்டு பேசுவாளவை... படம் அனுப்புவினம். ‘டேட்ரிங்’ என்பினம்... எல்லாம் கொஞ்சநாளைக்கு.. பிறகு ஏன் நாயே எண்டு திரும்பியும் பாரளவை. தங்கடைபாட்டுக்கு வேறை எவனுடனோ ‘சற்’பண்ணுவாளவை. தாங்கள் பழகினதாலை ஒரு பொடியன்ரை மனசு என்ன பாடுபடும்... அவன் எவளவு வேதனைப்படுவான் எண்டதெல்லாம் ‘டோன்ற் கெயர்’...’’

“ம்... ஆனால் பொடியங்களிலையும் இப்பிடி இருக்கிறாங்கள் தானே?’’

“நீ என்ன ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொண்டு சொல்லுறாய்... உந்த ‘டேட்டிங்’ எண்டால் என்னெண்டு தெரியுமா?’’

“என்ன..?’’

“அவையள் வருவினம்... ஒரு பொடியனோடை ‘சற்’பண்ணுவினம்... பிறகு படம் அனுப்பிவினம். பிறகு ரெலிபோனிலை பேசுவினம். அதுக்குப் பிறகு ‘கபே’ல கோப்பி குடிக்க கூப்பிட்டுக் கதைப்பினம். சிலர் சினிமாக்குக்கூடப் போவினம்...’’

“இதுதான் ‘டேட்டிங்’கா?’’

“இது பொடியன் எப்பிடி எண்டு பழகிப் பாக்கினமாம்... பிறகு பிடிக்கேலை எண்டா... ஒரு ‘பாய்’. மறுபடி ‘சற்’... மறுபடி ஒரு பொடியன்... இதுதான் அண்ணா இவளவைன்ரை ‘டேட்டிங்.’’

“ஓ... முந்தி அரசர்கள் மகளுக்கு நடத்துற சுயம்வரம்போலை..?’’

“ஆகா... இது அவையே அவைக்கு நடத்துற சுயம்வரம் அண்ணா... இது வெள்ளைக்காரன் கண்டுபிடிச்சதாம்... லொள்...’’

“என்னவோ... ஒருத்தனோட குணங்களை அறிஞ்சு அவனோட வாழுறது நல்லதுதானே லவ்லிபோய்? காலங்காலமா இணைந்து வாழப் போறவங்களுக்கு ஒருவரை ஒருவர் புரிஞ்சுகொண்டு இணையுறது நல்லதாகத் தென்படலாம்தானே?’’

மனதில் தோன்றியதைக் கேட்டேன்.

“ஓகே... நல்லதாகவே இருக்கட்டும். இப்ப இவையளை நம்பி பழகுற பொடியனைப்பற்றி சிந்திச்சியா? அவனுக்கு அவளைப் பிடிச்சு எவளவு மனக்கோட்டைகளைக் கட்டுவான்... இவை பிடிக்கேலை எண்டு தூக்கி எறிஞ்சுட்டு போனால்... அவன் பாவம்தானே?’’

அவனது கூற்றிலும் நியாயம் இருப்பதாகவே தென்பட்டது.

“என்னவோ... இதில சொல்லுறதுக்கு என்ன இருக்கு? அவரவர் புரிந்து நடக்கணும்...’’

“அப்படி இல்லை அண்ணா... பிருந்தாவைப் பார். இப்ப சுஜியாம்...

தான் பிருந்தா இல்லையாம். என்னை யார் எண்டு கேக்கிறாள். நான் என்ன இளிச்சவாயனே? சொல்லு பார்ப்பம்.. உப்பிடி எத்தினைபேரை ‘சற்’றில பார்த்திருப்பன்… இப்படியானவளவைக்கு அவைமாதிரியே செய்து காட்டணும்… அப்பதான் புத்தி வரும்…’’

“ம்…’’

“ஒரு கொம்பியூட்டரைக் கண்டவுடனை உவைக்குத் தலைகால் புரியிறேலை… தங்கடைபாட்டிலை பொடியளைப் பேய்க்காட்டலாம் எண்டு நினைக்கினம்… அதுவும் எனக்கோ?’’

பெண்களால் ‘சற்’றில் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பானோ? அல்லது எவளையாவது காதலிக்கலாம் என்ற எதிர்பார்ப்பு ஈடேறாத தோல்வியால் ஏற்பட்ட மனக் கொந்தளிப்போ? அல்லது பெண்களைத் தூற்றுவதன்மூலம் தான் புத்திசாலி என்று எனக்குக் காட்ட விளைகிறானா?

இப்படியும் பலர் இருக்கிறார்கள்.

மற்றவர்களது குறைகளையும் இயலாமையையும் கூறுவதுபோலத் தமது திறமைகளை மறைமுகமாகத் தம்பட்டமடிப்பார்கள்.

அவனது பேச்சு எனக்குள் சற்று எரிச்சலைக்கூட ஏற்படுத்தியது. எனினும், வலிய வந்து ‘அண்ணா’ என்றழைத்து; உரையாடுபவனின் தொடர்பைத் துண்டிக்க மனம் வரவில்லை.

“எல்லாப் பெண்களையும் அப்படி நினைக்காதை லவ்லிபோய்… தனிய காதலுக்காகவோ பேய்க்காட்டறதுக்காகவோ ‘சற் ரூம்’க்கு வாறாங்க எண்டு சொல்லாதை. சிலர் என்னவோ நிச வாழ்க்கையில

சொல்ல முடியாததுகளைச் ‘சற் ரூம்’லை கொட்டித் திருப்திப் படுறாங்க. அவ்வளவுதான்… அதுக்காக எல்லாரும் ஒரே குட்டையில் ஊறின மட்டைகளில்லை…’’

“அண்ணா… நூத்திலை ஒண்டு ரண்டு விதிவிலக்கா இருக்கலாம். மற்றதுகள் எல்லாம் சும்மா காதல் கீதல் எண்டு அலம்புற கேசுகள் தான்…’’

“ம்… என்னவோ? உனக்கு அப்பிடித் தெரியுது…’’

“என்ர அனுபவம் அண்ணா. அதுதான் சொல்லுறன். இப்பிடித்தான் உமா என்றொரு ‘கேள்’ ‘சற் ரூம்’க்கு வந்தா… லண்டன்ல இருந்து… அங்க ‘சற் ரூம்’ல கன பொடியங்களை ‘சைற்’ அடிக்கிறன் எண்டு பேய்க்காட்டினா…’’

“ம்…’’

“இவவுக்கு முறையா பாடம் படிப்பீக்கவேணும் எண்டு ‘ப்ளான்’போட்டன். என்ரை நண்பன் விபுலனைச் ‘செற்’ பண்ணி அவளோடை ‘சற்’செய்ய விட்டன்…’’

“பிறகு…’’

“ஒரு பக்கத்திலை அவனோடை காதல் பேச்சு… இன்னொரு பக்கத்திலை என்னோடை காதல் பேச்சு. பாவம் உமா… நாங்கள் ரண்டு பேரும் அவ மெசன்சர்ல பேசுறதை ஒருத்தருக்கு ஒருத்தர் ‘கொப்பி’பண்ணி போட்டு வாசிக்குறது தெரியாம ரண்டு பேரோடையும் வழிஞ்சா…’’

“அட பாவி…”

“அதுக்குப் பிறகு படம் அனுப்பினா… ரெலிபோனிலயும் பேசினா… நாங்களும் மாறிமாறிப் பேசினம்…”

“ஓ…”

ஒருநாள் சினிமாக்கு என்னை கூப்பிட்டா..

“ம்…”

“இதுதான் சரியான சந்தர்ப்பம் எண்டு விபுலனையும் கூட்டிக்கொண்டு தியேட்டருக்குப் போனனன்… ஆள் திகைச்சுப் போனா. அதுக்குப் பிறகு ஆள் ‘சற் ரூம்’ பக்கமே இல்லை.. இப்பிடியானவளவைக்கு அவேன்ர வழியிலைதான் பதிலடி கொடுக்கவேணும் அண்ணா…”

“இப்படியும் நடக்குமா… நம்ப முடியேலை…”

“ம்… அவளின்ரை போட்டோ அனுப்புறன் பார். அப்பவாலும் நம்புறியா இல்லையா சொல்லு…”

“வேண்டாம் லவ்லிபோய்… எனக்கெதுக்கு அந்தப் படம்?”

“ஐயோ அண்ணா… எதுக்கும் பார்த்து வை. அவள் வேறை ஐடில வந்து உன்னை ஏமாத்தலாமில்லையா?”

என் பதிலை எதிர்பாராமலே அவன் அனுப்பிய படம் என் அனுமதிக்காக மெசன்சர் திரையில் காத்திருந்தது. ‘ஏற்கவா

வேண்டாமா’ என்ற எண்ணம் என்னுள்.

“ஓகே பண்ணு அண்ணா…’’

ஓகே பண்ணினேன்.

படம் வந்தது. அழுத்தினேன். கணனித்திரையில் படம் விரிந்தபோது… அது… அது… “ஐயோ…!!!’’ என்னை அறியாமல் கத்திவிட்டேன்.

என் நெஞ்சை ஏதோ அடைத்தது. கண்கள் இருண்டன. கணனித் திரை மங்கலானது.

விதி என்னைப் பார்த்துக் கைகொட்டிச் சிரிப்பதுபோலிருந்தது.

அதிர்ச்சியால் நிலைகுலைந்தேன். அந்தப் படத்தில் உள்ளது அவளா? அவளா? அவளேதான்.




(18)

இணையம் வந்த பிறகு உலகம் வெகுவாகச் சுருங்கிவிட்டது என்று பலர் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் அந்தக் கூற்று என்மட்டில் இவ்வளவுதூரம் உண்மையாகும் எனக் கனவிலேகூட நினைத்துப் பார்த்ததில்லை.

உலகம் ஒரு நாடாக ஊராக வீதியாக வீடாகக் குறுகிவிட்டது என்மட்டில். அதற்குச் சான்றாக கணனித் திரையில் அவளது படம்.. லவ்லிபோய் அனுப்பிய அவளது படம் கணனித்திரையில் மிதந்து என் மனதை ஆறா ரணமாக்கி குருதி ஊற்றை உருவாக்கிக் கொண்டிருந்தது.

யாரோ தன்னுடன் 'டேட்டிங்' கேட்டாள். எவளோ தன்னுடன் தொலைபேசியில் உரையாடினாள். சினிமாவுக்கு அழைத்தாளென்று அவன் அனுப்பிய அந்தப் படத்திலிருந்த அவள்… அவள் சாருவேதான்.

பெரியதொரு இடியொன்று சிரசிலிறங்கி மனதுள் புகுந்தது போலிருந்தது.

சப்தநாடிகளும் ஒருகணம் செயலிழந்தாற்போன்ற பிரமையில் சித்தம் கலங்கிச் சூழலும் அகமும் சூழும் இருளாகி அதனுள் பிணமாகி அழிழ்ந்து மிதந்து மீண்ட உணர்வில் செயலற்றேன்.

என் வாழ்வின் எழில் நிலவென எண்ணத்தில் ஏற்றிவைத்து வண்ணக்கனவுகளின் நாயகியாக நடமிட்டவள் என் முன்னே கணனித்திரையில் 'டேட்டிங்' என்ற பெயரில் ஆண் துணையைத் தெரிவுசெய்வதற்காக 'சற்'றில் சல்லாபிப்பவள் என்ற பெயருடன் படமாக இருந்து என்னைப் பொசுக்கினாள்.

உண்மையா… நம்ப முடியவில்லை. லவ்லிபோய் என்னைக் குழப்ப அனுப்பினானா? எப்படி? அவனுக்கெப்படித் தெரியும் அவள் என் மச்சாள் என்று? அவனைப் பொறுத்தவரையில் எவளோ ஒருத்தி. ஆனால் என்னைப் பொறுத்தவரையில்…?! அவள் என் இதய வானில் எழிலேற்றிக் கோலமிட்ட தேவதையென அவனுக்கெப்படித் தெரியும்?

'சற்'றையே வெறுப்பதுபோலக் கதைத்தாளே? ஒரு நாளோடு அந்தப் பக்கமே எட்டிப் பார்ப்பதில்லை என்று சொன்னாளே?! பொய்யா… வேசமா? இவனுக்கெங்கே தெரியப் போகிறது என்ற துணிவா?

'லவ்லிபோய்' கூறுவதைப்போல பெண்கள் எல்லோருமே வேசதாரிகளா? ஆண்களின் உணர்வுகளுடன் விளையாடி அவர்களின்

அழுகையில் ஆத்ம திருப்தி அடைபவர்களா?! ஆயிரமாயிரம் விசயங்களை மனதிலே புதைத்து, எதுவுமே புரியாதவர்களாய் நடமாடும் பதுமைகளா?!

நினைவுக் கோட்டைகள் நிர்மூலமாகும் வேதனையில் எண்ணங்கள் பல்வேறு கோணத்தில் எழுந்து வினாக்களாகி என்னைத் தவிக்கவைப்பதைத் தடுக்கும் வகையறியா தடுமாறினேன்.

எண்ணக் கனவுகள் யாவுமே சிலநொடிகளுள் சிறகிழந்த சிட்டுக்களாய் தரையில் விழுந்து புழுக்களாய் அவஸ்தையில் புரண்டு துடித்து நெளிந்தன. அவற்றின் துடிப்பின் உணர்வுக் கொந்தளிப்பில் சித்தங்கலங்கியவனாய் சிரசை மேசையில் சாய்த்து கைகளுள் புதைத்துக்கொண்டேன்.

அப்போது யாரோ என்னை நோக்கி வரும் அரவம். அம்மாதான்.

“தரன்… உன்னோடை ஒரு முக்கியமான விசயம் பேசவேணும்…’’

உள்ளத்து உணர்வுகளை அடக்கியவாறு அவளைக் கேள்விக்குறியுடன் நோக்கினேன்.

“மாமா திங்கள் கிழமை லண்டனுக்குப் பயணமாறார்… அதுக்கிடையில கதைக்க வேண்டியதுகளைக் கதைச்சால் நல்லதெண்டு உன்ரை அப்பாவும் நினைக்கிறார்… ம்… நாங்கள்மட்டும் நினைச்சால் போதுமே..? இந்தக் காலத்துப் பிள்ளையள் தாய் தேப்பன் ஒண்டை நினைக்க தாங்கள் ஏதோ நினைக்குதுகள்…’’

சொற்களால் சுற்றி எங்கே வர விழைகிறாள் எனப் புரிந்தது.

‘இனி கதைக்குறதுக்கு என்ன இருக்கு..? அதுதான் சற்றிலையே கதைச்சுட்டாங்களே..’

சொல்ல நினைத்தேன். மனதில் வெறுப்பு மூண்டது.

“இண்டைக்கு வெள்ளிக்கிழமை... பின்னேரம் கோயிலுக்கும் போகவேணும்... எங்கையும் போவிடாதை. அதுகள் போக இன்னும் மூண்டுநாள்தான் இருக்கு. அந்தப் பிள்ளை சாருவும் உன்னிலை நல்ல உயிராய் இருக்கிறாள்... வாயாலை சொல்லாட்டிலும் அவளின்ரை போக்குகளைப் பாக்கேக்கை... உனக்குத்தான் விளங்கேலை எண்டால் எனக்கும் அப்பிடியே..?’’

‘வேசம்... வேசம் அம்மா... அது உனக்குத்தான் புரியேலை அம்மா...’

மனதுள் குமைந்தேன்.

“ஊரிலை எண்டால் பெரியாக்களே காதும் காதும்வைச்சமாதிரி ஒப்பேத்திப்போடுவினம்... இந்த நாட்டில நாங்கள் நினைச்சாப்போலை சரியே... பிள்ளையள் என்ன நினைக்குதுகள் எண்டு வாயைத் துறந்து சொன்னால்தானே தெரியுது...’’

குரலில் ஏக்கம் எட்டிப் பார்த்து மறைந்தது.

‘அம்மாவுக்கு என்ன பதில் கூறுவது.. நான் கூறினால் நம்புவாளா.. அல்லது ஒப்பாரிவைத்து சொந்தங்களையே பகைமையாக்கிவிடுவாளா? திருமணம் வேண்டாம் என்று சொல்லலாமா? அல்லது அதற்கு அவசரமில்லை என்று..? அல்லது சாருவைப் பிடிக்கேலை என்று..? அல்லது பிடித்ததை எல்லாம் அவள் பிரித்தெறிந்துவிட்டாள் என்று..?’

குழம்பினேன்.

“என்னடா இன்னும் யோசினை... இண்டைக்கு ரண்டிலை ஒண்டு எனக்குத் தெரியவேணும். சொல்லிப்போட்டன். அந்தப் பிள்ளையில என்ன குறை... படிப்பில்லையா... வடிவில்லையா... குணமில்லையா... அதோடை ஒண்டுக்கை ஒண்டு... ஒரே உருத்து... வலிய வாற சீதேவியை வேண்டாமெண்டுபோட்டு ஆராலும் மூதேவியளை கொண்டரலாமெண்டுமட்டும் நினைச்சுப்போடாதை. சொல்லிப் போட்டன்...’’

விசயத்தைக் கூறி வெருட்டலில் இறங்கிவிட்டாள்.

ஏதாவது சொல்லித்தானாக வேண்டும். வெருட்டல் பலிக்கா விட்டால் அழ ஆரம்பித்துவிடுவாள். எதைத் தாங்கினாலும் அவளது அழுகையைத் தாங்க முடியாது.

என்ன சொல்வது? எப்படிச் சொல்வது? அதுதான் புரியவில்லை.

என் மனப் பாரங்களை எவரிடம் இறக்கி வைப்பது? யாரிடம் ஆறுதல் கேட்பது?

குழப்பத்துடன் கணனியைப் பார்த்தேன்.

“நான் இங்கை கதைச்சுக் கொண்டிருக்கிறன்... அங்கை என்ன கொம்பியூட்டரிலை..?’’ என்றவாறு கணனியைப் பார்த்தவளின் முகம் பிரகாசமானது.

“அட... கொம்பியூட்டரில சாருவையா பாத்துக்கொண்டிருக்கிறாய்... என்ன பிள்ளையடா நீ... அவளைக் கூப்பிட்டு முன்னாலை

இருத்திப்போட்டுப் பாரன்… ஆர் வேண்டாமெண்டது..? அதைவிட்டுப் போட்டு கொம்பியூட்டரிலை அவளின்ரை படத்தைப்போட்டுப் பாக்கிறியோ..?’’ என்று குறும்பு பொங்க ஆனந்தமாக வாய்விட்டுச் சிரித்தாள் அம்மா.

அவளை அவ்வாறு சந்தோசமாகப் பார்த்து எவ்வளவு நாட்கள்?!

எண்ணம் ஈடேறிய களிப்பு அவளுக்கு.

ஆனால் நான்… சொல்லவும் முடியாமல் மெல்லவும் முடியாமல் தவித்தேன்.

“அம்மா…’’ என்று கூற வாயெடுத்தேன்.

“இனி நீ ஒண்டும் சொல்லவேண்டாம் ராசா… உன்ரை மனசில என்ன இருக்கெண்டு அறிஞ்சதில எனக்குச் சந்தோசம்… அது போதுமப்பா… இனி நான் எல்லாத்தையும் பாத்துக்கொள்ளுறன்… சாருவும் என்ரை பிள்ளைதான்… என்ரை பிள்ளைகள் சந்தோசமாய் இருக்கவேணும். அதுதான் என்ரை ஆசை… நாட்டைவிட்டு வந்து சொந்தங்கள் தூரத் தூரப் போகுதே எண்டு கவலைப்பட்டன். என்ரை வயித்தில பால் வார்த்தாயப்பா. இதுவே எனக்குப் போதும் ராசா…’’ என்று என் கேசத்தைக் கோதிவிட்டு அங்கிருந்து சென்றவளை பிரமை பிடித்தாற்போல் கையாலாகநிலையுடன் பார்த்துக் கொண்டிருந்தேன் நான்.

நிமிடங்கள் கழிந்தன.

சாரு தேனீருடன் என் அறைக்கு வந்தாள்.

அம்மாதான் அனுப்பியிருப்பாள்.

சிரசு சூடாகியது.

அவளையும் கணனித் திரையையும் மாறிமாறிப் பார்த்தேன்.

அவளது பார்வை கணனித் திரையை அடைந்தது.

அவள் வைத்தகண் வாங்காமல் அதையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவள் என்ன கூறப்போகிறாள் என்பதற்காகக் காத்திருந்தேன்.

❍❍❍




(19)

கணனித்திரையையே சில வினாடிகள் பார்த்தவள் என்னை நோக்கித் திரும்பினாள். அவளது முகத்தில் நான் எதிர்பார்த்த அதிர்ச்சியோ கவலையோ எதையுமே காண முடியவில்லை. மாறாக ஆச்சரியத்தால் கண்கள் கருவண்டுகளாக உருள நின்றாள்.

“அத்தான்… இந்தப் போட்டோ எப்பிடி உங்களுக்கு வந்திச்சு..?’’

உணர்ச்சிகளுக்குத் திரையிட்டு எப்படி இயல்பாய் இப்படிக் கேட்க முடிந்தது?! நிதானமாய் எவ்வாறு வினா வந்து விழுந்தது?! தான் வசமாய் வலையில் விழுந்ததை உணர்ந்தும் உணராதவள்மாதிரி இயல்பாயிருக்க இவளால் எவ்வாறு முடிந்தது?! அவளவு உறுதியானவளா?! அவள் கண்களை ஊடுருவி வெறித்துப் பார்த்தேன்.

‘தெரியாமல் கேட்கிறாளா அல்லது போட்டோ அனுப்பியவர்களில் எவனிடமிருந்து இந்தப் போட்டோ எனக்குக் கிடைத்தது என அறியக் கேட்கிறாளா?’

வெறுப்புடன் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

“எப்பிடி வந்திருக்கும் எண்டு உனக்குத் தெரியாதா?’’

கண்களில் அப்போது சிறு கலக்கம் தோன்றி மறைந்தது. என்னை ஒருகணம் உற்று நோக்கியவள் அமைதியாகப் புன்னகைத்தாள்.

“தெரியும் அத்தான்… ‘சற்’மூலமா வந்திச்சா இல்லாட்டி அப்பா அம்மாமூலமா வந்திச்சா எண்டு அறியத்தான் கேட்டனான்…’’

“ஓ… ‘சற்’றிலை வந்ததெண்டால் ஆர் தந்ததெண்டு தெரியுமா?’’

“ம்… தெரியும்…’’

“எப்பிடி..?’’

எரிச்சலுடன் கேட்டேன்.

“ஒருத்தனுக்குத்தானே போட்டோ கொடுத்தேன். அதாலை தெரியும். அவன்தான் உனக்கு அனுப்பியிருப்பான்... இல்லையா?’’

“என்னவோ... படம் அனுப்புற அளவுக்கு அவனோட பழக்கமா?’’ என்று ஏளனமாகக் கேட்டேன்.

உள்ளே கோபம் கொழுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது.

“யுனிவர்சிற்றி ‘கொஸ்ரல்’ல ‘சற்’பண்ணுவாங்க.. ஒருநாள் உமாட அறைக்கு போயிருந்தேன்...’’

“ம்...’’

“அப்ப அவள் ‘சற்’பண்ணிக்கொண்டிருந்தாள்... அவன் பேர்கூட லவ்லிபோய் என்று நினைக்கிறன்... ஓ... அவன்தான்... அப்ப அவள் என்னையும் அவன்கூட ‘சற்’பண்ண சொன்னாள். அண்டைக்குதான் முதன்முதலா ‘சற்’பண்ணினேன் அத்தான்... அப்ப அவன் என்ரை போட்டோ கேட்டான். இவள் உமாதான் தன்ரை கொம்பியூட்டரில இருந்த என்ரை போட்டோவை அனுப்பினாள்...’’

“ம்... அவன் படம் கேட்டானாம்... அனுப்பினாவாம்... அவன் எப்பிடிப்பட்ட ஆள் எண்டு தெரியாமை எப்பிடி படம் அனுப்பினாய்..? நம்பச் சொல்லுறியா?’’

சற்றுக் கோபமாகக் கேட்டேன்.

“அத்தான்! நான் ஏன் பொய் சொல்லவேணும்? அண்டைக்குத்தான் முதன்முதலா ‘சற்’பண்ணினன்... அதுவும் ஜானு கூப்பிட்டு... அதுதான் கடைசியும். நானும் யோசியாமை ஜானுவை படம் அனுப்ப

விட்டுட்டன்... பிறகுதான் அவசரப்பட்டு படம் அனுப்பினதுக்கு 'பீல்'பண்ணினேன்... அதுக்கு பிறகு 'சற்'பற்றி பலவிசயங்களை 'பிரண்ட்ஸ்'மூலம் அறிஞ்சன்... 'சற்'றால எவளவோ நல்ல விசயங்களை செய்யலாம்தான். ஆனா எங்கடை ஆக்களிலை கனபேர் 'சற்'றை கெட்ட வழீலதான் பாவிக்கினம் எண்டு புரிஞ்சுது. என்ரை 'பிரண்ட்ஸ்' கதை கதையா சொல்லுவாங்க... உதாரணமா சிங்களாக்களின்ரை 'சற்'ல போய் தமிழ், தமிழீழம் எண்டு பேசி அவங்களோடை சண்டை பிடிப்பாங்களாம். தமிழ் 'சற்'களிலை கெட்ட வார்த்தையால பச்சை பச்சையா பேசி 'கேள்சை' சண்டைக்கிழுப்பாங்களாம்... இப்பிடி பல கேள்விப்பட்டன்... அதாலை அந்தப் பக்கம் போகாமையே விட்டுட்டன். ஆனா அந்தப் படம் எப்பிடி இங்க..?'' என்று கேட்டாள் சாரு.

"எப்படி வந்தது?''

கேலியாகக் கேட்டேன்.

அவனைப்பற்றி... அவன் சொன்ன விசயங்களைப்பற்றி... அதற்கு அத்தாட்சியாக அவன் அனுப்பிய அந்தப் படத்தைப்பற்றிக் கூறியபோது...

"போதும்... போதும்...'' என்று விம்மியவாறு அங்கிருந்து ஓடினாள் சாரு.

"சாரு... சாரு...''

அழைப்பிற்குத் திரும்பியும் பாராமல் அங்கிருந்து அகன்று விட்டாள்.

‘அந்த விம்மலின் அர்த்தம் என்ன?!’

உண்மை தெரிந்துவிட்டதே என்ற அதிர்ச்சியா அல்லது அபாண்டமாகப் பழி வந்து சேர்ந்துவிட்டதே என்ற அங்கலாய்ப்பா?

என்னால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை.

திக்குத் தெரியாத காட்டிலே திசையறிய யாராவது உதவமாட்டார்களா என்ற ஆதங்கத்துடன் நிலைகுலைந்தவனாய் மனதுள் தத்தளித்தேன்.

அந்த லவ்லிபோயிடமே மறுபடிக் கேட்கலாமா? கேட்டாலும் என் குழப்பம் தீர விடை கிடைக்குமா?

ஆண்டாண்டுகாலமாய் அத்தான் அத்தானென என்னுடன் பழகும் சாருவை நம்புவதா? ஒரு சில நாட்களாக அல்லது வாரங்களாக என்னுடன் ‘அண்ணா அண்ணா’வெனப் பழகும் லவ்லிபோயை நம்புவதா?

துடுப்பிழந்த படகாய் தவித்தேன். நிச்சயமாக எனக்குக் கரை காட்ட ஒரு கலங்கரை விளக்கம் தேவை. அது யார் உருவில் வரும்?!

மனதில் சிறு உறுத்தல்.

அன்று சுஜி ஒரு படம் அனுப்பியபோது ஏற்றுக்கொண்ட நான், தற்போது சாரு யாருக்கோ ஒரு படம் அனுப்பியதைத் தாங்க முடியாதவனாய்விட்டேனா? அல்லது சாருதான் லவ்லிபோய் சொன்ன ‘உமா’ என்ற சஞ்சலமா?

யோசனையுடன் கணனித் திரையை நோக்கினேன்.

சுஜி மெசன்சரில் அழைப்பதற்கான அறிகுறி தெரிந்தது.

அவளுடன் உரையாடத் தயக்கமாக இருந்தது.

உரையாடினால் நிச்சயமாகச் சாருவைப்பற்றிக் கேட்பாள்.

'என்ன சொல்வது..?'

எனினும் அந்தச் சின்னஞ்சிறிய பாச உள்ளத்துடன் உரையாடும் ஆர்வத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கணனியை நெருங்கினேன்.

சாருவின் படம் திரையைவிட்டு அகல, சுஜியின் மெசன்சர் யன்னல் கணனித்திரையில் பெட்டியாக விரிந்தது.

"ஹலோ சுஜிக்குட்டி... சுகமா?"

"சுகம்டா அண்ணாக்குட்டி... என்ன செய்தாய்? எவளவுநேரமா என்ரை பதிலுக்கு 'வெயிட்'பண்ணுறேன் தெரியுமா?"

உரிமையுடன் கடிந்துகொண்டாள்.

"அண்ணி சுகமா?"

"அண்ணியா..?"

"லொள்... சாரு அண்ணி..."

"ம்..."

“என்ன ம்… அவங்களை ‘லவ்’பண்றேன்னு சொல்லிட்டியா?’’

“நோ…’’

“ஐயோ… மொாக்கு… மொாக்கு… என்ன ‘டிலே’? கெதியா சொல்லுடா அண்ணா… என்னால ‘டிலே’பண்ணேலாது…’’

“ஏன்..?”

“திங்கள் கிழமை ஒரு இடத்துக்கு போறன்டா. பெரிய ‘றிப்’…”

“ஓ… எப்போ திரும்பி வருவாய்..?”

“தெரியாதுடா… சிலவேளை வரமாட்டேன்.”

“என்ன…?”

“ம்… போற இடத்தில பிடிச்சுக்கொண்டா அங்கயே ‘செற்றில்’ ஆயிடுவேன் அண்ணா. அதுக்கிடைல உன்னோடயும் சாரு அண்ணியோடயும் பேசணும்டா… ப்ளீஸ்டா… நீ என்ன அண்ணா… இன்னும் ‘லவ் யூ’ சொல்லாம இருக்காய்… அதைக் கேட்கத்தானே ஆசையோட இப்ப வந்தேன்…”

“அது சரி… இப்ப எங்க போறாய்? எதுக்கு ‘செற்றில்’ ஆகப் போறாய் சொல்லு…”

“ம்… உனக்கு சொல்லாம போகமாட்டேன் அண்ணா. இன்னிக்கு என்ன கிழமை… வெள்ளிதானே… சன் டே… ஞாயிற்றுக் கிழமை

‘சேர்ச்’சுக்கு போவிட்டு வந்து கட்டாயம் சொல்லுவன்... இன்னொண்ணு..!”

“என்ன..?”

“அதுக்கிடைல சாரு அண்ணிக்கு ‘லவ் யூ’ சொல்லி, அவங்களையும் மெசன்சருக்கு கூட்டிகொண்டு வரணும்... உங்க ரண்டு பேரோடையும் ‘சண்டே’ ‘மைக்’ல பேசுவேன்...”

“றியலி..?!”

வியப்பாக இருந்தது.

“ஷ்யர்... நிச்சயமா அண்ணா... உன்னோடை ‘மைக்’ல பேசணும். என் அண்ணா குரலை கேட்டுட்டு... ‘றிப்’ சந்தோசமா போகணும். இதுதான் இந்த தங்கச்சிக்குட்டின்ர ஆசை. நிறைவேத்துவியா?”

“இப்ப பேசேன்டா...”

ஆர்வத்துடன் கேட்டேன்.

“நோ... சாரு அண்ணியும் இருக்கணும்... அவங்களிட்ட நான் ஒண்ணே ஒண்ணு கேட்கணும்...”

“என்ன..?”

“ஐயோ அண்ணா... ‘சண்டே’மட்டும் பொறுடா. இன்னொரு ‘சர்ப்ரைஸ்’... லொள்...’’

“என்ன..?!”

“ஞாயிற்றுக்கிழமை பிருந்தாவும் உன்னோட ‘மைக்’ல பேசுவாள்…”

இப்பொழுது எனக்கு நிசமாகவே தலைசுற்றியது.

“என்ன விளையாடுறியா..?”

நம்பமுடியாமல் கேட்டேன்.

“இல்லை அண்ணா. உண்மைதான்… பிருந்தாக்கு ஒரு பாட்டு பாடிக் காட்டினாயாமே…”

“ம்… என்ன பாட்டு…?”

“மறந்துட்டியா… லொள்…”

“யா… ‘ஐஸ்கிறீம் சிலையே நீதானோ…’ ரண்டு வரி பாடினேன். ஒருநாள் முழுக்கப் பாடணும் எண்டு சொன்னாள்… அதுக்குப் பிறகுதான் காணலையே?”

“லொள்… அந்த பாட்டை முழுக்க ‘பிறிபெயர்’பண்ணி வைக்கச் சொன்னாள்… ஞாயிற்றுக் கிழமை பாடணும். சொல்லிட்டேன். அப்போதான் நீ அச்சா அண்ணா… ஓகே?”

“எனக்கு ஒண்ணுமா புரியலைடா…”

“சண்டே’ எல்லாம் புரியும் அண்ணா. எனக்கு நிறைய வேலை இருக்கு… போவிட்டு ‘சண்டே’ வாறேன். சரியா..?’’

“ம்...’’

“ஐயோ அண்ணா ஒரு விசயம் மறந்துட்டேனே...’’

“என்னடா...”

“அந்த லவ்லிபோய் ஒரே கரைச்சல்டா... உனக்கு எதோ படம் அனுப்பினானாம். அதபற்றி பேச உன்னை மெசன்சர்ல கூப்பிட்டானாம். நீ ‘ஒன்லைன்’ல இருந்துகொண்டு பதில் சொல்லலையாம். உனக்கு ‘ஓவ்லைன் மெசேஜ்’ போட்டானாம்... பாத்தியா?”

அப்போது அவற்றைக் கவனிக்கும் நிலையிலா நான் இருந்தேன்?!

“ஓகேடா... நான் பாக்கிறேன்...”

“சீயூ அண்ணாக்குட்டி...”

அவள் சென்றதும் லவ்லிபோய் அனுப்பிய ‘ஓவ்லைன் மெசேஜ்’ஜை திறந்தேன்.

“சொறி அண்ணா... அவசரத்தில் உமாட படம் என்று அவள் பிரண்ட் ஒருத்தியின் படத்தை அனுப்பிட்டேன். அடுத்தமுறை சந்திக்கும்போது உமாட படம் தாறேன்... சொறிடா...”

ஓ... அவசரப்பட்டு விசயத்தைப்போட்டுடைத்து சாருவின் மனதைப் புண்ணாக்கிவிட்டேனே?!

குற்ற உணர்வுடன் அவசரமாக அவளது அறைக்கு விரைந்தேன்.

அங்கே என் சாரு... பொலிவிழந்த ஓவியமாய் தலையணையுள் முகம்புதைத்து விம்மிக் கொண்டிருந்தாள்.

அந்தக் காட்சியில் என்னை மறந்து அவள் அருகே சென்றேன்.

சூழல் மறந்தது. கூச்சம் தகர்ந்தது. தயக்கம் ஒழிந்தது. தடுமாற்றம் அழிந்தது. என்னையே இழந்தேன்.

கொழுகொம்பற்ற கொடியாய் வதங்கிப் போயிருந்தவளை வாரியணைத்துக்கொண்டு..

“சாரு... என்னை மன்னிச்சுடடா... ஐ லவ் யூ சாரு... ஐ லவ் யூ...’’ என்று கண்கள் கலங்கப் பிதற்றினேன்.

❍❍❍




*(20)*

வீடே முற்றிலும் மாறிவிட்டது.

சாருவின் முகத்தில் குதூகலப் பொலிவு. துள்ளியோடும் மானாகிவிட்டாள். அதைக் கண்டு அம்மாவுக்கு வாயெல்லாம் பல்.

கூடியளவு என்னையும் சாருவையும் தனிமையில்விட்டு, பெரிசுகள் ஒதுங்க ஆரம்பித்தார்கள்.

தங்களது எண்ணங்கள் ஈடேறிய களிப்பு அவர்களுக்கு.

“சாரு! இண்டைக்கு உன்னோடை கொஞ்சம் மனம்விட்டு பேசணும்…” என்றவாறு அவளருகில் அமர்ந்தேன்.

கேள்விக்குறியுடன் பார்த்தாள்.

“ஆத்தங்கரையடில ஒருநாள் சொன்னது ஞாபகமிருக்கா... என்ரை மனக்குழப்பங்களை நிச்சயமா உன்னட்டை சொல்லுவன் எண்டு...”

வியப்புடன் என்னைப் பார்த்தாள்.

“அதை இப்ப சொன்னால்தான் எனக்கு நிம்மதி. இல்லாட்டி அதை சொல்லும்மட்டும் குற்ற உணர்வு எனக்குள்ளை இருந்துகொண்டே இருக்கும். அது சரியோ.... இல்லாட்டில் பிழையோ தெரியேலை... ஆனா நீ அதை அறிஞ்சிருக்கணும்... இல்லையா?’’

சிறிது குழப்பம் அவளிடம்.

என் ‘சற்’ பிரவேசம்... பிருந்தாவுடனான அறிமுகம்... என்று ஒவ்வொன்றாகக் கூறினேன்.

“என்னமோ தெரியலை சாரு... அவளை நான் காதலிக்கிறதாகத் தான் நினைச்சன்... அது காதலா இல்லாட்டில் ஒரு கவர்ச்சியா... இல்லாட்டில் ஒரு சலனமா எண்டது வேறை விசயம்... ஆனா அவள் என்ரை காதலுக்கு ‘ஓகே’ சொல்லியிருந்தா... இப்ப அவள்தான் காதலியா இருந்திருப்பாள்...”

சாருவைக் கூர்ந்து பார்த்தேன்.

எதுவித சலனமும் இல்லை.

“ம்... ‘சற்’றிலை இதெல்லாம் ‘நோர்மல்’ அத்தான்... வாயாலை கதைக்கிறதிலையும் பாக்க, எழுத்திலை வாசிக்கேக்கை பாதிப்புகள் கூடத்தான்... ‘சற்’றிலை எழுத்திலைதானே கதைக்கிறாங்க... அதாலை மனப்பாதிப்புகள் வாறதுக்கு நிறையச் சந்தர்ப்பங்கள் இருக்கு...”

அறிவுபூர்வமாகப் பேசினாள்.

“நேரில சந்திக்கேக்கை காதலைத் தெரிவிக்கிறது மிகவும் கஸ்டம்.. கூச்சம்... பயம்... சூழ்நிலை எண்டு கனக்கக் குறுக்கிடும்.. ஆனா ‘சற்’றில எதையும் சுகமாச் சொல்லிப்போடலாம்... அதாலை காதலிக்காதவனுக்கும் காதல் வரும்... காதல் வந்தவனுக்கும் தூக்கி எறிய மனசும் வரும்...” என்று கூறிவிட்டு நகைத்தாள்.

“சாரு... உண்மையாத்தான் கேக்கிறன். உனக்கு என்னிலை வெறுப்பேதும் வரேலையா?”

குறும்பாகப் பார்த்தாள்.

“ஐயோ அத்தான்... அது காதல் இல்லை... ஒரு வேகம் எண்டது எனக்கு தெரியும். சரி... காதலாய்த்தான் இருக்கட்டுமே? பரவாயில்லை... நான்தானே உங்களை காதலிச்சேன்... நான் காதலிச்சவர் எனக்குக் கிடைச்சுட்டார்... அவரை எப்பிடி என்ரை காதலுக்கை வைச்சிருக்கிறதெண்டு எனக்குத் தெரியாதா?” என்றவாறு கரங்களை என் கழுத்தில் மாலையாக்கினாள் சாரு.

“நான் இன்னும் ‘சற்’ ‘பிரண்ஸ்’பற்றி சொல்லி முடிக்கேலையே...” என்று அவள் பிடியுள் தடுமாறினேன்.

“ஏன்... இன்னும் ஆராலும் ‘லவ்வர்ஸ்’ இருக்கினமோ..?!”

“ஐயோ... விடுடீ” என்று வலியால் அலறியவாறு அவள் கடித்த காதுச் சோணையைத் தடவிக்கொண்டேன்.

“ஐயோ மொக்கு.. அப்பிடி இல்லை... அவங்களைப்பற்றியும் உனக்குச்

சொல்லவேணும்… நீ நினைக்கிறமாதிரி ‘சற்’பண்ணுறவங்க எல்லாரும் கெட்டவங்களும் இல்லை… ‘சற்’பண்ணாதவங்க நல்லவங்களும் இல்லை…”

“ம்… எனக்கோ… அதெல்லாம் இப்ப எதுக்கு…? ‘சற்’றைப்பற்றி கதைக்கவா உங்களைக் காதலிச்சேன்…?”

குறும்பும் குதூகலமும் பொங்கி வழிந்தது.

“சரி… ஆரைப்பற்றிச் சொல்லாட்டிலும் என்ரை சுஜிக்குட்டியைப் பற்றிச் சொல்லணும். அவளாலைதான் இவ்வளவு விரைவா உன்னை நெருங்கி வர முடிஞ்சுது?”

“சுஜிக்குட்டியா…?”

தோளில் புதைத்த முகத்தை நிமிர்த்தி ஆச்சரியத்துடன் கேட்டாள்.

அவளைப்பற்றி… ‘சாருவுக்கு ஐ லவ் யூ சொல்லு’ என்று வற்புறுத்தியதைப்பற்றி கூறினேன்.

“ம்… அந்த குட்டிக்கு நானும் ‘தாங்ஸ்’ சொல்லணும்… என் அத்தானை என்னுடன் சேர்த்ததுக்கு…”

“நிச்சயமா… நாளைக்கு அவள் மெசன்சர்ல வருவாள்… உன்னையும் வரச் சொன்னாள்…”

“ஐயோ…”

“என்ன..?”

“வேண்டாம் ராசா... ஆளை விடுங்க. நீங்களும் உங்கடை ‘சற்’றும்...”

“ப்ளீஸ்டி... நாளைக்கு ஏதோ முக்கிய விசயம் கதைக்கணுமாம்... எனக்காக வரமாட்டியா?”

கெஞ்சலுடன் பார்த்தேன்.

ஞாயிறு பிறந்தது.

மனம் ஆலாய்ப் பறந்தது.

கணனித் திரையையே பார்த்துக்கொண்டிருந்தேன்.

“ஹேய் அண்ணா..!”

அவசரமாக சைகை காட்டிய பெட்டியை அழுத்தினேன்.

அது சுதா...

“சொறிடா... கொஞ்சம் பிசி... அதான் கனநாளா வரலை... உனக்கு ஒன்று சொல்லணும்... அதுதான் வந்தேன்... லொள்...”

“என்ன லொள்... ஏதாலும் ‘ஜோக்’கா?”

“ம்... அப்பா அம்மா கலியாணங் கட்டுன்னு ஒரே ஆக்கினைடா. கடைசியா அவங்க ஆசையை ஏன் கெடுப்பான்னு சரின்னு சொல்லிட்டேன்...”

“ஓ... நைஸ்... வெரி குட்.... மாப்பிளை எப்பிடி?”

“லொள்... நிறைய பேசினோம்... என்னைப்பற்றி எல்லாம் சொன்னேன்... ஹீ ஸ் ஏ கிரேட் எண்டு நினைக்கிறேன்... யாருக்கு தெரியும்?”

“அப்பிடி சொல்லாதை... நம்பிக்கைதான் வாழ்க்கை.. எல்லாரும் கெட்டவங்களுமில்லை. எல்லாரும் நல்லவங்களுமில்லை... எல்லாம் உன் கைலதான் இருக்கு...”

“ம்... பெரிய மனுசன் ‘அட்வைஸ்’ சொல்ல வந்திட்டார். அண்ணா... நீ எப்பிடி இருக்காய்?”

“ஹா... ஹா... இப்போ சாருவோட இருக்கேன்...’’

“லொள்... யார் அது..? யா... உன் மசசாள்தானே?’’

“வருங்கால மனைவி...’’

“சந்தோசம்டா... ‘ஹனிமூன்’கு கனடா வாறியா... என் வீட்டிலதான் தங்கணும். சொல்லிட்டேன்...’’

“ஐயையோ... கலியாணம் இப்ப இல்லைடா... அவவுக்கு படிப்பு முடியணும்... நிச்சயமா ஒருநாள் உன்னைப் பார்க்க வருவோம்... நீ சந்தோசமா இருக்கிறத இந்த அண்ணா பார்க்கணும்...’’

“தாங்ஸ்டா... ‘வெட்டிங் இன்விடேசன்’ அனுப்புவேன்... பெரிய பார்சல் வரணும். புரியுதா..? லொள்... ஓகேடா... சாரு அண்ணி... அண்ணாவ கவனமா பார்த்துக்கோங்க... அப்புறம் சந்திப்போம்...

பாய்...''

“சீயூடா...''

அவள் போய்விட்டாள்.

அவளது வாழ்விற்கும் ஒரு விடிவு தோன்றியதில் உண்மையிலேயே சந்தோசமாக இருந்தது.

“ஐயோ... நாளைக்கு பயணம் போக ஆயத்தப்படுத்தணும். நிறைய வேலை இருக்கு. எங்கை அந்த சுஜிக்குட்டி?''

“கொஞ்சம் பொறு... அவளும் நாளைக்கு எங்கையோ பயணம் போறாளாம். கட்டாயம் வருவாள்...''

அவள் வந்தாள்.

“அணணாக்குட்டி... சுகமா இருக்கியா..?''

“ம்... நீ?''

“இருக்கேன்...''

“அது தெரியும்... நிண்டா ‘சற்’பண்ணுவாங்க?''

“லொள்... சாரு அண்ணி வந்தாவா? ஐ லவ் யூன்னு சொல்லிட்டியா? ரெல் மீ... ரெல் மீ...''

“ஐயோடி.... சாரு பக்கத்திலதான் இருக்கா...''

“வாவ்… நியலி? பொய் சொல்லாதை…’’

“ஏன்டா பொய் சொல்லணும்… உண்மையாத்தான் பக்கத்தில இருக்கா. வேணுமெண்டா ‘மைக்’ போடு… அவ பேசுவா…’’

“ஐயோ…’’ என்று என் தலையில் செல்லமாகக் குட்டினாள் சாரு.

“நீ என் அண்ணாக்குட்டிதான்… செல்ல அண்ணாக்குட்டி… ரொம்ப தாங்ஸ்டா… அப்ப ‘மைக்’ல பேசப் போறோம்… அப்புறம் என்னை நீ ‘வெப்காம்’ல பாக்கப் போறாய்… ஓகே?’’

என்னால் நம்பமுடியவில்லை.

“ஓ… உண்மையாயா?”

“ம்… அதுக்கு முன்னால ‘ஓடியோ ஒன்’ பண்ணுறேன். ‘ஓகே’ பண்ணு…’’

“ம்…’’

பரபரப்புடன் இயங்கினேன்.

“ஹலோ அண்ணா… கேக்குதா…’’

ஓ… இனிமையான நாதமென்று என் கணனி ஒலிபரப்பியில் தோன்றி என்னைக் குதூகலமாக்கியது.

“வாவ்… கேக்குது… நல்ல குரல்டா உனக்கு…’’

“லொள்... அண்ணா.. முதல்லை உன்னட்டை நான் மன்னிப்பு கேக்கணும்... உனக்கு நிறைய பொய் சொல்லிட்டேன்... நான் வேணுமெண்டு பொய் சொல்லலை அண்ணா...’’

அவள் குரல் தளுதளுத்தது.

“அண்ணா... நாளைக்கு நான் ‘கொஸ்பிட்ட’லுக்கு போறன்... எவ்வளவு நாள் அங்கை இருப்பன்... பேந்து எப்பிடி இருப்பன்... ஒண்ணும் தெரியாது...’’

“என்ன..?!’’

“எனக்கு ‘பிறெய்ன் கியூமர்’... மூளைப் புற்றுநோய்...’’

“நோ... பொய் சொல்லாதை...’’

கத்தினேன்.

“கத்தாதைடா... கத்துறது அனுதாபப்படுறவங்களை கண்டா எனக்கு கோபம்தான் வரும்... அப்புறம் பேசமாட்டேன்... உண்மையாதான் அண்ணா... எனக்கு புற்றுநோய்... இஞ்சை அப்பா அம்மா என்னை கவலையோட பாக்கிறதை என்னால தாங்கிக்க முடியலை... ஒவ்வொரு விசயத்துக்கும் அவங்களோடை சண்டை... பாவம் அவங்க... தங்களுக்குள்ளை அழுறாங்க... அவங்களோடை அன்பா இருக்கணும்னுதான் நினைக்கிறேன்... ஆனா... அவங்க என்னைப் பாத்து பதறுறதைப் பாத்ததும்... சாமனளை எடுத்து எறிஞ்சு உடைக்கிறது... அவங்களை திட்டுறது... இப்பிடித்தான். இஞ்சை பக்கத்தில வாற போற சனங்கள் என்னை பரிதாபமாய் பாக்கிறதை என்னாலை தாங்க முடியேலை அண்ணா. கோபம் கோபமா வருது...

'ஸ்கூ'லுக்கும் போறதை விட்டுட்டன். அடிக்கடி தலைவலிடா... தாங்க முடியாத தலைவலிடா... அதான் சிலவேளை உன்னோடையே சரியா பேச முடியுறதில்லை...''

"அது பரவாயில்லைடா..."

"ஐயோ அண்ணா... என்னை பேச விடு. தலைவலி வந்தா என்னால பேச முடியாது... உன்னோட நிறையப் பேசணும்... பரிதாபமா பாக்கிறவங்களிட்டை இருந்து தப்ப எனக்கு 'சற்'தான் உதவிச்சு... அப்பிடித்தான் உன்னோடையும் பேசினேன். ஆனா என்னவோ தெரியலை... உன்னிலை அன்பு வைச்சுட்டன்... என்ரை பேர் பிருந்தாதான் அண்ணா.. வயதைமட்டும் கூட்டி சொன்னேன். ஆனா நீ உன்னை 'லவ்'பண்ணுற சாரு அண்ணியை விட்டுட்டு என்னை 'லவ்'பண்ணுறேன்னு சொன்னப்போ... உன்ரை வாழ்க்கையை 'வேஸ்ற்'பண்ணுறேனோன்னு பயந்துட்டேன் அண்ணா... எண்டாலும் உன்னிலை இனம்புரியாத பாசம்... அதாலைதான் சுஜி எண்ட பெயரில உன்னோட கதைச்சன்... ஆனா உண்மையான வயசிலை... எண்டாலும் ஒரு அண்ணாவை ஏமாத்துறமோ எண்டு தோணிச்சு. உனக்கு கொஞ்சமாலும் என்னைப்பற்றி சொல்லவேணும்போல இருந்திச்சு... சொன்னா நீயும் என்னிலை பரிதாபப்படுவியோ எண்டு பயந்தன்... அதால என் 'பிரண்டு'க்கு 'கான்சர்' எண்டு சொன்னன் அண்ணா... நாளைக்கு 'கொஸ்பிட்டல்' போறேன்... மூளையில 'ஒப்பிறேசன்' செய்யப் போறாங்கள்... அதுக்குப் பிறகு திரும்பி வருவனோ தெரியலை அண்ணா..."

"நோ... அப்பிடிச் சொல்லாதைடா. நிச்சயமா நீ சுகமா வருவாய்டா... இந்த அண்ணாவோட கலகலன்னு கதைப்பாய்டா..."

பொங்கியெழும் கண்ணீரைத் துடைத்தவாறு கூறினேன்.

“ஐயோ… அவசரக்குடுக்கை… நான் சொல்லுறதைக் கேள்… நான் சொன்ன பொய்களுக்கு என்னை மன்னிச்சேன்னு சொல்லுறியா… இந்த தங்கச்சிக் குட்டீல கோபம் இல்லைன்னு சொல்லுறியா…?”

இப்போது நான் நிசமாகவே குலுங்கிக் குலுங்கி அழ ஆரம்பித்துவிட்டேன்.

“அண்ணா… என்ன சத்தம்?”

“ஒண்ணுமில்லைடா… நீ எப்பவும் என்ரை தங்கச்சிதான்டா. அண்ணா தங்கச்சிக்கிடைல எதுக்குடா மன்னிப்பு எண்ட பெரிய வார்த்தையள்..?”

“தாங்க்ஸ் அண்ணா…!”

“தாங்க்ஸை நீயே வைச்சிரு…”

“ஹே… ஹே… அண்ணா! உன்னட்டை ரண்டு கேக்கணும். அதுக்குதான் சாரு அண்ணிய வரச் சொன்னேன்… சாரு அண்ணி… ஹௌ ஆர் யூ? பேசமாட்டீங்களா?”

சாருவிடம் ‘மைக்’கைக் கொடுத்தேன். அவளது கண்களிலும் ஈரம்.

“ஹலோ குட்டி..”

“ஹே… ஹே… குட்டியா… அண்ணி… அண்ணாவை கவனமா பாக்கணும்… அண்ணி… உங்ககிட்ட ஒண்ணு கேக்கணும். சரியோ தப்போ தெரியலை… எனக்குள்ளை ஒரு ஆசை… உங்களுக்கு நான் மகளா வந்து பிறக்கணும்… என் அண்ணாட அன்பில வளரணும்…

உங்களுக்கு பிறக்கிற மகளுக்கு ‘பிருந்தா’ன்னு பேர் வைப்பீங்களா?”

“ஐயோ... என்னடி அலம்புறாய்... மொக்கு மொக்கு... உனக்கு ஒண்ணும் நடக்காது... நீ எங்க கலியாணவீட்டுக்கு வரத்தான் போறாய்... சும்மா விசர்க்கதை கதையாத... சுஜிக்குட்டி... எப்பவும் நீ என் மனசில இருப்பாய்டா...” என்று ‘மைக்’கை சாருவிடம் இருந்து உருவிக் கூறினேன்.

“அண்ணா... நீ இப்ப ஓம்னு சொல்லுறியா... இல்லையா...?”

அவள் குரலில் தீடீரென ஒரு கண்டிப்பு.

“ஓகே குட்டி... நீ என்ன விரும்புறியோ... அது நடக்கும்...”

சாரு முந்திக்கொண்டாள்.

“ஐ ஆம் வெரி ஹாப்பி அண்ணி... அண்ணா... ஒண்ணு ஓகே. இன்னொண்ணு இருக்கு...”

“என்ன...”

“கொஞ்சம் பொறு... ‘வெப் காம்’போடுறேன்... ஓகே பண்ணு...”

திரையில் பெட்டி வடிவில் காட்சி விரிய.. அது.. அது...?!!

“ஐயோ...”

கண்களைப் பொத்திக் கொண்டேன்.

தேகம் நடுங்கியது.

கடவுளே... கடவுளே...

என்னை அறியாமல் அரற்றினேன்.

தலை முடி இடையிடையே உதிர்ந்துபோய் ஒரு ஒட்டல் உருவம் திரையில்... அந்தப் பிஞ்சின் உருவுக்கு வியாதி கொடுத்த பரிசு!

"என்ன ஐயோ... இப்பிடிக் கத்தினா... நாயே பூனையேன்னு திட்டிடுவேன்... சொல்லிட்டேன்... என்னைப் பார்க்க பேய்மாதிரியா இருக்கு?"

"இல்லைடா. இல்லை... உன்னைப் பாக்க... உன்னைப் பாக்க என் அன்பான தங்கச்சிமாதிரித்தான்டா இருக்கு..."

"ம்... அப்பிடி சொல்லு என் அண்ணா குட்டி... அண்டைக்கு ஒரு பாட்டு பாடினியே... அத இப்ப பாடு... ஓகே... முழுக்கப் பாடணும்..."

"நோ... என்னால இப்ப முடியாதுடா... ஐயோ..."

"என்ன ஐயோ... எம்மெம்... ஹே... ஹே... மண்டையப் பிளக்குற தலையிடியோட எல்லாம் உன்னோட எவ்வளவுநாள் 'சற்' பண்ணியிருப்பன்... இப்ப ஒரு பாட்டு பாட ஏலாதா? போறத்துக்கு முதல் ஆசையாதானேடா கேக்குறன்... அந்த ஐஸ்கிறீம் சிலை பாட்டு... அப்ப ஏதோ ஒரு 'மூட்'டில பாடினாய்... ஆனால் எனக்கு பெரிய ஆச்சரியம்டா... எவளவு உண்மை அதில இருக்கு தெரியுமா? உண்மையிலயே நான் ஐஸ் கிறீம் சிலைபோல உருகிக்கொண்டு தானண்ணா இருக்கிறன்... இன்னும் கொஞ்சந்தானிருக்கு... உருகி

ஆவியாக வேண்டியதுதான்…”

“ஐயோ… திருப்பி திருப்பி அப்பிடி ஏன்டா கதைக்கிறாய்…”

“அப்ப பாடு…”

“அப்பிள் பெண்ணே நீயாரோ

ஐஸ்கிறீம் சிலையே நீயாரோ

கண்ணில் தோன்றி மறையும் கானல் நீரோ?… ”

“ஐயோ… அண்ணா… அப்பிடி இல்லை…”

“அப்போ..?”

“இப்பிடியா முந்திப் பாடினாய்..?”

“அப்போ எப்பிடி..?”

“ஐஸ்கிறீம் சிலையே நீதானோ… அப்பிடி…. அப்பிடிப் பாடு… அது எனக்காக பாடுறமாதிரி இருந்திச்சு…”

பொங்கியெழும் அழுகையை அடக்கியவாறு பாட முயற்சித்தேன். எங்கோ உதித்து இடையில் புகுந்து என்னுள் பதிந்த அந்த அன்புக்காக நான் பாடித்தானாக வேண்டும். உணர்ச்சிகளை அடக்கி பாட முயன்றவாறு சாருவை நோக்கினேன். விழிகளில் தாரை தாரையாகப் பீறிட்டெழும் நீரைத் துடைக்கும் சக்தியின்றி நின்றிருந்தாள். அவள்நிலையே இப்படியென்றால்… என்னிலை..?!

“அண்ணா..!!”

“பாடுறேன்டா… என் அன்புச் செல்லத்துக்காக பாடாமல் இருப்பேனா..?!”

“அப்பிள் பெண்ணே நீதானோ

ஐஸ்கிறீம் சிலையே நீதானோ

கண்ணில் தோன்றி மறையும் கானல் தானோ

பூவின் மகளே நீதானோ

புன்னகை மகளே நீதானோ

பாதிக் கனவில் மறையும் பறவை தானோ?

என்னை நீ பார்க்கவில்லை என்னுயிர் நொந்ததடி

பெண்ணே நீ போகும்வழியில் என்னுயிர் போகுதடி

இன்றிந்த ‘சற்’றின் நிழலில் என் மனம் வெம்புதடி

உன்னுடன் வந்துநின்று என்மனம் புலம்புதடி.

மின்னலைக் கண்டு கண்களை மூடி கண்களைத் திறந்தேன் காணவில்லை

மின்னல் ஒளியைக் கையில்கொள்ள ஐயோ ஐயோ வசதியில்லை

என்னை நோக்கிச் சிந்திய பனித்துளி எங்கே போகுது தெரியவில்லை

என்னுள் உறைந்து சிலையாய்ப் போச்சோ இதுவரை எனக்குப் புரியவில்லை...''

என்னால் தொடர்ந்து பாடமுடியவில்லை.

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமல் விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தேன்.

(பிரசுரம்: **www.yarl.com**)

❍❍❍

(நிறையும்.)